
என் இனிய
கண்ணாளா...
அகிலா கோவிந்த்
என் இனிய கண்ணாளா...
அகிலா கோவிந்த்
என் இனிய
கண்ணாளா...
அகிலா கோவிந்த்
இனிய முடிவு கொண்ட
இனிமையான நாவல்

## பதிப்புரை

'என் இனிய கண்ணாளா' ஒரு மாறுபட்ட நாவல். இந்நூலாசிரியர் அகிலா கோவிந்த், இந்நாவலை ஒரு திரைப்படம் பார்ப்பது போல் நம் கண் முன் நிறுத்துகிறார். இந்நாவலின் கதாநாயகி நிர்மலா, கதாநாயகன் கிருபாகரன், நிர்மலாவின் தந்தை குருநாதர், அவரது மகள் நீலா, கிருபாகரனின் தாய் அன்னபூரணி, கிருபாகரனின் அக்கா யாமினி, தங்கை மல்லிகா என்ற உறவுகள்...

தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு அப்படிப்பட்டவனே தனக்கு கணவனாக வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறிய நிர்மலாவின் இனிய திருமண வாழ்க்கையில் புயலாய் வீசுகிறது சேகர் என்ற பாத்திரம்..

யார் அவர்? அவரைப் பயன்படுத்தி குடும்பத்திற்குள் பிரச்சனையை ஏற்படுத்தியது யார்? என ஆர்வம் பொங்க அடுத்தடுத்த திருப்பங்களுடன் கதையை நகர்த்துகிறார் ஆசிரியர். படித்துப் பாருங்கள்... நாங்கள் சொன்னது உண்மை என்று தோன்றும்.

- பதிப்பகத்தார்

# என் இனிய கண்ணாளா...



1

'நிம்மிக் கண்ணு...' என்று தந்தை காலையில் இருந்தே கொஞ்சிக்குலவி அழைத்துக் கொண்டிருந்த போதே நிர்மலா ஓரளவு விஷயத்தை யூகித்து விட்டாள் தான். ஆனாலும் எதையும் காட்டிக் கொள்ளாமல் ஒன்றும் தெரியாதவள் போல்தான் நடமாடினாள்.

படபடவென குளித்து, பூஜை முடித்து காலை டிபன் மற்றும் மதிய உணவிற்காக தயிர் சாதம், கூட்டு என சிம்பிளாய் சமையலை முடித்து வெளிவந்தபோது ப்ளஸ்டூ படிக்கும் கட்டித் தங்கை நீலா, "அக்கா, இன்று சொஜ்ஜி, பஜ்ஜி, பாதுஷா.." எனச் சொல்லி தனது கெக்கபிக்க சிரிப்பை சிரித்தாள்.

அப்போதே நான் நினைத்தது சரிதான். விஷயம் அதுதான்... என உறுதிப்படுத்திக் கொண்டவளாய் மூக்கு நுனி சிவக்க கோபமாகி உதடுகளை இறுக்கப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் கண்ணாடி முன் நின்று, லேசான பேஸ் க்ரீம், நீளமான முடியை படிய வாரி க்ளிப்பிங் செய்துவிட்டு சின்னதான மேக்கப்புடன் அவள் கிளம்பும்போது

தயக்கமாய் தந்தை குருநாதர் அறை முன் வந்து நின்று கொண்டிருந்தார்.

"நிம்மி கண்ணு... இன்று மாலை நீ..." என தட்டுத் தடுமாறி அவர் தயக்கமாய் ஆரம்பித்து முடிப்பதற்குள் "மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் பார்க்க வருகிறார்கள். இன்று நான் அலுவலகத்திலிருந்து சீக்கிரம் வர வேண்டும். அவ்வளவுதானே" என படபடவென மூச்சு வாங்கச் சொல்லி முடித்து வைத்தாள் அவள்.

அவள் அப்படிச் சொல்லிய விதத்திலேயே அவள் கொண்டிருந்த கோபம் தந்தை குருநாதருக்குப் புரிந்தது.

அவளை சமாதானப்படுத்தும் விதமாய் மெல்ல அவள் பக்கம் வந்து அவள் தலைமுடியை பரிவாய் வருடி கனிவுப் பார்வை பார்த்தார்.

"இல்லை... கண்மணி... இது நீ நினைப்பது போல் இல்லை. ரொம்பவும் நல்ல இடம்..." என்றதும் தன் மைவிழிக் கண்களை நிமிர்த்தி நேராகவே தந்தையைப் பார்த்தாள்.

"இதுவும் அந்தத் தரகர் ஏற்பாடுதானே?" என்று அவள் குரல் உயரக் கேட்டபோது, "அதுதான் இல்லை..." என வேகமாய் தலையசைத்தார் குருநாதர். "கண்மணி, எனக்குத் தெரியாதா? அந்தக் கல்யாணத் தரகர் மூன்று முறை பணத்திற்கு ஆசைப்பட்டு உனக்குப் பிடிக்காத வரன்களை கொண்டு வந்து வாங்கிக் கட்டிக் கொண்டது... அவர் மட்டுமல்ல... நானும் நானே? அதனால் இம்முறை... என் நண்பர் மூலமாய் வந்த வரன் ஒன்றைத்தான் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். நல்ல இடம். நீ எதிர்பார்க்கும்



அத்தனை விஷயங்களும் மாப்பிள்ளை வீட்டாரிடம் உண்டு. உனக்கு கண்டிப்பாய் அவர்களைப் பிடிக்கும்.." என்று தந்தை முடித்தபோது நிர்மலாவும் முகம் மாறினாள்.

அவள் ஓரளவு கோபமும் எரிச்சலும் கொண்டதற்கு சரியான காரணமும் இருந்தது. இதற்கு முன் அந்த கல்யாண புரோக்கர் வரன் ஏற்பாடு செய்கிறேன் என்ற பெயரில் மூன்று முறை அந்த பெண் பார்க்கும் படலத்தை நடத்தினார். மூன்று முறையும் வந்த மாப்பிள்ளை வீட்டுப் பெண்மணிகள் ஐம்பது பவுன், அறுபது பவுன் என அடுக்கிக் கொண்டு போக நிர்மலா சபை என்றும் பாராது ஓரமாய் ஒடுங்கி நின்றிருந்த அந்தத் தரகரை முறைத்து வெறிக்கத்தான் செய்தாள்.

அவள் சொல்லிய இருபது பவுன் எங்கே... அவர்கள் கேட்கும் ஐம்பது பவுன் எங்கே... இது கூடவா ஒரு தரகருக்குத் தெரியாது? என அவள் தந்தையிடம் பின்னர் கேள்வி எழுப்பியபோது கிடைத்த பதில்தான் அவளைத் தூக்கி வாரிப் போடச் செய்தது.

"நானும் இதையேதான் கேட்டேன். அதற்கு தரகர் என்ன சொல்கிறார் தெரியுமா? "சார் அவங்க ஐம்பது பவுன் கேட்கலாம்.. ஆனா.. உங்க பெண்ணோட அந்தத் தங்கச் சிலை போன்ற அபார அழகில்.. அதுவெல்லாம் கானல் நீர் மாதிரி தவிடு பொடியாகிடும். இப்படியொரு மகாலக்ஷ்மி மட்டும் நம் வீட்டுக்கு வந்தாப் போதும். நகைகளே வேண்டாம்னு முடிவுக்கும் வந்திருவாங்க.." என அவர்கள் விளக்கியதை தந்தை சொல்லிய போது அந்தத் தரகரின் நினைப்பைக் கண்டு எரிச்சலாய்த்தான் உணர்ந்தாள்.

ஆனால் வந்த மூன்று வரன்களின் பெண்மணிகளும், "பொண்ணு அபார அழகுதான். ஆனாலும் இந்த அழகுக்கு அழகு சேர்க்க ஒரு ஐம்பது பவுன் போட்டால் போதும்.." என்று கோரஸ் பாடியதும், இந்தக் கலியுகத்தில் இதுபோன்ற எதிர்பார்ப்புகள் தவிர்க்க முடியாதவை என நிர்மலாவுக்கு நன்கு புரிந்தது.

மேலும் ஒவ்வொரு முறையும் ஸ்வீட், காரம், காபி என செலவும் செய்து அவள் சந்தை மாடு போல் எல்லோர் முன்னிலையிலும் நிறுத்தி கூசாமல் விலை பேசியது ரொம்பவும் கூசத்தான் செய்தாள் நிர்மலா.

சிறு வயதிலேயே தாயை இழந்து விட்டதாலும் சொந்த பந்தங்கள் தூரமாகி விலகிக் கொண்டதாலும், எல்லாவற்றையும் அவளே, அவளுக்காகப் பேச வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

பேச்சுவார்த்தை முடிவில் தான் நிராகரிக்கப்பட்டதை உணர்ந்ததும், காயம் பட்டதைப் போல் மனசு வலித்தது. அந்த மனவலிகளுக்காகவே தந்தையிடம் இன்னும் கொஞ்ச மாதங்களுக்கு இந்தப் பெண்பார்க்கும் நாடகம் வேண்டாம் என கண்டிப்பாய் சொல்லியிருந்தாள்.

ஆனால் அவள் சொன்னதையும் மீறி தந்தை ஏற்பாடு செய்கிறார் என்றால் நிச்சயம் வேறு காரணம் இருக்கும் என்பதை யூகித்தவள் சற்று அமைதியாகி தந்தையைப் பார்த்தாள். "தரகர் மூலம் இல்லாமல் உங்கள் நண்பர் மூலமாகவா?" என்றாள்.

குருநாதர் தனது அறுபது வயதுப் புன்னகையை பெரிதாக்கியவர், "ஆமாம் கண்மணி. இது எனது மில்லில் வேலை பார்க்கும் நண்பர் ஒருவர் செய்த ஏற்பாடு. மாப்பிள்ளை வீட்டார் பொன் நகை வேண்டாம். புன்னகை போதும் என கேட்கும் ரகம். எல்லாவற்றுக்கும் மேலாய் இந்த வரனில் நீ விருப்பப்பட்ட ஒன்றும் இருக்கிறது.." என குருநாதர் நிறுத்த ஆவலாகி நிமிர்ந்தாள் நிர்மலா.



"அது... நீ.. தேடிய... விரும்பிய... கூட்டுக் குடித்தனம்! மாப்பிள்ளையைச் சுற்றி, அம்மா, அப்பா, அக்கா, தங்கை, தம்பி எல்லா சொந்தங்களும் கூட்டுக் குடித்தனமாய் ஒரே வீட்டில் வசிக்கின்றார்கள்..." என்றவாறு தந்தை மாப்பிள்ளையைப் பற்றி அவர்கள் வீட்டாரைப் பற்றி விவரித்துக் கொண்டே போக... நிர்மலாவின் முகத்தில் பெரும் திருப்தி அலை ஒன்று பரவியது.

சிறு வயதிலேயே தாயைப் பறிகொடுத்து அவளும் தங்கையும் தந்தையின் அரவணைப்பிலேயே வளர்ந்ததாலே.. தனக்கு கிடைக்காமல் போய்விட்ட தாய்ப் பாசத்தை ஒரு பெரும் குறையாகவே தன் உள்ளுக்குள் கருதினாள் நிர்மலா. அதனாலே தனக்கு கூட்டுக் குடித்தனமான குடும்பத்தில் மணமகளாகும் வாய்ப்புக் கிடைத்தால் மிக மிக சந்தோஷம் என விளக்கியிருந்தாள்.

அவள் நினைத்தது போலவே தந்தை சொல்லியதும் அவளையறியாமல் ஒருவகை உவகை மனதுள் பிறக்கத்தான் செய்தது. .அதைவிட எப்படியும் இந்த சம்பந்தம் நல்ல படியாக முடிந்து விடும் என சந்தோஷ பட்சி ஒன்று அசரீரி போல் தோன்றவும் ஆரம்பித்து விட்டது.

இருந்தாலும் தன் பரபரப்பை அடக்கிக் கொண்டவளாய் தந்தையைப் பார்த்தாள். "நம்மைப் பற்றிய எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டீர்கள்தானே?" என்றாள்.

அதற்கும் குருநாதர் பலமாய் தலையசைத்தார். "ம்ம்... சொல்லி விட்டேன்மா... நீ கல்யாணத்திற்குப் பின் வேலைக்குப் போவதும் போகாததும் கூட உன் இஷ்டம்தான் என இப்போதே சொல்லிவிட்டார்கள்... அப்புறம் மாப்பிள்ளை தனியார் நிறுவனம் ஒன்றில்தான் அதிகாரியாய் பணியாற்றுகிறாராம். நல்ல சம்பளமாம். அவர் பெயர் கூட... ஏதோ.. ம்ம்... ஞாபகம் வந்துவிட்டது. கிருபாகரன்... அதுதான் அவரது பெயர்.." என்று உரையை முடித்தார் தந்தை குருநாதர்.

'கி.. ரு.. பா.. க... ர...ன்..' என தனக்குள் மெலிதாய் உச்சரித்துப் பார்த்தாள் நிர்மலா. அப்படி உச்சரிக்கும் போதே அவள் கன்னக்கதுப்புகள் சூடேற முகம் சிவக்கவும் ஆரம்பித்தது.

அப்படி பெயராலே அவளை சிவக்க வைத்தவன் மறுநாள் நிஜமாகவே நேரில் தோன்றி சிவக்க வைக்கப் போகிறான் என்பதை அப்போது அவள் கொஞ்சமும் உணரவில்லை.

## 2

ஒரு வழியாக அப்பாவிடம் தன் ஒப்புதலை சொல்ல மாலை சீக்கிரம் வருவதாக உறுதி கூறிவிட்டு கிளம்பினாள் நிர்மலா.

ஹேண்ட் பேக்கை தோளில் மாட்டிக் கொண்டு வெளிவருகையில் தங்கை நீலாவும் புத்தகச் சுமையுடன் தயாராயிருந்தாள். இருவரும் தந்தையிடம் விடைபெற்று விட்டு பஸ் ஸ்டாப் நோக்கி நடந்தனர்.



தங்கை நீலா வழக்கம் போல் சளசளக்க ஆரம்பித்தாள். "அக்கா.. நீயே சொல்லு. இந்த சொஜ்ஜி பஜ்ஜி காபி என பெண் பார்க்கும் படலம் எல்லாம் தேவைதானா? உலகம் இன்டர்நெட், வெப் என எவ்வளவோ வேகமாய் வளர்ந்து விட்டது. பேசாமல் நீயே... ஒரு மாப்பிள்ளை பையனை எங்காவது பார்த்து பிடித்து தேர்ந்தெடுப்பாயா?.. அதை விட்டு விட்டு இன்னமும் ஷோகேஸ் பொம்மை போல் பட்டுச் சேலையை சுற்றிக் கொண்டு, காபி தம்ளருடன் போய் நின்று எத்தனை நாள்தான் போஸ் கொடுப்பாய்... உனக்கு இது கொஞ்சமும் போரடிக்கவில்லையா?"

நீலா தனது வட்டமுகத்தை மேலும் கீழும் ஆட்டியபடி ஆவலுடன் கேட்க, சிரிக்கத்தான் செய்தாள் நிர்மலா.

"என்னக்கா சிரிக்கிறாய்?" என்றாள் நீலாவும் விடாமல்.

"அதெல்லாம் முடியாது. நீலா. நீ உலகம் தெரியாத பெண்!"

அவள் சொல்ல இம்முறை நீலா கடகடவென தனது கெக்க பிக்க சிரிப்பைச் சிரித்தாள்.

"உலகம் தெரியாத பெண் நான் இல்லை... நீதான்" என்றாள்.

"என்னை நானா?"

நிர்மலா வியக்க... அசால்டாய் கைகளை தட்டினாள் நீலா.

''பின் வேறு யாராம்? எப்போது எந்த இளம் வட்... ஆளைப் பார்த்தாலும் மருண்ட மான் போல் தலையை... குனிய வைத்து கொள்கிறாய்? அந்த உன் அழகான மைவிழ்... கண்கள் கூட பார்க்கக் கூடாததை பார்த்து விட்டது போ... தரை தாழ்ந்தி இல்லாத முத்து மணிகளை தரையில் தே... ஆரம்பித்து விடுகின்றது. அதையும் மீறி யாராவது உன்னிடம் மன்மத வீச்சுவீசினால்.., சட்டென நிமிர்ந்து ஒரு முறைப்புப் பார்வையுடன் அவர்களை சுட்டெரித்து விடுகிறாய். இதெல்லாம் இந்தக் கம்ப்யூட்டர் யுகத்தில் சரியான பத்தாம்பசலித்தனம்தானே?''

நீலா தனது பெரிய லெக்சரை முடிக்க வியப்புடன்பார்த்தாள் போனாள் நிர்மலா. ''ஆனாலும்.. நீலா.. உனக்கு மூக்குக் கீழ் ஒன்று இருக்கிறதே.. அது.. அதிகப்படியான நீளம்தான்'' என்றாள் சிரிப்புடன்.

நீலா கொஞ்சமும் அசரவில்லை.

''அக்கா, எத்தனை சினிமாக்களில், டி.வி.யில் எத்தனை நாடகங்களில் பார்த்திருக்கிறாய்? அதில் எல்லாம் சொல்லாததையா நான் சொல்லி விட்டேன்..? ஆண்டவன் நமக்கு அற்புத வெகுமதி போல் கொடுத்திருக்கும் கண்களை வைத்து ஒரு சுழற்று சுழற்றினால், போதும்.. எத்தனையோ ரோமியோக்கள் நம் காலடியில் விழுவர். அவர்களில் ஒருவரை பொறுக்கியெடுத்து மாப்பிள்ளை யாக்கினால் போதும்... பிரச்சினை தீர்ந்தது..'' என சொல்லிக் கொண்டே வந்தவள் பார்வையை சட்டென கூர்மையாக்கியபடி, ''இப்போது கூட பார்...! அந்த வஸ்துடர ஓரமாய் மாடியில் நின்று ஒரு மன்மத ரோமியோ.. உன் கண்டக் கண் பார்வைக்காக.. ஏங்கிக் கொண்டு பார்.. பார்.. அக்கா பார்..'' என கைகளைக் காட்டினாள் நீலா.



நிர்மலாவும் தற்செயலாய் தலைவெட்டி பார்க்க அங்கு ஒரு அறுபது வயது மனிதர் ஒருவர் டீ ஷர்ட்டுடன் ஜீன்ஸும் போட்டுக் கொண்டு நீலா சொல்வது போல் மன்மத பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

குபுக்கென நீலா குறும்பாய்ச் சிரித்ததும்தான் அவள் செய்யும் கேலி நிர்மலாவுக்குப் புரிந்தது.

''ஹேய்.. குறும்புக்காரி..'' என செல்லமாய் அவள் தலையை ஒரு தட்டு தட்டி தானும் சிரித்தாள் நிர்மலா.

அப்படி அவர்கள் பேசியபடி நடந்ததில் சீக்கிரமே பஸ் ஸ்டாப்பும் வந்துவிட்டது. பஸ் ஸ்டாப்பில் அவளது பள்ளித் தோழிகள் சில பேர் நிற்பதைப் பார்த்ததும் நீலா பரபரப்பாய்த்தான் ஆனாள்.

அவளது நிலையறிந்தவளாய் நிர்மலா அவளுக்கு புன்னகையுடன் விடை கொடுத்து தனது பேருந்துக்கான மறுபுற நிறுத்தத்திற்கு வந்தாள்.

மணியைப் பார்த்தாள். எட்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் அலுவலகத்திற்கான பஸ் வரும் நேரம்தான். பொக்கேக்கள், மலர்ச் செண்டுகள் தயாரிக்கும் உலர் பூ ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் உற்பத்திப் பிரிவில் வேலை பார்த்து வந்தாள்.

சரியாய் காலேஜ் டிகிரியை அவள் முடிக்கும் நேரமும் தமிழாசிரியராய் பணியாற்றிய அவளது தந்தை ஓய்வு பெறும் நேரமும் சரியாயிருந்தது. அதனாலே டிகிரி முடித்த

கையோடு டைபலை எடுத்துக் கொண்டு கம்பெனி கம்பெனியாய் வேலை கேட்டு ஏறி இறங்க ஆரம்பித்து விட்டாள்.

தந்தை குருநாதர் கூட "நான் ஓய்வு பெற்று விட்டால் என்ன? மாதம் பத்தாயிரம் ரூபாய் பென்ஷன் வருமே.. அது போதாதா? நீ ஏனம்மா வேலை தேடி கஷ்டப்பட வேண்டும்..?" என தடுத்தும் பார்த்தார்.

ஆனால் நிர்மலாதான் பிடிவாதமாய் இருந்தாள். "உங்களை உட்கார வைத்து நான் சாப்பாடு போட வேண்டும். அது என் நெடுநாள் ஆசை.." எனச் சொல்லி இரண்டு மாதங்கள் அலைந்து திரிந்து இந்த உலர் பூ கம்பெனியின் சூப்பர்வைஸர் வேலை ஒன்றைத் தேடிக் கொண்டாள்.

அவளது தாவரவியல் படிப்புக்கு ஏற்ற வேலை என்பதால் அவளுக்கு வேலை மிகவும் பிடித்துப் போனது. வெளிநாட்டு ஏற்றுமதி நிறுவனம் என்பதால் எடுத்த எடுப்பிலேயே சம்பளமாய் பத்தாயிரம் ரூபாயைத் தர.. அவளுக்கு ஒரே இன்ப அதிர்ச்சியாய்த்தான் இருந்தது.

அப்படி இரண்டு வருடம் வேலை பார்த்ததில் கணிசமான பணத்தை அவர்களால் சேமிக்கவும் முடிந்தது. அம்மாவின் நகைகளில் இருபது பவுனை எடுத்துக் கொண்டு மீதி நகைகளை தங்கையின் எதிர்காலத்திற்காக வைத்ததோடு மட்டுமில்லாமல் தங்கையின் கல்யாணச் செலவுக்காக வங்கியில் அவள் பெயரில் சேமிப்பு பத்திரங்களை ஏற்பாடு விட்டுத்தான் தனக்கு வரன் பார்க்க சம்மதம் சொல்லியிருந்தாள் நிர்மலா.



அவளது தெளிவான சிந்தனையையும், சில விஷயங்களில் அவள் எடுக்கும் உறுதியான நிலையையும் கண்டு குருநாதரே எத்தனையோ முறை வியந்திருக்கிறார். "நல்ல குணவதியம்மா.. நீ உனக்கு எதிர் காலத்தில் மிகச் சிறந்த வாழ்க்கையொன்று கண்டிப்பாய் அமையும்" என வாழ்த்தும் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் வரன் தேடும் விஷயத்தில் நிர்மலா முக்கியமாய் இன்னொரு கொள்கையும் வைத்திருந்தாள். அதாவது தனது தகுதியைப் போல், தனது தகுதிக்கேற்ப 'மிடில் கிளாஸ்' வரனைத் தேடினால் போதும் என்று.

நிர்மலா இப்படி பிடிவாதம் பிடித்ததற்கு காரணமும் இருந்தது. அவளது இருபத்தைந்து பளிரிடும் தங்க நிற அழகைப் பார்த்து... தரகர் மூலம் கேள்விப்பட்டு கார், பங்களா என சகல வசதிகளுடன் வாழும் பணக்கார இடங்கள் சம்பந்தம் பேச ஓடி வரத்தான் செய்தன.

அதுபோன்ற இடங்கள் இருப்பதாய்ச் சொல்லி வரும் கல்யாணத் தரகர்களும் பலப்பல விஷயங்களைப் பேசி ஆசை காட்டத்தான் செய்தனர். 'உங்கள் பெண்ணின் அழகிற்கு பெரும் மகாராணி போன்ற சொகுசான வாழ்க்கை, கோடீஸ்வர குடும்பம். உங்கள் பெண் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!' என்றெல்லாம் பல்லவி பாடியபோது ஒரே வார்த்தையில் மறுத்தாள் நிர்மலா.

பெண்ணின் அழகு என்பது நிரந்தரமானது அல்ல. வயதின் முதிர்வுக்கு ஏற்ப மறையக் கூடியது. அழியக் கூடியது. ஒரு பெண்ணின் சூழ்நிலையை, மனதை பார்க்காமல் பகட்டான வெளிப்புறத்திற்கு மதிப்பு கொடுக்க

நினைப்பவர்கள் எப்படி நல்ல மனது உடையவர்களாய் அவளால் மதிப்பிட முடியும்?

ஆகையால் அதுபோன்ற கோடீஸ்வர சம்பந்தங்கள் கதவைத் தட்டும் போது கொஞ்சமும் யோசிக்காமல் நிராகரித்ததோடு மட்டுமில்லாமல் தந்தையிடம் அதற்காகவே நடுத்தர குடும்பத்து மாப்பிள்ளை ஒருவரை தனக்கு வரனாகத் தேர்ந்தெடுக்கும்படி கண்டிஷனாகவும் சேர்த்துக் கொண்டாள்.

அதுமுதல் அவள் செய்யும் அழகு ஒப்பனைகளையும் அறவே குறைத்துக் கொண்டாள். லேசான பவுடர், பேஸ்க்ரீம் என அலுவலகத்திற்கான சின்ன மேக்கப்புடன் ஒப்பனையை நிறுத்திக் கொள்வாள். அழகை வைத்து மதிப்பீடு செய்பவர்கள் மீது தோன்றிய வெறுப்பால், தன்னை அழகு, ரொம்பவும் அபார அபரித அழகு என்று புகழ்பவர்கள் மீதும் கூட ஒருவித வெறுப்பு அவளை யறியாமல் படர ஆரம்பித்தது.

அவளது இந்த அழகு பிடிக்காத நிலையை முதலில் கண்டுபிடித்தவள் தங்கை நீலாதான். முன்பு ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை அவளை கண்ணாடி முன் உட்கார வைத்து அவளது முன்புற முடிகளை முன்னால் இழுத்து ஸ்ப்ரிங் கட் கொடுத்து நெற்றியில் புரளச் செய்து நிர்மலாவுக்கு மேலும் அழகு கூட்டியிருந்தாள் அவள்.

ஆனாலும் மறுவாரமே நிர்மலா அதை மாற்றி முன்பு போல் நீள வகிடு எடுத்து பின்னல் செய்ய... ஐயோ! ஐயோ! என பதறித்தான் போனாள் அவள். ''என்னக்கா.. நீ? உன்னை இளவரசி.. தேவதை ரேஞ்சுக்கு உயர்த்தி



அழகுப்படுத்தப் பார்த்தால் நீ சோடா புட்டி கண்ணாடியை மாட்டியது போல் நடு வகிடெடுத்து பழைய பஞ்சாங்கமாய் மாறி விட்டாய்?'' என சண்டையிடத்தான் செய்தாள்.

''ச்சு.. சும்மா இரு.. நீலா! அதெல்லாம் உனக்குத் தெரியாது.. சின்னப் பெண்.. நீ!'' என அதட்டி உருட்டத் தான் செய்வாள். அதற்காக அவளிடம் அழகு பிடிக்காமல் போனதற்கான உண்மைக் காரணத்தை சொல்ல விரும்பியதும் இல்லை.

அப்படி அவளது அழகு பிடிக்காத கொள்கைக்கு ஏற்ப, 'பெண்ணிற்கு அழகு தேவையில்லை' என்ற வாசகத் துடன் மணமகள் தேடி கிருபாகரன் வெளியிட்டிருந்த விளம்பரத்தை மறுநாள் கண்டாள். 'அடடா நாம் தேடிய இடம் இதுதானா?' என கிறங்கத்தான் செய்தாள்.



3

அன்று அதே சிந்தனையுடன் பஸ்ஸில் ஏறி தன் அலுவலகத்தை அடைந்தாள். தனது இருக்கையில் போய் அமர்ந்ததும் வீட்டு நினைவுகள் எல்லாம் ஒதுக்கிவிட்டு வேலையில் கவனம் செலுத்தினாள்.

அவள் அந்த உலர் பூ பிரிவின் செக்ஷன் சூப்பர்வைஸர் என்பதால் உலர் பூ உற்பத்தியின் எண்ணிக்கை, பாக்கிங் செய்யப்பட வேண்டிய பூக்களின் தொகைகள் என எல்லாவற்றையும் பணியாளர்களை வேகப்படுத்தி வேலை வாங்க வேண்டிய பொறுப்பு அவளுக்கு.

இருந்தாலும் தினக் கூலிகள் தானே என தன் கீழ் வேலை பார்க்கும் பணியாளர்களை பார்க்காமல், அவர்களை விரட்டி வேலை வாங்காமல் இன்முகமாகவே பேசி செயல்படுவாள் நிர்மலா.

அவளது புன்னகை முகமும் அவள் வேலையைச் சொல்லும் பாங்குமே பணியாளர்களுக்குப் பிடித்துப் போய் அவள் சொல்லும் பணியை மின்னல் வேகத்தில் செய்து முடிக்க ஆரம்பிப்பர்.

இதையெல்லாம் கண் கூடாய் பார்க்கும் கம்பெனி மேனேஜரும் தன் பங்கிற்கு நிர்மலாவை, "நித்யா, யூ.. ஆர். கிரேட்! நீ வேலை வாங்கும் விதம் மிகவும் பாராட்டுக்குரியது.." என வானளாவப் புகழத்தான் செய்தார்.

அன்றும் இன்முகமாகவே வேலையில் ஆழ்ந்தவள் நேரம் போவது தெரியாமல் தான் மூழ்கி விட்டாள், மதிய உணவு இடைவேளையின் போதுதான் அப்பா சொன்ன வரன் விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. மேனேஜரிடம் சென்று மாலை ஒரு மணி நேர விடுப்பு பர்மிஷன் சொல்லி விட்டு வந்தாள்.

சொன்னபடியே மணி மூன்றை நெருங்கியதும் அலுவலகத்திலிருந்து கிளம்பி விட்டாள். அவள் திரும்பவும் வீட்டிற்கு வந்தபோது மணி மூன்று ஐம்பது. அப்பா பக்கத்து ஸ்வீட் ஸ்டால் ஒன்றில் இனிப்பு கார வகைகளை, தயாராய் வாங்கி வைத்திருந்தார்.

"சரியாக ஐந்து மணிக்கு வருவதாகச் சொன்னார்கள் அம்மா.." என்றதும் நிர்மலா வேகமாய்த் தான்



செயல்பட்டாள். அவளது வீட்டின் முன்புற சிறிய அறையை ஒழுங்குபடுத்தி, சோபாக்கள், நாற்காலிகளை சரி செய்து, ஆங்காங்கே சுவர்களில் படிந்திருந்த ஒட்டடை கறைகளை துடைத்தெடுத்தாள்.

நாலரை மணிக்கு வீடு திரும்பிய தங்கை நீலா வரும்போதே பக்கத்து பால் பூத்தில் பாலும் வாங்கி வந்துவிட எல்லா வேலைகளும் சுளுவாயிற்று.

சரியாக ஐந்து மணிக்கு வாடகைக் கார் ஒன்றில் மாப்பிள்ளை வீட்டார் வந்து இறங்கி விட்டனர். குருநாதர் இன்முகமாய் வரவேற்று வீட்டினுள் அவர்களை உட்கார வைத்தார். நீலா ஸ்வீட், காரம், காபி என ஒவ்வொன்றாய் பரிமாறினாள்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் பட்டுச் சேலையில் தங்கச் சிலையாய் அவர்கள் முன் தோன்றினாள் நிர்மலா. மாப்பிள்ளை வீட்டிலிருந்து மாப்பிள்ளையின் தாயார், அக்கா, தங்கை, அண்ணி, பேரக் குழந்தையான வாண்டுகள் என ஒரு சிறு பட்டாளமே வந்திருந்தது.

நிர்மலா முதலில் தன்னை உற்று உற்று நோக்கிய அவர்களைக் கண்டு மிரண்டாலும் அடுத்த ஐந்து நிமிடத்தில் அவர்கள் பேச ஆரம்பித்ததும் சகஜமாகி விட்டாள்.

எல்லோருமே அவளிடம் ஆர்வமாய் ஒருவித உரிமையுடனே பேச ஆரம்பித்து விட்டனர். அதிலும் மாப்பிள்ளையின் தங்கை மல்லிகா கிட்டத்தட்ட தங்கை நீலாவைப் போலவே சுட்டித்தனமாய் இருந்தாள். பேச ஆரம்பித்த கொஞ்ச நேரத்திலேயே பக்கத்தில் வந்து

உரிமையுடன் கைகளைக் கட்டிக் கொண்டாள். அவள்தான் அப்படியென்றால் மாப்பிள்ளையின் தாயார் அன்னபூரணி ஒரு தாயின் பரிவோடு அவள் பக்கம் வந்து அன்பாய் அவள் தலை முடியை கோதி விட்டபோது இனிமையாய் உணர்ந்தாள் நிர்மலா.

"சிறு வயதிலேயே தாயை இழந்து விட்ட உன்னை என் வீட்டுப் பெண் போலவே பார்த்துக் கொள்வேன் கண்ணு.." என்று அன்னபூரணி சொன்னபோது சிலிர்க்கத்தான் செய்தாள்.

வந்த சிறிது நேரத்திலேயே மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் எல்லோரும் கலகலவென எல்லோரிடமும் சகஜமாய் சிரித்துப் பேசி ரொம்ப நாள் பழகியது போன்ற நிலையை ஏற்படுத்தி விட்டனர். குருநாதர் தயக்கமாய் ''பெண்ணை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?' என வினவ, ''என்ன பிடித்திருக்கிறதா? வா...! இப்போதே எங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்ல நாங்கள் ரெடி..!'' என்றாள் வாண்டுத் தங்கை மல்லிகா முந்திரிக் கொட்டையாய்.

பெரும் சிரிப்பலை பரவி அங்கு அமைதியாகியது. குருநாதருக்கு பெரும் திருப்தி. நிர்மலாவின் நிலை அறிய ஆவலாய் அவளை உற்றுப் பார்த்தவர், நிர்மலா தலையசைத்ததைப் பார்த்ததும் பெரும் மகிழ்ச்சியும் கொண்டார்.

தங்கை நீலாவும், விடாது நிர்மலாவின் பக்கம் வந்து கைகளை அழுத்தினாள். ''என்ன.. ஓகேதானே?'' என்றாள். நிர்மலா புன்னகையுடன் தலையசைத்து பதிலுக்கு அவள் நிலையைக் கேட்டதும் ''எனக்கு டபுள் ஓகே!'' என்றாள்.



அதுவரை ரொம்பவும் பேசாதிருந்த மாப்பிள்ளையின் அக்கா யாமினி அவள் பக்கம் வந்து துபாயில் இருக்கும் தனது கணவர் பற்றி அவரது வேலை பற்றியெல்லாம் விவரிக்க ஆரம்பித்தாள்.

அப்போதுதான் நிர்மலாவுக்கு சட்டென ஞாபகம் வந்தது. மாப்பிள்ளையின் பெயர் கிருபாகரன் என்று மட்டும்தான் சொன்னார். வேறு எந்தத் தகவலும் தந்தை சொல்ல வில்லையே.. என்பதை உணர்ந்தாள்.

யாமினி அப்படி இப்படி தன் சொந்தக் கதைகளை பேசிக் கொண்டிருந்தாள். அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டவள் போல் கொஞ்ச நிமிடங்களில் கிருபாகரனைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டாள்.

கிருபாகரன் மென்பொருள் கம்பெனி ஒன்றில் அதிகாரியாக பணியாற்றுவதாகக் கூறிய யாமினி, கல்யாண விஷயத்தில் அவன் நிறைய கொள்கைகள் வைத்திருந்த தாகவும், குறிப்பிட.. நிர்மலாவுக்கு ஆச்சரியமாய்ப் போனது. தன்னைப் போலவே கிருபாகரனும் வரன் தேடுவதில் கட்டளைகள் வைத்திருந்தானா?

யாமினி விவரித்தாள். கிருபாகரனுக்கு எத்தனையோ பணக்கார சம்பந்தங்கள் வலிய வந்தும் நிராகரித்து விட்டானாம். ஏழையாய் இருந்தாலும், சரி, நல்ல குணவதி யாய் இருக்க வேண்டுமாம். ஜாதி மதம் தடையில்லையாம். முக்கியமாய் பெண்ணிற்கு அழகும் தேவையில்லையாம்.

யாமினி அடுக்கிக் கொண்டே போக வாய் பிளக்கும் அதிசயத்துடன் தான் கேட்டு திகைத்துக் கொண்டிருந்தாள்

நிர்மலா. அவளால் யாமினி சொல்வதை கொஞ்சமும் நம்ப முடியவில்லைதான். இந்த வியாபார யுகத்தில் இப்படி யாராவது இருப்பார்களா? இருக்கத்தான் முடியுமா? அல்லது இந்த யாமினி கிருபாகரன் பற்றி தான் உயர்வாக எண்ணுவதற்கு இப்படியெல்லாம் ரீல் விடுகிறாளா? என்றெல்லாம் கூட நிர்மலாவுக்கு நினைப்பு ஓடியது.

புருவம் உயர யோசிக்கும் அவளது நிலையைக் கண்ட யாமினி அவள் எண்ணத்தையும் கண்டுபிடித்தவள் போல், "சொன்னால்.. உனக்குக் கூட ஆச்சரியமாய் நம்புவதற்கு கஷ்டமாய்த்தான் இருக்கும்... ஆனால் பார்... போன வார தின பேப்பர் ஒன்றில் கிருபாகரன் மணமேடை பகுதியில் கொடுத்த மணமகள் விளம்பரம்.." என்றபடி யாமினி அதுவரை தன் பையில் சுருட்டி வைத்திருந்த பேப்பர் ஒன்றை விரித்துக் காட்டினாள்.

ஆவலாய் அதை வாங்கி கண்கள் விரியப் பார்த்தாள் நிர்மலா.

யாமினி சொன்னது உண்மைதான். மணமகள் தேவை பகுதியில் அவள் சொன்ன விஷயங்களை குறிப்புகளாகக் கொண்டு விளம்பரம் வந்திருந்தது. கீழே கிருபாகரனின் பெயரும் அவனது முகவரியும் வெளியிடப்பட்டிருந்தது.

பார்த்த நிர்மலா நிஜமாகவே பூரிக்கத்தான் செய்தாள். பரந்த மனசு உள்ளவர்களால்தான் இதுபோன்று செய்ய முடியும். குணத்தை மட்டும் பார்த்து ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் ஏற்படும். அப்படிப் பார்த்தால் இப்படிப்பட்ட மனநிலை உள்ள கிருபாகரன் நிச்சயம் பெரும் பரோபகாரியாய் அடுத்தவர்களுக்காகப் பரிதாபப்படும் சிறந்த குணவாளனாகத்தான் இருக்க முடியும் எனவும் நினைத்தாள்.



அடுத்து யாமினி சொன்ன விஷயமும் அவளைச் சிந்திக்க வைத்தது. இப்படி கிருபாகரன் பெரிய மனதுடன் வெளியிட்டிருந்தாலும், விளம்பரங்களைக் கண்டு வீடு தேடி வந்த வரன்கள் எல்லாம், 'இப்படி விளம்பரம் கொடுத்திருக்கிறீர்களே? மாப்பிள்ளைக்கு எதுவும் குறைபாடா?' எனக் கேட்டு நச்சரித்து விட்டனராம். அவர்களுக்குப் புரிய வைப்பதற்குள் போதும் போதும் என்றாயிற்றாம்.

அதனாலேயே கிருபாகரன் இனி பேப்பர் விளம்பரம் மூலம் வரன் தேட வேண்டாம். நேரிடையாய் நண்பர்கள், உறவினர்கள் என விசாரித்து தனது கட்டளைகளுக்கு ஏற்ப பெண் தேடும்படி கூறினதாயும் யாமினி சொன்னாள்.

அப்படி.. அவன் சொன்னதால்தான் தந்தை குருநாதரின் நண்பர் ஒருவர் நிர்மலாவைப் பற்றிச் சொன்னதும் விசாரித்து வீடு தேடி வந்து விட்டார்களாம்.

மேலும் கிருபாகரனுக்காக அவர்கள் முதன் முதலாய் பார்க்க வந்த வரன் நிர்மலாதானாம். முதல் வரனே பிடித்துப் போனதில் அவர்களுக்கு ரெம்பவும் சந்தோஷமாம்!

"என்ன.. சம்பந்தம் பிடித்துப் போய்விட்டது அல்லவா..? இனி முகூர்த்த நாள் பார்க்க வேண்டியதுதான்! மணப் பெண்ணின் சுறுசுறுப்பான ஆர்வத்தையும் சிரிப்பையும் பார்த்தால்.. இனி ரொம்ப நாட்கள் பொறுத்திருக்க முடியாது போல் அல்லவா தெரிகிறது?" என யாமினி பெரிதாய் கூறி நிர்மலாவை அழகாக வெட்கப்பட வைத்து எல்லோரையும் வெகுவாய் சிரிக்கவும் வைத்தாள்.



## 4

அன்று அந்த பெண் பார்க்கும் படலம் இனிமையாய் நடைபெற்று முடிந்தது என்றுதான் சொல்ல வேண்டும். எல்லோருக்கும் ஒருவரையொருவர் பிடித்துப் போயிற்று.

நல்ல குணவதியான பெண். எங்கள் வீட்டிற்கு ஏற்றவள் என அவர்கள் அபிப்பிராயப்பட.. நல்ல குடும்பத்து மனிதர்கள். நாம் விருப்பப்பட்ட மாதிரியே அன்பாய் பாசமாய் இருக்கிறார்கள் என நிர்மலா பூரித்து மனமகிழ்ந்தாள்.

''இதுவே கல்யாண நிச்சயதார்த்தம் போன்றுதான். இனி நல்ல முகூர்த்த நாள் பார்த்து விட வேண்டியதுதான்!'' என மாப்பிள்ளையின் தாயார் அன்னபூரணி கூறியபோது முகம் சிவந்து தான் போனாள் நிர்மலா.

ஆனால் தந்தை குருநாதருக்கு வேறொரு எண்ணம் தோன்றியது போலும். ''இருந்தாலும் அம்மா, மாப்பிள்ளையும் ஒருமுறை நேருக்கு நேர் நிர்மலாவைச் சந்தித்துப் பேசி விட்டால்.. அதுவும் நல்லதுதானே?'' என இழுத்தார்.

நிர்மலாவுக்கும் தந்தை சொன்னது சரியெனத்தான் பட்டது. மாப்பிள்ளையை கிருபாகரனைப் பார்க்கும் ஆவல் அவளுக்கும் உள்ளுக்குள் எழுந்து விட்டதுதான்.

பொதுவாக கல்லூரி நாட்களில் தோழிகள் தங்கள் எதிர்கால கனவுகள் பற்றி பேசும்போது தங்களுக்கு வரப் போகும் கணவன்மார்கள்... குறிப்பிட்ட திரைப்பட நடிகர் போல இருக்க வேண்டும்.. ஹேண்ட்சம் பர்சனாலிட்டியாக கம்பீரமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் வர்ணித்து விளிப்பது உண்டு.



அப்போதெல்லாம் நிர்மலா, ''புற அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. மன அழகைப் பார்க்க வேண்டும். நல்ல மனசுக்காரனாய் இருக்கிறாரா என்று அறிய வேண்டும்'' என்றெல்லாம் லெக்சர் அடித்தாள்.

''அடடா! அப்படியானால் உனக்கு வருகிற மாப்பிள்ளை தங்கமனசுக்காரனாய் இருக்க வேண்டும். அப்படித்தானே..? உ... யாராவது.. போய் ஒரு தங்க மனசுக்காரனை தேடிப் பிடித்து இந்த நிர்மலாவுக்கு கட்டி வைங்களேன்டீ...'' என நிர்மலாவை கேலி செய்யவும் ஆரம்பித்து விட்டனர்.

ஆனால் நிர்மலா எப்போதும் தான் கொண்டிருந்த கொள்கையில் உறுதியாய்த்தான் இருந்தாள். அதனாலே டிப்டாப் ஹேண்ட்ஸம் பர்ஸனாலிட்டி என்றெல்லாம் யாரும் சொல்லி வாய் பிளந்தாலும், அவள் அலட்டிக் கொள்வதே இல்லை. இப்போது கிருபாகரன் விஷயத்தில் அவன் கொள்கைகளை எல்லாம் அறிந்ததும் அவனைப் பார்க்க வேண்டும், அவன் எப்படி இருப்பான் என்ற ஆர்வம் அவளையறியாமல் உண்டாயிற்று..

மேலும் தந்தை மாப்பிள்ளை வீட்டாரிடம் கிருபாகரன் நிர்மலாவைச் சந்தித்துப் பேசுவது பற்றிக் கேட்டபோது, அது விஷயமாய் கிருபாகரனிடமே கேட்டு மறுவாரம் தெரிவிப்பதாய் சொல்லிவிட்டுச் சென்றார்கள். நிர்மலாவும் அத்தோடு அவ்விஷயத்தை மறந்து விட்டாள்.

ஆனால் மறுநாள் அவள் வேலை முடிந்து திரும்புகையில் அந்த அதிசயம் நடந்தது. வழக்கம் போல் அலுவலகத்திலிருந்து பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்து பஸ்ஸுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

அப்போது பக்கத்தில் யாரோ தன்னை 'ஹலோ' என கூப்பிடும் அரவம் கேட்க சட்டென திரும்பிப் பார்த்தாள்.

முப்பது வயது மிக்க ஒருவன் உதடுகளை விரித்த வசீகரப் புன்னகையுடன் நின்றபடி,

''உங்களிடம் ஓரிரு நிமிடம் பேச வேண்டும் பேசலாமா?'' என்றபோது புருவம் உயர எதற்காக? என்பது போல் பார்த்தாள் நிர்மலா.

''நான்தான் கிருபாகரன்...'' என அவன் அழுத்தந் திருத்தமாய் அடுத்த வரிகளை உச்சரித்ததும் அவள் ஒரு கணம் ஆடித்தான் போனாள்.

கிருபாகரனை அப்படி அந்த சமயத்தில் அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

ஒரு கணம் தன்னையே உற்றுப் பார்த்தபடி குறும்புப் பார்வையுடன் இருக்கும் அவளிடம் என்ன பேசுவது எப்படி நடந்து கொள்வது என்று புரியாமல் குழம்பித்தான் போனாள்.

ஆனால் அவள் தயக்கத்தை புரிந்து கொண்ட கிருபாகரன் அதை எளிதாக்குவதுபோல், ''ஒரு நல்ல நண்பர்களைப் போல் சிறிது நேரம் பேசலாமே..! உங்களுக்கு எவ்வித சங்கடமும் ஏற்படாது!'' என்றபோது தன்னையறியாமல் தலையசைப்புடன் புன்னகைக்கத்தான் செய்தாள்.

எதிரே இருந்த ரெஸ்ட்டாரண்ட் ஒன்றைக் காட்டினான் கிருபாகரன். புன்னகையுடன் நடக்க ஆரம்பித்தாள் அவள்.



அவளிடம் வெகு இயல்பாய் ரொம்ப நாள் பழகியது போல் கிருபாகரன் பேச ஆரம்பித்து விட்டான். அவள் வேலை பார்க்கும் அலுவலகம் பற்றி... அங்கு நடைபெறும் பணிகள் பற்றியெல்லாம் ஆர்வமாய் கேட்க.. கடகடவென விவரிக்க ஆரம்பித்து விட்டாள் நிர்மலா.

ரெஸ்ட்டாரண்ட்டில் நுழைந்து சிறிய டிபன் வகைகளுக்கு ஆர்டர் செய்து விட்டு இருவரும் இருக்கைகளில் உட்கார்ந்தார்கள். அப்போதுதான் உதடுகள் பிரிந்த வசீகரப் புன்னகையுடன் தன் பேச்சையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த அவனை நிர்மலாவும் உற்றுப் பார்த்தாள்.

மாநிறம் கலந்த சிவப்பில் நெடுநெடு உயரம், பரந்த நெற்றி, நெற்றியில் சுருள் சுருளாய் அழகுடன் படியும் முடிக் கற்றைகள், தீர்க்கமாய் ஆளைத் துளைக்கும் பளபள கருவிழிகள், அடர்ந்த மீசைக்கு கீழே இறுக்கம் தளர்ந்து எப்போதும் வசீகரமான மென்மைப் புன்னகையொன்றை வீசிக் கொண்டிருக்கும் உதடுகள்... கீழே நெஞ்சை நிமிர்த்திய வாட்டசாட்டமான தேகம். உடற் பயிற்சியுடன் மனப் பயிற்சியும் செய்வான் போலும்.

நிமிர்ந்த தலை, நேரான பார்வை; தீர்க்கமான பேச்சு... என அவனது ஒவ்வொரு செயலும் செய்கையும் அவளை வசீகரித்து மறுபடி மறுபடி பார்க்கத் தூண்டியது. அதனாலே அவளும் ஓரிரு நிமிடங்கள் தன் நிலை மறந்து அவனைக் கண் கொட்டாமல் தான் பார்த்தாள்.

கிருபாகரனுக்கும் கிட்டத்தட்ட அதே நிலைதான்! என்னதான் அழகு தேவையில்லை என்று வரன் விளம்பரத்தில் சொல்லியிருந்தாலும் நேரில் மைவிழிக்

கண்களும், முத்துச் சிரிப்புமாய் தேவதை போன்ற அபார அழகில் ஒருத்தி வந்து தன்னுடன் ஆர்வமாய் பேசுவது கண்டு தன்னையறியாமல் அவள் அழகில் லயிக்கத்தான் செய்தான் அவன்.

இப்படி பேசிக் கொண்டிருந்த இருவரும் சட்டென பேச்சை நிறுத்தி ஒருவரையொருவர் விழுங்கும் பார்வை பார்த்துக் கொண்டிருக்க... ஓரிரு நிமிடங்கள் அப்படியே கழிந்தன... ரெஸ்ட்டாரண்ட் பணியாள் தேநீர் கோப்பை களை டக்கென ஓசையுடன் வைத்ததும்தான் இருவரும் அசடு வழிய உணர்வுக்கு வந்தார்கள்.

நிர்மலாவுக்கு உள்ளுக்குள் பயங்கர ஆச்சரியம்தான்! எப்படி இது? தான்... இப்படி.. தன் நிலை மறந்து போகுமளவுக்கு மயங்கி.. ஒரு ஆணை விழித்துப் பார்த்தபடி... அவ்வளவு மதி கெட்டுப் போய் விட்டதா? எனத்தான் சினமாய் நினைத்தாள்.

ஆனால் கிருபாகரன் சதாரித்து தனது அலுவலகம் தனது வேலை பற்றியெல்லாம் விவரிக்க ஆரம்பிக்க மறுபடியும் இயல்பான பேச்சு தொடர்ந்தது.

டிபன் முடித்து சூடான தேநீரையும் குடித்தாயிற்று. இனி பேச்சை முடித்து கிளம்ப வேண்டியதுதான். ஆனால் இருவருக்கும் அப்படி பேச்சை முடித்துவிட விருப்ப மில்லை போலும். கிருபாகரன் நிறுத்தினால் அவள் எதையாவது ஒன்றை விஷயமாக்கி பேச ஆரம்பிப்பாள். அவள் நிறுத்தினால் அவன் பேச ஆரம்பித்தான்.

இப்படி இருவரும் ஒன்றுமில்லாத சாதாரண விஷயங் களை தீவிரமான பேச்சு போல் பேசியே ஒரு மணி நேரம்



சென்று விட்டது. நேரம் ஆகி விட்டதை உணர்ந்து எழுந்தார்கள். பிரிய மனமில்லாதவர்களாய் விடைபெற்று அவரவர் திசையில் நடந்தார்கள்.

அதன் பின் பஸ்ஸில் ஏறி வீடு வரும் வரை நிர்மலாவுக்கு கிருபாகரன் சிந்தனைதான்! அவனைப் பார்த்தது.. பேசியது எல்லாம் நிஜமா இல்லை வெறும் கனவா? என பயப்படும் அளவுக்கு நடந்தவைகளை நினைத்து நினைத்துப் பார்த்தாள்.

அவளுக்கு ஒரு விஷயம் பயங்கரமாய் உறுத்தி உரைத்தது. கிருபாகரனிடம் மணிக் கணக்காய் ஏதேதோ விஷயங்களைப் பேசியிருக்கிறோம். ஆனால் முக்கியமாய் பேச வேண்டியதை கேட்க வேண்டியதை கேட்கவே இல்லையே?

அவன் அவளைத் தேடி பேச வந்தது பெண் பார்க்கும் படலத்தின் ஒரு தொடர்ச்சியாகத்தானே? வீட்டில் அவளைப் பார்த்து விட்டார்கள். அவனுக்கு அவளைப் பிடிக்க வேண்டுமே?

அதற்காகத்தானே வந்து இருக்கிறான். அவள் வரும் நேரம் உணர்ந்து பஸ் ஸ்டாப்பில் காத்திருந்து பேசி இருக்கிறான். அப்படியானால் அவனது நினைப்பு என்ன? அவனுக்கு அவளைப் பிடித்திருக்கிறதா, இல்லையா? அவளிடம் ஆர்வமாய் சகஜமாய் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசியிருக்கிறானே!

அப்படியானால் அவளைப் பிடிச்சிருக்கப் போய்தானே பேசியிருக்கிறான்? என்றும் நிர்மலாவினுள் நினைப்பு ஓடியது.

ஆனாலும் அதுபற்றி வெளிப்படையாய் அவளும் கேட்கவில்லை. அவனும் பேசவில்லை. அவன் அப்படி அவளிடம் பேசும் சாக்கில் இவள் பொருத்தமானவளா? நமக்கு ஏற்றவள்தானா..? என ஆராய்ந்தாலே செய்திருப்பான்?

அப்படி நிர்மலாவினுள் நினைப்பு ஓடுகையிலே இன்னொரு ஆச்சரிய நினைவும் எழுந்து தடுத்தது.

அவன் நினைப்பது இருக்கட்டும். அவளுக்கு அவனைப் பிடித்து விட்டதா? அவளும் தனக்கு வர இருக்கும் மணமகன் பற்றி சில கணிப்புகள், கொள்கைகள் வைத்திருந்தாளே? அதற்கு கிருபாகரன் ஏற்றவன்தானா? அவள் போட்டு வைத்திருக்கும் மனக் கணக்கு குறியீட்டில் பொருத்திப் பார்க்க அவளை முடியும்தானா?

இப்படி மனதுள் எழுந்த எல்லா கேள்விகளுக்கும் அதே மனமே உடனடியாய் ஒப்புதலான பதிலைத் தர பெரும் உவகை அடைந்தவளாய் மனம் மகிழ்ந்தாள் நிர்மலா.



5

அடுத்து வந்த பத்து நாட்களில் பெரியவர்கள் மூலம் கல்யாணப் பேச்சு மேலும் தீவிரமாகி முகூர்த்த நாளும் குறிக்கப்பட்டது. இன்னும் சரியாக பதினைந்து நாட்களில் நிர்மலாவுக்கும் கிருபாகரனுக்கும் கல்யாணம்.

குருநாதர் மண்டபம் பிடிப்பதில் இருந்து அவ்வளவு வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு பிஸியாகி



விட்டார். அவரது உதவிக்காக ஊரிலிருந்து அவரது சொந்தச் சகோதரர்கள் இருவரும் வந்து விட்டதும் பெரும் உதவியாயிருந்தது.

கிருபாகரன் வீட்டினரோ... எப்போது தொடர்பு கொண்டாலும், ''பிரம்மாண்டம் எல்லாம் வேண்டாம் சிம்பிளாகச் செய்யுங்கள். வேறு எதுவும் உதவி தேவையென்றாலும் தயங்காமல் சொல்லுங்கள்'' என ஆதரவுக் கரம் நீட்டினர்.

நிர்மலாவிற்கு ஒருபுறம் இனம் புரியா மகிழ்வு ஒன்று ஏற்பட்டாலும் மறுபுறம் கல்யாணம் தன்னை தங்கை, தந்தையிடம் இருந்து பிரித்து விடுமே என்ற கவலை யையும் கொள்ள வைத்தது.

ஆனால் அவள் எண்ணத்தை தங்கை நீலா எப்படி உணர்ந்தாலோ..அவளே முன் வந்து தைரியமும் சொன்னாள். ''அக்கா, நீ எதற்கும் கவலைப்படாதே. அப்பாவை நான் பார்த்துக் கொள்கிறேன். அன்றாட வீட்டு வேலைகளுக்கு பக்கத்து வீட்டு செல்லம்மா ஆச்சி செய்து தருவதாக சொல்லி விட்டார்கள். நாங்கள் சமாளித்து விடுவோம்..'' என்று சொன்னது நிர்மலாவை கொஞ்சம் ஆறுதல் படுத்தியது.

அடுத்து நிர்மலாவுக்கு பெரும் கவலையை உண்டு பண்ணியது, அவளது 'வேலை' பிரச்சினை! மாப்பிள்ளை வீட்டில், 'கல்யாணத்திற்கு பின் வேலை பார்ப்பதும் பார்க்காததும், அவள் நிர்மலாவின் இஷ்டம்தான்..' என்று சொன்னது அவளை எந்த முடிவு எடுக்க என்று குழப்பவே செய்தது.

இரண்டு நாள் இதுபற்றி சிந்தித்தவள் மூன்றாம் நாள் இது விஷயமாய் கிருபாகரனிடமே பேசி முடிவெடுத்தால் என்ன, அவனைத் தேடிப் போனாள்.

அவனது அலுவலக ரிசப்ஷனில் சொல்லிவிட்டுக் காத்திருக்க.. இரண்டே நிமிடங்களில் கிருபாகரன் தோன்றி விட்டான்.

அவளைப் பார்த்ததும் இன்முகமாய் வசீகரச் சிரிப்பை சிரிக்க இவளும் பதிலுக்கு மெல்லிதழ்களை விரித்துச் சிரித்தாள்.

சைகை செய்து விசிட்டர்ஸ் ரூம் பக்கம் கூட்டிப் போனான். அவள் விஷயத்தைச் சொன்னதும் அதே வசீகரப் புன்னகையை மீண்டும் உதிர்த்தான்.

''ரொம்பவும் சிம்பிள்! இதுபற்றி மூன்று மாதங்களுக்குப் பின் கூட முடிவெடுக்கலாமே!'' என்ற போது அவள் புரியாமல் விழிக்கத்தான் செய்தாள்.

அவனே விளக்கினான்.

கல்யாணத்திற்காக லீவு போடும் சாக்கில் அவள் கம்பெனியில் பர்மிஷன் கேட்டு ஒரு மூன்று மாத லீவு எடுத்துக் கொள்ள வேண்டியது. அந்த மூன்று மாதங்களுக்குப் பின் அவள் விருப்பப்படியே வேலைக்குப் போவதா, வேண்டாமா.. என்பதையும் முடிவு செய்து கொள்ள வேண்டியது.

அவன் சொன்ன பதிலும் விளக்கமும் அவளை வியப்படையவே வைத்தது.



எவ்வளவு தெளிவாய் தீர்க்கமாய் யோசிக்கிறான். நாம் கூட இப்படி யோசித்துப் பார்க்கவில்லையே! அவன் சொல்கிறபடி இப்போதே இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை விட கல்யாணத்திற்குப் பின் சூழ்நிலையைப் பொறுத்து முடிவு செய்வது சரியானதுதானே!

''ரொம்பவும் சரியாகச் சொல்லியிருக்கிறீர்கள். பெரிய குழப்பம் தீர்ந்தது..'' என்றாள் நிர்மலா முகம் நிறைய புன்னகையுடன் நிம்மதி மூச்சு விட்டவளாய்.

''வாருங்கள் அலுவலக கேண்டீன் பக்கத்தில் தான் இருக்கிறது..'' என அழைத்துப் போனான். தனது அலுவலக நண்பர்கள் சிலரையும் அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

தனது அலுவலகம் பற்றியும் தான் செய்யும் பணிகளைப் பற்றியெல்லாம் அவன் விளக்கிச் சொன்னபோது அவளுக்கு பெருமிதமாக இருந்தது. கட்டிக் கொள்ளப் போகிறவள் தானே.. என இளக்காரமாய் நினைக்காமல் ரொம்பவும் தனக்கு மதிப்பளிப்பதாக எண்ணினாள்.

பேசி முடிந்ததும் அலுவலக வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தான் கிருபாகரன். அப்போதுதான் நிர்மலா நினைத்தாள், அவனுடன் பேசுவது பழகுவது எல்லாம் நெடுநாள் அவனுடன் பழகியிருந்தது போலவே ஒரு உணர்வை ஏற்படுத்துவதாக உணர்ந்தாள்.

என்ன மாயம்! வழியனுப்ப வந்த அவனும் அதையே சொன்னான். அவளுடன் பேசும்போது ரொம்ப நாள் பழகிக் கொண்டிருந்த உணர்வே தனக்கு ஏற்படுவதாய்ச் சொல்லி திகைத்துத்தான் போனாள்.

அவளிடம் விடைபெற்று பஸ் ஏறி தன் அலுவலகம் சென்றவளுக்கு ஸீட்டில் உட்கார்ந்தும் வேலை ஒன்றும் ஓடியபாடில்லை. கிருபாகரனின் நினைப்பே விரட்டியது. அவன் அவளைப் பார்த்ததும் பளீரென வசீகரச் சிரிப்பு சிரித்தது. இனிமைக் குரலில் பேசியது எல்லாம் மனதில் சிவைண்ட் வைத்தது போல் திரும்பத் திரும்ப ஓடியது.

அதே சிந்தனையில் இருந்ததாலோ என்னவோ வாடிக்கையாளர் ஒருவர் போனில் ''உங்கள் மேனேஜர் பெயர் என்ன?'' என்று விசாரிக்க, சற்றும் யோசிக்காமல் ''கி... ரு.. பா.. க...ர.. ன்..'' என அவசரமாய்ச் சொல்லியவள் தன் தவறை உணர்ந்து உதட்டைக் கடித்தாள். அதே அவசரத்தோடு ''மேனேஜர் பெயர் சபேசன்... சார்'' என திருத்தினாள்.

என்ன இது.. மனது... இப்படி நிலை கொள்ளாமல் தவிக்கிறது? கிருபாகரன் நினைப்பில் அப்படியே மயக்கம் வந்தது போல் தள்ளாடுகிறது.. என நினைத்தாள்.

கூடவே அவனுக்கும் இப்படித்தான் ஏற்படுமோ? என்ற கேள்வியும் ஓடியது. நம்மைப் பார்த்ததும் முதல் சந்திப்பிலேயே அவனுக்குப் பிடித்து விட்டதாய் வேறு சொல்லியிருந்தானே... என்பதும் ஞாபகம் வந்தது.

அன்று காலையில் பிடித்த கிருபாகரனின் நினைப்பு வீடு வந்து இரவு படுக்கும் வரை விரட்டியது. போதாக்குறைக்கு தங்கை நீலா வேறு ''அக்கா, நான் மாப்பிள்ளையை பார்க்கவே இல்லை..? எப்படி இருப்பார்.. உனக்குப் பிடித்திருக்கிறதா..?'' என்றெல்லாம் தொண தொணத்துக் கொண்டிருந்தாள்.



உள்ளுக்குள் என்ன நினைப்பு ஓடியதோ அதைக் காட்டாமல், அவளிடம், ''நான் சொன்னால் எல்லாம் உனக்குப் புரியாது. நாளை நேரிடையாகவே காட்டுகிறேன்..'' என்றாள் நிர்மலா. எல்லாம் மறுநாள் நீலாவை சாக்கு வைத்து கிருபாகரனை போய்ப் பார்க்கும் ஆவல்தான் என்பதும் வெளிப்படையாகவே தெரிந்தது.

அவர்கள் சம்பாஷணைகளை முன் ஹாலில் பேப்பரை பார்த்தவாறு காது கொடுத்து கேட்டுக் கொண்டிருந்த குருநாதரும் சிரித்துக் கொண்டார்.

ஆயிற்று. மறுநாள் நிர்மலா சீக்கிரமாகவே ரெடியாகி கிருபாகரனை தங்கைக்கு காட்டுவதற்காக நீலாவுடன் கிளம்பி விட்டாள். இம்முறை அலுவலகத்தினுள் செல்லாமல் அவனை வேலைக்குச் செல்லும் போதே பிடித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் அவன் வந்து இறங்கும் பஸ் ஸ்டாப்பிற்கு முன்னரே வந்து நின்று கொண்டாள்.

சரியான நேரத்திற்கு பஸ்ஸில் வந்து இறங்கிய கிருபாகரனும் அவள் தனக்காகக் காத்து நிற்பதைப் பார்த்து ஆச்சரியம் கொண்டான். ''என்ன விஷயம்?'' என அவன் வியப்பாய் புருவம் உயர்த்த ''பெரிய மனுஷி இவள் உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாள். அதனால் கூட்டி வந்தேன்..'' என்றபடி தங்கை நீலாவை சிரிப்புடன் அறிமுகப்படுத்தினாள் நிர்மலா.

''வாவ்..! நிஜமாகவே சினிமா ஹீரோ போல ஹேண்ட்சமாகத்தான் இருக்கிறார். நான் கூட இப்படி கன்டிசன் போடுகிற மாப்பிள்ளை எப்படியெல்லாம்

இருப்பாரோ என பயந்தேன்... நல்ல வேளை..! ஆ.. ஆர்.. லக்கி.. வெரி லக்கி.. அக்கா!" என நிர்மலாவின் கைகளை வேகமாகப் பிடித்துக் குலுக்கினாள் நீலா.

சட்டென முகம் சிவந்துதான் போனாள் நிர்மலா. கிருபாகரன் நீலாவை வியப்புடன் பார்த்துச் சிரித்தவன் அவனும் கைகளை நீட்டிக் குலுக்கினான். "இப்படி ஒரு சுட்டித் தங்கை இருப்பதை என்னிடம் சொல்லவே இல்லையே?" என்றான் நிர்மலாவைப் பார்த்தான்.

பின் நீலாவிடம் திரும்பி, "என் வீட்டிலும் உன்னைப் போல் ஒரு வாலு இருக்கிறது. அவள் பெயர் மல்லிகா.." என்றான்.

நீலாவும் விடாது, "நானும் அவனைப் பார்த்திருக்கிறேன். கொஞ்சம் கறுப்பாய்.. குள்ளமாய்.. அவளை வைத்துத்தான் அவள் அண்ணன் எப்படி இருப்பார்.. என உங்களை எடை போட்டேன். ஆனால் நீங்கள் நேர் மாறாக இருக்கிறீர்கள்.." என்றபடி தனது கெக்க பிக்க சிரிப்பைச் சிரித்தாள்.

நிர்மலாவோ அவள் சட்டென அவன் தங்கையையே அவனிடம் மட்டம் தட்டி பேசுவது கண்டு திகைத்து நிலாவின் முதுகை ஒரு தட்டு தட்டி எச்சரிப்பது போல் முறைத்தாள்.

அதைக் கண்டு கொண்ட கிருபாகரன், "அட.. நீலா.. வெளிப்படையாகத்தான் பேசுகிறாள். அவள் சொல்வது உண்மைதான். என் தங்கை மல்லிகாவுக்கு வீட்டில் 'குள்ள வாத்து' என்ற ஒரு பட்டப் பெயரும் உண்டு. நாங்கள் அப்படித்தான் கூப்பிட்டு கேலி செய்வோம்.." என்றான் சிரித்தபடி.



நிர்மலாவும் பயம் நீங்கிச் சிரிக்க... நீலாவோ விடாமல் "பட்டப் பெயர் உங்கள் வீட்டில் மட்டுமல்ல... எங்கள் வீட்டிலும் உண்டு. அக்காவுக்கு என்ன பெயர் தெரியுமா?" எனச் சீண்ட... நிர்மலா மறுபடியும் கைகளை ஓங்காத குறையாய்... "ஏய்.. சொல்லாதே.." என்றபடி முறைத்தாள்.

கிருபாகரனோ பரபரப்பாகி விட்டான்.

"சொல்லு.. சொல்லு.. என்ன பெயர்..?" என்றான் ஆவலாய்.

"அக்கா.. சொல்லிரப் போறேன்.." என்றபடி நீலா கிருபாகரன் பக்கம் திரும்பி, "அது.. அது.. ரொம்பவும் ரகசியம் சார். இருந்தாலும் அக்காவைக் கட்டிக் கொள்ளப் போகிற நீங்கள் கேட்பதால் சொல்கிறேன்.. அந்தப் பெயர்.. அந்த நிக் நேம்.. கோப்பெருந்தேவி!" என முடித்தாள் அவள்.

"என்ன.. கோப்பெருந்தேவியா? அது என்ன 'கோப் பெருந்தேவி?" கேட்டபடி திகைத்தான் கிருபாகரன்.

"அதான் மாப்பிள்ளை சார்.. அக்கா எதற்கெடுத்தாலும் ராணி போல் 'ரூல்ஸ்' பேசிக் கொண்டு சட்டாம்பிள்ளைத் தனமாய் திரிகிறாள் அல்லவா.. அதனாலே பாண்டிய ராணியின் பெயரான கோப்பெருந்தேவியை அவளுக்குப் பட்டப் பெயராய் சூட்டி விட்டோம்.."

நீலா சொன்ன விளக்கத்தைக் கேட்டு அடக்க முடியாமல் சிரித்தான் கிருபாகரன். அவன் அப்படிச் சிரிப்பதைப் பார்த்து அசடு வழிய தானும் சிரித்தாள் நிர்மலா.

"அக்கா.. பெயர்.. அது! எனக்கு.. என்ன பெயர் தெரியுமா?" என்றாள் நீலா அதே சட்டித்தனத்துடன்.

"என்ன பெயர்?" என்றான் கிருபாகரன்.

"கெக்க.. பிக்க! நான் அடிக்கடி 'கெக்க பிக்க..' சிரிப்பு சிரிப்பதால்.. என் பெயர்.. கெக்க பிக்கவாம்!" சொல்லியபடி தன் கெக்க பிக்க சிரிப்பை பெரிதாய் சிரிக்க ஆரம்பித்தாள் நீலா.



## 6

அதற்குப் பின் வந்த நாட்கள் நிர்மலா எதிர்பார்த்தது போலவே கடகடவென ஓடின. இதோ... இன்று மணநாள்!

கிருபாகரனுக்கும் அவளுக்கும் நகரின் முக்கிய திருமண மண்டபம் ஒன்றில் கல்யாணம்!

எப்போதோ பார்த்த சொந்த பந்தங்கள் எல்லாம் அன்று ஒன்று கூடி விட்டனர். நிர்மலா வீட்டில் என்றுமில்லாத அளவுக்குக் கூட்டம்தான். ஒரே குதூகலம்தான்!

ஆள் ஆளுக்கு அவளை அப்படி... இப்படியென இழுத்து அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தனர். 'பாவம்.. தாயில்லாப் பெண்... நாம் தான் செய்யவேண்டும்..' அடிக்கடி எழும் பேச்சு வேறு.

அவர்கள் சொல்லிக் காட்டியதாலோ என்னவோ நிர்மலாவுக்கு அடிக்கடி தாயின் நினைவு எழுந்து கொண்டே இருந்தது. சுவரில் மஞ்சளும் குங்குமமுமாய் போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்த தாயின் படத்தையே வெறித்தாள்.



இந்நேரம் அம்மா மட்டும் தன்னுடனிருந்தால் எப்படி இருக்கும் என்ற நினைப்பு ஓடியது. சிறு வயதிலேயே தான் இழந்து விட்ட அந்தத் தாயின் அன்பு மிகப் பெரிய இழப்பு என்றே வருந்தினாள். கிடைத்தற்கரிய அந்த அன்பிற்கு வேறு எதையும் ஈடு சொல்ல முடியுமா? எனவும் தவிப்பு எழுந்தது.

இழந்தது இழந்ததுதான். இனி வருத்தப்பட்டுப் பிரயோஜனமில்லைதான்! ஆனால் இதை இந்த வருத்தங்களையெல்லாம் ஒன்று விடாமல் கிருபாகரனிடம் சொல்ல வேண்டும். அவனது அன்பு, அவன் காட்டும் பரிவுதான் இனி தனக்கு எல்லாமுமாக வேண்டும் எனவும் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அதற்கு மேல் அவளை யாரும் இப்படி பழைய விஷயங்களைத் தோண்டிச் சிந்திக்கும்படி விடவில்லை. யாரோ அவளை எழுப்பினார்கள். அலங்காரத் தேராய் அவளை அழகு படுத்தி மாலைகளுடன் பரிவாரமாய் கூட்டி வந்து காரில் ஏற்றினார்கள். கார் மண்டப வாசலுக்குச் செல்ல மண்டப வாசலில் இருந்து மேள வாத்தியங்களுடன் உள்ளுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு கொஞ்ச நிமிடங்களில் மணமேடையில் உட்கார வைக்கப்பட்டாள் அவள்.

அடுத்த கொஞ்ச நிமிடங்களில் பக்கத்தில் பட்டு வேஷ்டி பட்டுச் சட்டை பளபளப்பில் கம்பீரமாய் வந்து உட்கார்ந்தான் கிருபாகரன். உட்கார்ந்தவன் சும்மா இருக்காமல் மெல்ல யாரும் பார்க்காமல் அவள் கைகளைக் கிள்ளினான். "என்ன கோப்பெருந்தேவி... இப்படி

இருந்தால் எப்படி? கொஞ்சம் சிரிக்கலாமே..!'' என்றபோது முகம் சிவந்தாள். சட்டென இறுக்கம் தளர்ந்து சிரிக்கவும் செய்தாள்.

அந்த ஒரு நிகழ்வின் மூலமே கிருபாகரனுக்கு குறும்பும் நகைச்சுவை உணர்வும் உண்டு என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

அதை உறுதிப்படுத்தும் வண்ணம் அடுத்து வந்த அத்தனை சடங்குகளிலும் தனது குறும்புத்தனத்தைக் காட்டி அவளைத் திணறடித்தான். அவன் யாரும் கவனியா வண்ணம் அவள் இடையை இழுப்பதும் விரல்களை நிமிண்டுவதும், தொடைகளில் கூப்பிடுவதுபோல் தட்டிக் கொண்டும், செல்லமான சேஷ்டைகளை அவன் பாட்டுக்குச் செய்து கொண்டே போக... முகம் சிவந்தவள், நாணிக் கோணியவள், மறுகணம் தனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என காத்திருந்து பட்டுத் துணியால் சம்பிரதாயப்படி இருவரது கைகளையும் இணைத்து ஐயர் கட்டி விட, அதுதான் சாக்கு என்று அவளும் நறுக்கென அவன் விரல்களை கிள்ளி விட்டாள்.

'ஸ்ஸ்.. ஆ..ஆ...' என மெல்லிய சத்தல் குரலோடு.. அவளைப் பார்த்தவன் 'கோப்பெருந்தேவியா.. சும்மாவா?' என அதிசயித்தான். அவன் தவிப்பதை ரசித்து மனம் முழுக்கச் சிரித்தாள். கம்பீரமான ஆண்மை பொங்கும் அவன் அழகை ஒரு கணம் கண் இமைக்காமல் பார்த்தாள்.

மணமேடையில் எல்லோரும் சுற்றி இருக்கிறார்கள் என்பதைக் கூட அவன் பொருட்படுத்தாமல் அவளைப் பற்றியே நினைக்கிறான். அவளிடமே குறும்பாய்



விளையாட நினைக்கிறான் என்பதை உணர்ந்தபோது ஒருபுறம் அவளுக்கு சந்தோஷமாகவும் இருந்தது. இப்படித்தான் அவன் கவனம் அவன் அன்பு முழுவதும் தனக்கே சொந்தமாக வேண்டும் என்ற நினைப்பும் ஓடியது. அதற்காக அதைப் பெற அவளும் அவன் மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அப்போதே உறுதியெடுத்துக் கொண்டாள் அவள்.

மணமக்களின் இந்த ரகசிய சேஷ்டைகளைப் பார்த்த கிருபாகரனின் அக்கா யாமினியும், சுட்டித் தங்கை மல்லிகாவும் சும்மா இருப்பார்களா? அவர்களும் தங்கள் பங்கிற்கு குறும்பு பண்ணி இருவரையும் கலாய்த்தனர்.

சரியான முகூர்த்த நேரத்தில் மங்கள ஒலிகள் ஒலிக்க... அவள் கழுத்தில் தாலியை கட்டினான் கிருபாகரன். அவள் தலையைச் சுற்றி கைகளைக் கொண்டு வந்து நெற்றியில் அவன் முதல் திலகமாய் பொட்டிட்டபோது சிலிர்த்தது அவளுக்கு.

அடுத்து தந்தையின் கால்களில் இருவரும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். குனிந்து கால்களை வணங்கிவிட்டு நிமிர்ந்த நிர்மலாவிற்கு தந்தையின் கலங்கிய கண்களைப் பார்த்ததும் அவளையறியாமல் கண்களில் நீர் சுரந்தது.

தாயில்லாத தன்னை வளர்த்து படிக்க வைத்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வர எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்... தன் மீது எவ்வளவு அன்பு கொண்டிருப்பார்... இப்போது அவரைப் பிரிந்து செல்ல வேண்டிய சூழ்நிலை வந்து விட்டதே... என்ற நினைப்பும் எழுந்து அவள் மேலும்

வருத்தம் கொள்ள வைத்தது. கைகளைக் கட்டிக் கொண்டு அழப் போனவளை சூழ்நிலை உணர்ந்து ஆறுதல் படுத்தினார் குருநாதர்.

அதன் பின் வரிசையாய் சடங்குகள், சம்பிரதாயங்கள், மணமக்களை வாழ்த்துவது, பரிசுப் பொருட்களைக் கொடுப்பது என ஒவ்வொன்றாய் நடந்தது. மாலை ரிசப்ஷனில் இருவரது அலுவலக நண்பர்கள், தோழிகள் என ஒரு பெரிய பட்டாளமே வந்துவிட்டது. எல்லோருமே "சரியான ஜோடி. மேட் ஃபார் ஈச் அதர்" என அவர்கள் காதுபடவே முணுமுணுத்து புகழ்ந்து இருவரையும் பரவசப்படுத்தியது.

அதிலும் நிர்மலா மாலை ரிசப்ஷனுக்கு தங்க நிற ஜரிகை பார்டர் சேலை ஒன்றை தேர்ந்தெடுத்து கட்டியிருந்தாள். அதன் பளபளப்பும், உடம்பை ஒட்டிய அதன் நளினமும் அவள் அழகை மேலும் உயர்த்திக் காட்டின.

அதைத் தன் முதல் பார்வையிலேயே உற்றுக் கவனித்து கண்டுபிடித்த கிருபாகரன் "அடடா.. கோப்பெருந்தேவி இப்போது கோப்பெருந்தேவதையாகி விட்டாங்களே!" என வர்ணிக்கவும் செய்தான்.

அவன் சொன்னது கேட்டு ஞாபகம் வந்தவளாய், "உங்களுக்குத்தான் அழகு பிடிக்காது. அழகு தேவையில்லை.. என்றெல்லாம் சொல்லி மணமகள் விளம்பரம் எல்லாம் கொடுத்தீர்களே?" என ஞாபகப்படுத்தினாள்.

அதற்கு பளீர் வசீகர சிரிப்பு சிரித்த கிருபாகரன், "ம்ம்... அழகு பிடிக்காததுதான்... ஆனால்.." என இழுத்தவன் ஒரு



கணம் நிறுத்திவிட்டு குனிந்து அவள் காதுகளில் "அதற்காக இப்படி ஒரு அழகுப் பொக்கிஷம் பக்கத்தில் வந்து போஸ் கொடுத்து நிற்கும்போது.. அதைப் பார்த்து சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க நான் என்ன குருடனா?" என்று சொல்லியபடி மறுபடியும் அவளை ஒரு கிள்ளு கிள்ளினான் அவன்.

அந்தக் கிள்ளலை விட அவனுக்கும் அழகு பிடிக்கும்.. அவன் தன் அழகை ரசிக்கிறான் என்ற விஷயம் அவள் மனதை இன்பமாய்க் கிள்ளியது. போட்டோவுக்காகவும் சரி வீடியோவுக்காகவும் சரி எங்கோ பார்த்துப் பேசிக் கொண்டிருந்த அவள் முகத்தை கைகளால் திருப்பி வழிப்படுத்தினான். தம்பதிகளுக்கு பரிசளிக்க வந்த அவனது ஒவ்வொரு அலுவலக நண்பர்களையும் அவளுக்கு நன்கு விளக்கமாய் அறிமுகப்படுத்தி வைத்தான்.

ஒருவாறு ரிசப்ஷன் முடிந்து இரவு உணவினையும் முடித்தார்கள். அடுத்து சாந்தி முகூர்த்தம்! முதலிரவு! அவர்களுக்காக அலங்கரிக்கப்பட்ட தனியறையில் இருவரையும் விட்டுவிட... பால் சொம்புடன் வெட்கமாய் வந்தவளைப் பிடித்து அப்படியே கரங்களால் வளைத்து தன் மடியில் உட்கார்த்தி வைத்தான் கிருபாகரன்.

சிணுங்கலுடன் விலக முயற்சித்தவளை அவனது இறுக்கமான கரங்கள் தடுத்து நிறுத்தியது. "ம்ம்... உன்னிடம் நிறைய பேச வேண்டும்... அதுவும் விடிய.. விடிய..." என்றான் அவன்.

சட்டென அவன் ஸ்பரிசத்தால் ஏற்பட்ட கூச்சம் அவளை பேச்சால் விலகியது.

"அப்படி என்ன பேச வேண்டும்..?" என்றாள் அவள் எதுவும் தெரியாதது போல்.

"உன்னைப் பற்றி.. என்னைப் பற்றி.. நம் இருவரையும் பற்றி.. இன்று முழுக்க பேசிக் கொண்டிருக்க வேண்டும்.. சரியா?" என்றபோது காதுமடல்கள் அதிர அவள் பெரிதாய் தலையசைக்கத்தான் செய்தாள்.

அவன் தன்னைப் பற்றி தன் விருப்பு வெறுப்புகள் என எல்லாவற்றையும் சொன்னான்.

பின் அவள் விருப்பு வெறுப்புகளை கேட்டான்.

அவள் ஒரே வார்த்தையில் 'அன்பு..!' என்றாள். "உங்கள் அன்பும் உங்கள் வீட்டார் அன்பும் முழுதாய் எனக்கு வேண்டும்..!" என்றாள்.

"கண்டிப்பாகக் கிடைக்கும்.." என்றபடி அவன் சிரித்தான். அவளுக்குப் புரிய வைக்க இறுக அணைத்து விடுவித்தான். பின் ரூமின் ஜன்னல் கதவைத் திறந்து விட்டான்.

வெளியே இருளுக்கு நடுவே பால் வெண்மையாய் நிலா. மின்னும் நட்சத்திரங்கள் தெரிந்தது. குளுமையான அந்த இயற்கையை அப்படியே அவளது தோளில் கன்னம் பதித்து ரசித்துப் பார்த்தான்.

அவளும் எதுவும் பேசாமல் அமைதியாக அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



பொதுவாக வீட்டு மொட்டை மாடியில் தங்கை நீலாவுடன் உட்கார்ந்தபடி நட்சத்திரங்களை எண்ணுவது நிர்மலாவின் வழக்கம்.

ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு தோழியாம், நண்பனாம் நன்கு தெரிந்தவர்கள், ப்ரியமானவர்கள், தோழிகள் என ஒவ்வொரு பெயராய் நட்சத்திரத்திற்குச் சூட்டி எண்ணுவார்கள். எண்ணி முடித்ததும், ஆ! நமக்கு இவ்வளவு நண்பர்களா? என வியப்பார்கள்.

இதை அப்படியே அவன் தோளில் சாய்ந்தபடியே சொன்னாள். 'அட.. இதென்ன கிறுக்குத்தனம்?' என்று சொல்லப் போகிறானோ என நினைத்தவளுக்கு அவன் தன்னையே ரசித்துப் பார்த்தது பெரும் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்றாள் விழிகளை உயர்த்தி.

"நானும் இப்படித்தான் எண்ணி நட்சத்திரங்களைப் பார்ப்பேன். அதுபோல்தான் உன் சிந்தனையும்.. உன் ரசனையும்.. நல்ல பொருத்தம் நமக்கு!"

சொல்லியபடி அவன் அவள் விரல்களோடு தன் கரங்களைக் கோர்த்து.. மெல்ல அழுத்தினான். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு லேசாகத் தொடுவதில், அந்தச் சின்ன ஸ்பரிசத்தில்தான்.. என்ன ஒரு ஆனந்தம்! என்ன ஒரு சந்தோஷம்! அதை ஒரு கணம் கண்களை மூடி முழுமையாக அனுபவித்தாள். அவன் அப்படியே அவள் முகம் நிமிர்த்தி அவள் பக்கமாய் முழுவதும் திரும்பினான்.

''நிர்மலா.. அழகான பெயர்.. '' ரசித்து உச்சரித்துப் பார்த்தவன், ''உன்னை நான் எப்படி அழைப்பது?'' என்றான்.

''எப்படி என்றால்...?'' என புருவம் உயர்த்தியவள், ''வீட்டில் எல்லோரும் நிம்மி.. என்றே அழைப்பார்கள்'' என்றாள் அவசரமாக.

''நிம்மி.. நன்றாகத்தான் இருக்கிறது. அப்படியே நானும் சொல்கிறேன்..'' என்றபோது அவள் அவன் பெயரை ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருந்தாள்.

''கிருபாகரன்.. கிரு, கரன்.. கரன்ஜி.. கிருபாஜி..'' என்றெல்லாம் யோசித்துப் பார்த்தவள், 'கிருபா..' என உச்சரித்துப் பார்த்து, 'கிருபா' ரொம்பவும் பிடித்திருக்கிறது அப்படி அழைக்கட்டுமா? ஆட்சேபம் இல்லையே'' என்றாள்.

''மேடம்ஸ் சாய்ஸ்... ஒகே சொல்லாமல் இருக்க முடியுமா?'' என்றபோது அவளும் சிரித்தாள்.

அதற்குப் பின் அவனுடன் இலகுவாக அவளால் பே[illegible] முடிந்தது. அவளது பிடித்தம் பற்றி, விருப்பு வெறுப்புகள் பற்றி அக்கறையாய்க் கேட்டான். ''இது கூட்டுக் குடும்பம். உன்னால் அட்ஜெஸ்ட் செய்து இருந்து கொள்ள முடியுமா?'' என்று கேட்டபோது காது மடல்கள் அதிர வேகமாய்த் தலையசைத்தாள்.

''கண்டிப்பாக..! இப்படி கூட்டுக் குடும்பத்தில் இருப்பது என் ஆசையும் கூட!'' என வார்த்தைகளாலும் உறுதி கூறியபோது அவள் முகத்தில் சிறு கவலை ரேகை தோன்றி மறைவதைக் கண்டான்.



இப்படியும் அப்படியுமாக ஒரு மணி நேர பேச்சுக்குப் பிறகு பேச்சு நின்றது.

அவன் தயக்கமாய் அவளைப் பார்த்தான்.

''அத்தோடு.. இன்னொரு விஷயம் நிம்மி... நீ தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது..''

''தயங்காமல் சொல்லுங்கள்..'' என்றாள் கண்கள் முழுவதையும் விரித்தபடி.

''என் வீட்டில் உள்ளோர் எல்லோருக்கும் வெவ்வேறு குணாதிசயங்கள் உண்டு. அவர்களை அவ்வாறே அப்படி அப்படி ஏற்றுக் கொள்ள நீ பழகிக் கொள்ள வேண்டும்..''

''அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. எல்லோரிடமும் பணிவாய் நடந்து கொள்கிறேன்..'' என்றாள்.

கிருபாகரன் சிரித்தான்.

''பணிவாய் நடந்து கொள்வது பெரிதில்லை. புரிந்து நடந்து கொள்ள வேண்டும்..'' என்றான்.

நிர்மலாவுக்குப் புதிராய் இருந்தது.

ஒருவித பயமாகவும், முதல் முறை தோன்றியது.

அவள் பயப்படுவதை உணர்ந்து அவள் நுனி மூக்கை கிள்ளி ஆட்டினான். ''அதற்காக இப்படியெல்லாம் பயப்பட வேண்டாம். உன்னை யாரும் கடித்து தின்றுவிட மாட்டார்கள்..'' என்றான்.

இம்முறை நிர்மலாவும் பளீரென சிரித்தாள்.

இருளின் மெல்லிய விளக்கொளியில் மறுபடியும் அவள் அழகை ஆசை தீர பார்த்து ரசித்தவன், அப்படியே அவளை நேராய் இழுத்து நெஞ்சோடு அணைத்தான்.

மெல்ல குனிந்து அவள் இதழ்களில் முத்தமிட்டு சிலிர்ப்படையச் செய்தான்.

அவளுக்குத் திடீரென அது ஞாபகம் வந்தது.

"எனக்கும் வாழ்க்கையைப் பற்றி சில எண்ணங்கள் உண்டு" என்றாள்.

"சொல்லு.." என்றான்.

அவள் பதில் பேசாமல் தன் கைப்பையிலிருந்து அதை எடுத்து காண்பித்தாள்.

சின்ன சாக்பீஸ்.. அது.

"இது எதற்கு?" என்றான் அவன்.

அவள் "பொறுங்கள்..." என்றபடி கட்டிலுக்கு சில அடி தூரம் முன்னால் நடந்து சென்று சாக்பீசால் பெரிய கோடிழுத்தாள்.

இது ஒரு வரைமுறை. இந்தக் கோட்டிற்கு அப்பால் நாம் இருவரும் பிரச்சினைகள் இல்லாத சந்தோஷமான விஷயங்களை மட்டும் பேச வேண்டும். அப்படி ஒரு பழக்கம் நாம் வைத்துக் கொள்வோமா? எனது சிறு வேண்டுகோள்... இது.."

"நல்ல பழக்கம்.. வேண்டுகோள் ஏற்கப்பட்டது.." என்றான் சிரிப்பாய்.



"அப்புறம் இன்னொன்று.."

"ம்ம்.. சொல்லலாம்.."

"தினம் இரவு குட்நைட் சொல்லிப் படுக்கப் போகும் முன் இருவரில் யாராவது ஒருவர் 'ஜோக்' சொல்ல வேண்டும். அந்த ஜோக்கை ரசித்தபடி சிரிப்புடன் நாம் தூக்கத்தில் ஆழ்ந்து கொள்ள வேண்டும், சரியா கிருபா?"

இம்முறை அவன் அடக்க முடியாமல் சிரித்து விட்டான்.

"ஜோக்கா ..? நல்ல ஜோக் இதுதான்!" என ரசித்துச் சிரித்தவன் சின்ன சிந்தனையுடன், "நீ சொல்வது சைக்காலஜியாக நல்ல அப்ரோச்.. சிறந்த நடைமுறைப் படுத்த வேண்டிய யோசனை.." என்றவன் சிரிப்பைத் தொடர்ந்தபடி, "ஆனால் ஜோக் விஷயத்தில் கொஞ்சம் நான் வீக்தான். அதனால் நீ ஒன்றும் பயப்பட வேண்டாம், உன்னை கீச்சு கீச்சு மூட்டியாவது என் பங்கிற்கு சிரிக்க வைத்து விடுகிறேன் போதுமா?" என்றபோது அவளும் விழுந்து சிரித்தாள்.

அவன் சட்டென ஞாபகம் வந்தவனாய், "ஆமாம், என்னை எப்படி அழைத்தாய்.. நானும் சரியாக கவனிக்க வில்லையே?" என்றபடி குறும்பாய் பார்க்க,

'கிரு..ப்..' என அவசரமாய் சொல்ல வந்தவள் அப்படியே நாக்கைக் கடித்தாள்.

"அதுதான் முழுப் பெயரும் வெளியே வந்து விட்டதே.. தைரியமாகச் சொல்லு.." என்றான்.

"கிரு.. கிருப்.. கிருபா.."

"ஹப்பா.. நன்றாக மூச்சு விட்டுக் கொள்!" என்றான்
அவள் சொல்லத் திணறியதை ரசித்தபடி.

மறுபடியும் அவள் சிரிக்க முனைந்தபோது சட்டென கைகளை உயர்த்தி நிறுத்தியபடி "கொஞ்சம் அந்த சிரிப்பை வெளியே விட்டு விடாமல் அப்படியே வைத்துக் கொள் இன்று என் பங்கிற்கு ஒரு ஜோக்கை சொல்லி விடுகிறேன்.." என்றவன், "ஜலதோஷம் ஏன் பிடிக்கிறது தெரியுமா?" என்றான்.

அவள் புரியாமல் "ஏன்?" என்றாள்.

"நம் மூக்கிற்கு மேல் இரண்டு ஐஸ் (eyes) இருக்கிறதே, அதனால்தான்!" என்றபோது அவள் அடக்கி வைத்த சிரிப்பை முழுவதுமாய் மலர விட்டாள் அவள்.



# 7

கல்யாணம் முடிந்த மூன்றாவது நாளிலே ஹனிமூன் ஏற்பாடு வேறு. அதுவும் கொடைக்கானல் என்றதும் அவளுக்கு ஜில்லென்றுதான் இருந்தது.

அன்று மாலையே சூட்கேஸ் பாக் செய்து கிளம்பி விட்டார்கள். ஏற்கனவே பலமுறை தோழிகளுடன் கல்லூரி டூர் சென்றிருந்தாலும் இம்முறை கிருபாகரனுடன் என்றதும் பரவசமாய்த் தான் இருந்தது. ஊர் போய் இறங்கியதும் குளிர் தாங்காதவளாய் அவனது கரங்களை இறுக்கியவள் அப்படியே அவனோடு ஒட்டிக் கொள்ளத்தான் செய்தாள்.



அவர்களுக்காக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த காட்டேஜில் தங்கினார்கள். "ம்ம்.. சீக்கிரமா குளித்துவிட்டு கிளம்பு. பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கிறது..." என்று கிருபாகரன் அவசரப்படுத்தியபோது அவன் கழுத்தை வளைத்துக் கொண்டு.. "பேசாமல் ரூமிலே இருந்து பேசிக் கொண்டிருக்கலாமா?" என்றாள்.

அதற்குப் புன்னகைத்த கிருபாகரன் குறும்புப் பார்வையுடன் "நான் ரெடி.. ஆனால் பின் இரவு போரடித்து விடுமேயம்மா?" என்றதும் அதன் அர்த்தம் உணர்ந்து முகம் சிவந்தவள், "அதற்கில்லை நாம் நிறைய பேசிக் கொண்டிருக்கலாம்.." என்றாள் வெட்கத்தோடு.

கிருபாகரன் குனிந்து காது மடல்களை உரசி அவள் கண்களை நேராய்ப் பார்த்தான். "உனக்குத் தெரியுமா நிம்மி..? இதுபோன்ற பிக்னிக் ஸ்பாட்டில் தான் கழுத்தைக் கட்டிக் கொண்டு இடுப்பை வளைத்துக் கொண்டு சுதந்திரமாய் ரோமாண்டிக் ஜோடிகள் போல் அலையலாம்.. யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். அப்படி அலைவதில் ஒரு த்ரில்லும் இருக்கும்.." என்றான்.

அவன் சொன்னதின் முழு அர்த்தத்தையும் அவனுடன் கொடைக்கானலில் ஒவ்வொரு ரம்மியப் பகுதிகளைப் பார்த்து ரசிக்கும் போதுதான் அவளால் உணர முடிந்தது. எவ்வித சங்கோஜமுமில்லாமல் ஒருவரையொருவர் அணைத்தபடி செல்லும் எண்ணற்ற ஜோடிகள், பேச்சு, சிரிப்பு.. கும்மாளம்... என ஆர்ப்பரிப்புடன் இளமைச் சேஷ்டைகள் செய்தபடி யாரும் யாரையும் சட்டை செய்யவில்லைதான்.

கிருபாகரன் மட்டும் சும்மாவா? ஒவ்வொரு பிக்னிக் ஸ்பாட்டிற்குச் செல்லும் வழியிலும் அதைக் காட்டி விளக்கும் போதும், அவள் வியப்பால் பார்க்கும் பொழுதும் யாருக்கும் தெரியாமல் அவன் விரல்கள் அவள் உடம்பில் அங்கங்கே நர்த்தனமாடுவதை கூட இனிமையாகத்தான் உணர்ந்தாள்.

மலைப் பிரதேசம் குளிர்ந்த சீதோஷ்ண நிலை, ஜில்லென உடம்பை வருடும் தூய்மையான காற்று.. கண்களை பரவசப்படுத்தும் பச்சைப் பசேல்கள் என எல்லாமே ரம்மியமாய் அவளை ரசிக்க வைத்தது.

கிருபாகரன் காதோரமாய் குனிந்து குனிந்து கொஞ்சல் மொழியில் பேசி சிரிக்க பதிலுக்கு அவளும் கொஞ்சத்தான் செய்தாள். குழைந்து பேச்சில் சிரிப்பில் உருகத்தான் செய்தாள்.

ஏரி ஓரமாய் பறந்து சென்ற சிறிய கொக்கு ஒன்றை அவன் காட்டியபோது கூட அதை பெரும் உலக அதிசயமாகத்தான் பார்த்தாள் அவள்.

பேசினார்கள்... பல மணி நேரம் நடந்தார்கள்... பசி வயிற்றைக் கிள்ளியதும் பக்கத்து ரெஸ்ட்டாரண்டில் உணவருந்தி விட்டு மறுபடியும் சுற்றினார்கள். ஒவ்வொரு நிமிடத்தையும், ஒவ்வொரு விநாடியையும் மகிழ்ச்சியும் சிரிப்புமாய் அனுபவித்து இனிமையை உணர்ந்தார்கள்.

அவள் திடீரெனத் தான் அவன் பேசும்போது கைகளை ஆட்டியபடி சிரிக்கும் போது என அவனைக் கூர்ந்து பார்த்தாள். டீ ஷர்ட் போன்ற உல்லன் ஸ்வெட்டரில் கம்பீரமாகவே இருந்தான் அவன்.



அந்த சுருளான முடிக் கற்றைகளும், பரந்த நெற்றியின் கீழ் மின்னலாய்ச் சுழலும் அந்தக் காந்த விழிகளும், அடர்ந்த மீசையின் கீழ் பளிரிடும் வசீகரச் சிரிப்பும் திடமான உடற் கட்டுடன் தெரியும் ஆண்மையும் அவன் கம்பீரத்தையும் பறைசாற்ற அப்போதுதான் அவனைப் புதுசாய்ப் பார்ப்பது போல் உற்று உற்றுப் பார்த்தாள் அவள்.

சொல்லப் போனால் ஒரு மாதத்திற்கு முன் வரை அவன் யாரோ. அவள் யாரோ... பெரியவர்கள் பேசி முடிவெடுத்த கல்யாணம் என்ற பந்தம்தானே அவர்களை இணைத் திருக்கிறது.

அதிலும் அவள் நின்று நிதானித்து உணருவதற்குள் மின்னல் வேகத்தில் கல்யாண ஏற்பாடுகளெல்லாம் நடந்து விட்டனவே. முதலில் அவனை போட்டோவில் பார்த்தது.. பின் நேரிடையாய்ப் பார்த்தது... தனிமையில் முதலில் ஓரிரு வார்த்தைகள் பேசியது.. என எல்லாம் முதல் அறிமுகத்திலேயே பிடித்துப் போனதுதான்.

ஆனால் அப்போதெல்லாம் ஏற்படாத ஒரு வித ஈர்ப்பு, ஒருவித பயங்கரமான அன்பு இப்போது அவன் மேல் ஏற்படுவதை உணர்ந்தாள்.

எதனால் இது..? என்று யோசித்தவளுக்கு ஓரளவு புரிந்து கொள்ளவும் முடிந்தது. பேசப் பேச.. பழகப் பழகத்தானே ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து மனங்களால் நெருங்க முடியும்? அந்த அப்படி மனதால் நெருக்கமாகும் சூழ்நிலைதானே உண்மையான அன்பை நீரூற்றாய்ப் பிரவாகமெடுத்து ஓடச் செய்யும்?

அந்த நீரூற்றான அன்பில் தான் அவன் இப்போது அவள் மனதிற்குப் பிடித்த பெரும் அழகனாய்த் தோன்று கின்றானா? எனவும் வியந்தாள்.

அப்படி அவள் திடீரென பேச்சை நிறுத்தி தனது மை விழிகளால் விழி விரிய ஆசையாய்ப் பார்க்க அவனும் அதிசயித்தான்.

அட.. என்ன இது விழிகளைத் திறந்து கொண்டே கனவுலக சாம்ராஜ்யமா..? என அவள் கூந்தலை வருடி அசைத்தபோதுதான் உணர்வுக்கே வந்தாள் அவள்.

முகம் சிவக்க அவள் பூரித்தாலும் கிருபாகரன் விடாது துளைத்தான்.

"என்ன.. கனவு அது.. சொல்லக் கூடாதா?" என்றான்.

"எல்லாம் நம்மைப் பற்றியதுதான்.." என்றாள் அவள் முத்துச் சிரிப்போடு.

"நம்மைப் பற்றியது.. என்றால்.. அது.. அது.. அது போன்ற கனவா?"

அவன் சொல்ல வருவதை உணர்ந்து திடுக்கிட்டுப் பதறினாள்.

"ஐயோ.. அதெல்லாம் இல்லை! இது... இது.. இனிமையானது!"

"இனிமையானது என்றால்..?"

ம்ஹூம்! இனியும் இவனிடம் சொல்லாமல் தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்தவள் அப்படியே தான் நினைத்ததைக் கொட்டினாள்.



"இதுவரை ஏற்படாத உணர்வு... அன்பு.. இப்போது நம் மனங்களின் நெருக்கமான சங்கமத்தால் நிகழ ஆரம்பித்து விட்டது.." என்றாள்.

சொல்லிவிட்டு முகம் சிவக்க உதட்டை அழுந்தக் கடித்தபடி அவனைப் பார்த்தாள். அப்படியே இழுத்து அவளை இறுகக் கட்டிக் கொண்டான் அவன்.

பின் அவள் முகம் நிமிர்த்தி நேராய்ப் பார்த்தான்.

"நான் கூட எப்படியோ என்று நினைத்தேன். ஆனால் எல்லோர் சொல்வதும் சரியாகத்தான் இருக்கிறது.." என்றான்.

"என்னது..?" என்றாள் அவள் திடுக்கிட்டு.

"நீயே.. பார்.. இந்த ஹனிமூன் ஏற்பாட்டை என் அலுவலக நண்பர்கள் கூறி போய் வா.. என்று சொன்னபோது, 'இந்த ஹனிமூன் எல்லாம் எதற்கு? நாங்கள் என்ன சினிமா காதலர்களா? கொடைக்கானலில் போய் டூயட் பாடுவதற்கு?' என்றுதான் அவர்களிடம் சொல்லி கேலி செய்தேன். ஆனால் இங்கு வந்தபின்தான் தெரிகிறது. இந்தத் தனிமை யாருடைய தொந்தரவும் இல்லாத சூழல் எல்லாம் நம்மை ரொம்பச் சிந்திக்க வைக்கிறது. ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது அப்படித் தானே?"

அவன் கேட்க தான் நினைத்ததை அவன் அப்படியே சொல்லி விட்டான் என்ற சந்தோஷத்தில் வேகமாய் மேலும் கீழும் தலையாட்டினாள் அவள்.

அந்த அழகை ரசித்துப் பார்த்தவன் அப்படியே அவளை இழுத்து அவள் கன்னங்களில் இதழ்கள் பதித்து அவள்

முகம் சிவக்க வைத்தான். ''இதுபோல ரொமான்ஸ் செய்வதற்கும் ஹனிமூன் வசதிதானே?'' எனச் சொல்லி சிரிக்கவும் செய்தான்.

பின் அவளை திரும்பவும் உற்றுப் பார்த்துவிட்டு, ''உன்னால் நான் மனதுள் வைத்திருந்த பெரிய கொள்கை ஒன்றே தவிடு பொடியாகி விட்டது..'' என்றான்.

''அப்படியா, அது என்ன?'' என்றாள் அவள் நம்ப முடியாமல்.

''எல்லாம் இந்த அழகு பிடிக்காது, அழகு தேவையில்லை.. என்ற என் கொள்கை தான்..'' என அவன் ஆரம்பித்து முடிப்பதற்குள் அவள் கலகலவென அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

அப்படி ஒரு குலுங்கலான கலகல சிரிப்பை முதல் முறையாய் அப்போதுதான் அவளிடமிருந்து வெளிப்படுவதைக் கண்டவன் அதையும் ரசித்தான். ''அட இப்படி கூட ஒரு சிரிப்பு சிரிப்பாயா? நன்றாக இருக்கிறதே.. மனம் விட்டு சிரிக்கும் இந்தச் சிரிப்பு கூட ஒருவித அழகாய் இருக்கிறதே?'' என்றபோது செல்லமாய் அவன் காதைத் திருகி ''அழகு தேவையில்லை..'' என பேப்பரில் எல்லாம் விளம்பரம் கொடுத்து விட்டு பெரிய கவிஞர் போல் அழகு வர்ணனை வேறா..'' என்றாள்.

அவன் சிரித்தான். ''அது இருக்கட்டும்... நீ எதற்கு அந்தக் கலகல சிரிப்பு சிரித்தாய் என்று சொல்..'' என்றான்.

''அது.. வேறு.. ஒன்றுமில்லை. நீங்கள் பேப்பரில் விளம்பரம் கொடுத்தீர்களே... ஒருவேளை அது போலவே..



நடந்து யாராவது ஆப்பிரிக்க தேசத்து அம்மணி ஒருவர் கருப்பாயி போல் உங்களைக் கல்யாணம் கட்டிக் கொண்டு.. நீங்கள் இருவரும் இப்படி ஹனிமூன் ட்ரிப் ஒன்று வந்திருந்தால்... எப்படி இருக்கும்.. என்ன நடக்கும்.. என யோசித்துப் பார்த்தேன். என்னையறியாமல் சிரிப்பு பொத்துக் கொண்டு.. '' என்றபடி மேற்கொண்டு சொல்ல முடியாமல் மறுபடியும் அந்தக் கலகல சிரிப்பை சிரித்தாள் அவள்.

அவன் ரசித்தாலும் பொய்யான கோபத்துடன், ''என்ன சொன்னாய் கருப்பாயியா? உன்னை.. உன்னை..'' என மறுபடியும் அவளை வேகமாய் அணைத்து அவள் இதழ்களில் தனது இதழ்களை வேகமாய் பொறுத்தி விட்டு விடுவித்தான்.

''அது.. அந்தக் கருப்பாயியாக இருந்திருந்தாலும் அவளையும் இப்படித்தான் செய்திருப்பேன்.. செய்து கொண்டிருப்பேன்..'' என்றான்.

அதற்கு அவள் நன்றாக உதடு சுழித்து கேலி செய்தவள், ''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். ஒருபுறம் நானும் மறுபுறம் உங்கள் கருப்பாயியும் நின்றால் நீங்கள் யார் பக்கம் செல்வீர்கள்?'' என்றாள்.

''வேறு எங்கு..? உன் பக்கம்தான்..'' என்றபடி அவள் நெஞ்சில் பொதிந்தான் அவன்.

பொதிந்தவனை வெளியெடுத்து அவன் முகம் நிமிர்த்தி, ''பின் உங்கள் அழகு கொள்கைகள் எல்லாம் என்னாயிற்று?'' என்றாள்.

''ம்ம்... அதைத்தானே சொல்ல வந்தேன்; இரு! அப்படியே என்னை ஒரு சாய்த்து இப்படி பார்க்கிறாயே.. அந்த போஸிலே இரு.. சொல்லி விடுகிறேன்..'' என்றபடி அவளை உற்றுப் பார்த்தவாறே, ''இந்த அழகான உன் பால் வெண்மை முகம், பெரிய மைவிழிகளின் அபார வீச்சு, கன்னக் கதுப்புகள் குடேற தலை சாய்த்து நீ பார்க்கும் இந்தப் பார்வை, காற்றில் உன் நெற்றியில் அழகாக படர்ந்து சிலிர்க்கும் அந்த ஸ்பரிங் முடிக் கற்றைகள், உதட்டோரத்தில் அந்தச் சிறிய நட்சத்திர மச்சம்... அது என்ன.. ஒரு வண்டிப் பூக்களை தலையில் சொரிவது போல் இதழ் விரியும் அந்த இனிமையான சிரிப்பு..'' என்றபடி அவள் முகம் சிவக்கச் சிவக்க சொல்லியவன், ''நீயே.. சொல்.. இப்படிப்பட்ட அபார அப்ஸரஸ் போன்ற அழகை ஒருத்தி வைத்துக் கொண்டு அதுவும் 'மனைவி' என்ற பெயரில் என் முன்னால் எதிரில் உட்கார்ந்து கொண்டு இருந்தால்.. கொள்கை... என்ன.. சகலத்தையும் தூக்கிப் போட்டுவிட்டு ஓடி வந்து விட மாட்டேனா? வந்து உன்னை.. இப்படி இறுகக் கட்டிப் பிடித்துக் கொள்ள மாட்டேனா..?'' என்றபடி மறுபடியும் அந்த வேகமான அணைப்பைச் செய்தபோது வெட்கத்துடன் அவன் நெஞ்சில் அப்படியே புதைந்து கொண்டாள் அவள்.

பின் நிமிர்ந்து ''அப்படியானால் எனக்காக உங்கள் அழகுக் கொள்கையை விட்டு விட்டீர்கள் அப்படித்தானே?'' என்றாள்.

அவன் அதற்கும் சிரியசாய், ''இந்த ஜென்மத்தில் விட்டு விட்டேன். அடுத்த ஜென்மத்தில் யாராவது கருப்பாயியாக



பார்த்து தேடிப் பிடித்துக் கட்டிக் கொள்கிறேன், சரியா?'' எனவும் மறுபடியும் அடக்க முடியாமல் அந்தக் கலகல சிரிப்பை உதிரவிட்டாள் அவள்.

பின் சிரிப்பை நிறுத்தி, ''நீங்கள் வேண்டுமானால் உங்கள் கொள்கையை விட்டிருக்கலாம். ஆனால் நான் விடவில்லை..'' என்றாள்.

''என்ன.. என்னை விட அசிங்கமானவன் உனக்கு கிடைக்கப் போவதில்லை... என்ற கொள்கையா?'' அவன் கேலியாகச் சொன்னாலும் சீரியசாய் அவனை முறைத்தவள், ''யார் அசிங்கம்.. நீங்களா? எவ்வளவு அழகு நீங்கள்? நெடுநெடு உயரத்துடன் ஆஜானுபாகுவான கம்பீரத்துடன் ஆண்மை பொருந்திய அழகுடன்..'' அவள் மேற்கொண்டு சொல்வதற்குள், ''அட.. என்னைக் கூட இப்படி ரசித்து வர்ணிப்பாயா? எங்கே மேலே.. மேலே.. சொல்லு பார்க்கலாம்...'' என அவன் ஆவலாகி ஆர்வம் காட்ட அவசரமாய் உதட்டைக் கடித்து வெட்கமாய் குனிந்தாள் அவள்.

''அட... பெண்களே.. இப்படித்தான். வெளிப்படையாகச் சொல்ல மாட்டீர்களே..'' என்று போலியான அலுப்புடன் சிரித்தவன், ''சரி.. நீ சொல்ல வந்ததைச் சொல்லு.. உன்னுடைய கொள்கைதான் என்ன?'' என்றான்.

''அது வேறு ஒன்றுமில்லை.. எல்லாப் பெண்களையும் போல.. கணவரோடு தனிக்குடித்தனமாய் போய் வாழ வேண்டும் என்று நினைக்காமல்... கணவரது குடும்பத் தோடு கூட்டுக் குடித்தனமாய் வாழ வேண்டும் என்பதுதான் எனது ஆசை... எனது கொள்கை..''

அவள் படபடவென... ஒரே மூச்சில் சொல்லிவிட்டு அவன் முகத்தை ஆவலாய்ப் பார்த்தாள். அவனது சிரிப்பும் கேலியுமாக இருந்த முகம் மெல்ல மாறிக் கொண்டிருந்தது.

"நீ நினைப்பது போல் அது அவ்வளவு சுலபமில்லையே கண்மணி.." என அவன் சீரியசாய் சொன்னது அவளைக் கொஞ்சம் திடுக்கிடவே வைத்தது.

"ஆனாலும் நீ.. பயப்பட வேண்டாம்.. முயற்சி செய்.." என்றான்.

"ஏன் என்னவோ மாதிரி சொல்கிறீர்கள்?" என்றாள் அவள் ஒருவித திகைப்புடனே.

அவள் பயப்படுவதை உணர்ந்தவன் அவள் தோள்களை இறுகப் பற்றி அழுத்தினான். "சே.. சே..! நீ பயப்படும் அளவுக்கெல்லாம் ஒன்றும் இல்லை. ஊர் உலகத்தில் இந்த மாமியார், மருமகள், கூட்டுக் குடும்பம், குடித்தனம், இதுபோன்ற விஷயங்கள் ஒத்துப் போவதில்லையே.. அதை வைத்துச் சொன்னேன்.." என்றதும் அவள் பயம் நீங்கினாள்.

"என்னால் முடியும்.. நான் அவர்களுடன் சந்தோஷமாய் வாழ்ந்து காட்டுகிறேன்.. எனக்கு அன்புதான் முக்கியம்.." என்றாள்.

"அன்பா.. என்ன சொல்கிறாய்?"

"சிறு வயது முதலே தாயை இழந்து விட்டதால் தாய்ப்பாசம் இன்றி வளர்ந்தவள் நான்.. உங்கள் தாயாரை எனக்குக் கிடைத்த அம்மாவாகத்தான் பார்க்கிறேன். மேலும் உங்கள் அக்கா, தங்கை என ஒரு கூட்டுக் குடித்தனமாய்



வாழ்க்கை நடத்துவது எனக்குப் பிடித்தது.. சந்தோஷத்தை ஏற்படுத்தக் கூடியது.."

"உன் பதிலைக் கேட்க எனக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. அப்படியானால் நான் கொடுத்து வைத்தவன் தான்.." என்றான் கிருபாகரன்.

"நீங்கள் மட்டுமல்ல. நானும் கொடுத்து வைத்தவள் தான். ஆனால் அதற்கு நீங்கள் ஒன்று செய்ய வேண்டும்.." என்றாள் பீடிகையாய்.

"நானா? என்ன செய்ய வேண்டும்?" என்றான் அவன் ஆவலோடு.

"உங்கள்.. அன்பு.. இந்தப் பாசம்.. எனக்கு தங்குத் தடையின்றி கிடைக்க வேண்டும். எப்போதும் என்மேல் நீங்கள் அன்பைப் பொழிய வேண்டும். என்னிடம் பாசமாக இருக்க வேண்டும். இருப்பீர்களா?" என்றாள் கெஞ்சும் குரலில்.

இம்முறை கிருபாகரன் ஹாஸ்யத்தைக் கேட்டது போல் அடக்க முடியாத சிரிப்பொன்றை சிரித்தான்.

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்றாள் அவள் திகைப்பாய்.

"நீ பேசுவது.. ஏதோ சினிமாப் படத்தில் டி.வி. நாடகத்தில் பேசும் டயலாக போல் அல்லவா இருக்கிறது?"

"ஐயோ! நான் சொல்வது நிஜம். கல்யாணம் பற்றி கனவுகளை கல்லூரி நாட்களில் காணும்போது.. இப்படித்தான் நினைத்துக் கொள்வேன். நமக்கு வருகிற கணவர் அன்பைப் பொழிய வேண்டும்.. அவர் அப்படிப் பொழியும் படி நாமும் நடந்து கொள்ள வேண்டும் என்று.."

அவள் உண்மையாகவே சொல்லுவதை அறிந்த அவன் நெகிழ்ச்சியாய் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''கண்டிப்பாக அன்பைப் பொழிகிறேன் அதற்கு முன் என் அன்பைத் தெரிவிப்பதற்காக முன்னோட்டமாய் இந்த முத்த மழையை பொழிந்து விடட்டுமா?'' என்றபடி அவள் கன்னங்களில் முத்தமிட ஆரம்பித்தான்.

மகிழ்ச்சியோடு கண்கள் சொருக அவனோடு அப்படியே ஒட்டிக்கொண்டாள் அவள். ஆனாலும் அவள் உள்ளத்தில் மெல்ல அவன் கேட்ட 'கூட்டுக் குடித்தனத்தில் உன்னால் முடியுமா?' கேள்வி திகைப்பாய் எழுந்து கலக்கத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

* * *

கல்யாணமானதும் நிர்மலா முதன் முதலாய் கவலைப்பட்ட விஷயம் 'அன்பிற்கு' என்று தான் சொல்ல வேண்டும். கிருபாகரனின் அன்பு தனக்கு மொத்தமாய் முழுசாய் கிடைக்க வேண்டும் என்றே விரும்பினாள்.

அதற்காக முதலில் அவனது விருப்பு வெறுப்புகளை அவனுக்கு என்னதான் பிடிக்கும்.. என்றெல்லாம் கேட்டு ஆராயலாம் என்று பார்த்தால் கிருபாகரன், ''எனக்குப் பிடித்தது பிடிக்காதது என்று பார்த்தால் ஒரு பெரிய லிஸ்ட்டே இருக்கிறது. கேட்டால் உன்னை அப்படியே குழப்பிவிடும்..'' என குழப்பத்தான் செய்தான்.

சரி.. இவனிடம் இனி கேட்காமலே கண்டுபிடிப்போம் என்ற முடிவுக்கு வந்தாள் நிர்மலா. கிருபாகரன் விடாமல் ''எதற்கு இதையெல்லாம் கேட்கிறாய்?'' என்றபோது



முதலில் சொல்லவா வேண்டாமா எனத் தயங்கியவள் பின் தயக்கம் நீங்கி ''எல்லாம் உங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நடந்து கொண்டு உங்கள் அன்பைப் பெறத்தான்!'' என்றாள். அவன் திரும்பி இரண்டு புருவங்களையும் உயர்த்தி கண்களை விழிக்காத குறையாய் அவளைப் பார்த்தான்.

''அட... சத்தியவான் சாவித்திரி, நளன் தமயந்திக்குப் பிறகு அந்த லிஸ்ட் முடிந்து விட்டது என்று நினைத்தேன். புதிதாய் நீ உதித்து விட்டாயா?'' என்றான் கேலிக் குரலில்.

அவள் அதற்குப் பதில் சொல்லாமல் அத்தனை பற்களையும் காட்டி புன்னகைப்பதுடன் நின்று விட்டாள்.

அவள் உள்ளுக்குள் இந்தக் கணவன் மனைவிக்குள் ஏற்படும் அன்பு பற்றி தீவிரமான ஒரு 'சைக்காலஜி' நினைப்பும் இருந்தது. பேப்பர்களில் கணவன் மனைவி பிரிவு, விவாகரத்து, கணவனைப் பிடிக்காமல் மனைவி ஓட்டம், மனைவியை அடித்து துவைத்த கணவன் போன்ற செய்திகளைப் படிக்கும் போதெல்லாம் வருத்தத்துடன் பெரும் சிந்தனைக்குப் போவாள்.

இப்படி நடப்பதற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? என நினைத்தபோது ஒரு விஷயம் அவளுக்குத் தெளிவாய்ப் புரிந்தது. கணவன் மனைவி என்று ஆகி விட்ட பிறகு அவர்களுக்குள் கண்டிப்பாய் ஏற்பட வேண்டிய **Understanding** என்று சொல்லப்படும் புரிதல், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல் இல்லாமல் போனதே காரணம் என்பதை உணர்ந்தாள்.

அப்படி ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முக்கியமாக இருவருக்கும் தேவைப்படுவது 'அன்பு' ஒன்றுதான் எனவும் அவள் கண்டுபிடித்தாள். கணவனோ அல்லது மனைவியோ.. ஒருவர் மற்றவர் மீது அளவு கடந்த அன்பு ஒன்று வைத்துவிட்டால் போதும்.

இருவரில் யார் தவறு செய்தாலும் அதை பெரிதுபடுத்தாமல், அதற்காகக் கோபப்பட்டு பெரிதாய் ரகளை செய்யாமல் சாந்தமாய் சென்று விடும் மனநிலை ஏற்பட்டு விடும் என்றும் அவள் நம்பினாள்.

மேலும் தந்தை குருநாதர் அவளுக்கு அன்பைப் பற்றி சிறு வயது முதலே அவ்வப்போது சொல்லிக் கொடுத்த விஷயங்கள் பசுமரத்தாணி போல் அவள் நெஞ்சிலும் பதிந்து விட்டன.

இப்படித்தான் கல்லூரி நாட்களில் ஒருமுறை அவளுக்கும் அவளது உற்ற உயிர்த்தோழி ஒருவளுக்கும் சிறு விஷயம் ஒன்றில் பெரிய மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது.

நெருங்கிய தோழிகளாய் இருந்தவர்கள் ஒருவரையொருவர் பாராமல் எலியும் பூனையுமாக போகுமளவுக்கு ஆகிவிட்டனர். ஆனால் கொஞ்ச நாளில் நிர்மலாவுக்கு அந்தத் தோழியிடம் பகைமை பாராட்டுவது பெரும் கஷ்டத்தைக் கொடுத்து கவலைப்படச் செய்தது.

அவள் திரும்பவும் பகைமையை எல்லாம் மறந்து அந்தத் தோழியுடன் முன்பு போல் நெருக்கமாக நட்பு கொள்ள விரும்பினாள். அதனால் எவ்வித ஈகோவும் பார்க்காமல் வலியப் போய் அவளே பலமுறை அவளிடம் பேச முயல..



எதிரியைக் கண்டதுபோல் முகம் வெட்டிச் சென்றாள் அந்தத் தோழி.

ஒருநாள் இந்த விஷயத்தை தாங்க முடியாமல் அவள் தந்தையிடமும் சொல்லிவிட.. அவளுக்கு ஒரு அருமையான யோசனையை கொடுத்து செய்து பார்க்கும்படி சொன்னார் குருநாதர்.

அதன்படி நிர்மலா தினமும் அந்தத் தோழியைப் பார்க்கும்போதெல்லாம் தன்னிடம் பகைமையெல்லாம் இல்லை.. அன்புதான் இருக்கிறது என்பது போல் அன்பைக் காட்ட வேண்டும். அப்படி அவளது அன்பைத் தெரிவிக்க இதழ்கள் முழுவதும் விரிந்த வசீகரச் சிரிப்பு ஒன்றை அவள் சிரிக்கவேண்டும்.

குருநாதர் விளக்கமாய் அவளுக்கு சொல்லிவிட, அந்த டெக்னிக்கை மறுநாள் முதலே அந்தப் பகைமைத் தோழியிடம் செய்து பார்த்தாள் நிர்மலா.

அவளை எப்போது பார்த்தாலும் சரி பூத்துக் குலுங்கியது போலான ஒரு வசீகரச் சிரிப்பை அவளை நோக்கி தவழ விட்டாள். அந்தத் தோழியும் வெடுக் வெடுக்கெனத்தான் முதலில் முகம் சுண்டிப் போனாள்.

நிர்மலா விடவில்லை. தொடர்ந்து தனது புன்னகையை சிந்தினாள். தன் அன்பை தெரிவித்தாள். ஒரு பதினைந்து நாள் சென்றிருக்கும். அந்தத் தோழியால் அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பதினாறாம் நாள் நிர்மலா அந்தச் சிரிப்பு சிரித்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள். தாங்க முடியாமல் அழுதே போய்விட்டாள்!

அன்றிலிருந்துதான் தந்தை சொன்னது எவ்வளவு நிஜம் என்று உணர்ந்தாள்.

ஆனால் தந்தையோ, "இதை நான் ஒன்றும் சொல்லவில்லையம்மா, என் ஆசான் திருவள்ளுவர் அழகுபடக் கூறியிருக்கிறார். 'அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ் என்று..." என விளக்கிச் சிரித்தார்.

அது முதல் நிர்மலாவுக்கு 'அன்பு' பற்றிய எண்ணம் தீவிரமாய் இருந்தது. அன்பு தான் ஒரு சரியான ஆயுதம், கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று என்று சொன்னால் அது அன்பால் தான் முடியும் எனவும் நம்பினாள்.

அதனாலே பேப்பரில் கணவன் மனைவி விவாகரத்து செய்திகளைப் பார்க்கும்போது இவையெல்லாம் அன்பு பற்றாக்குறையால் வெளிப்படும் விளைவுகளே., என முடிவும் செய்தாள்.

அந்த நினைப்பில்தான் அவள் உள்ளுக்குள் அவளை யறியாமல் அந்தத் 'திட்டமிடுதல்' ஒன்றும் உருவாயிற்று. அதாவது, நாளை கல்யாணம் என்ற ஒன்று அவளுக்கும் நடந்த பிறகு வரப் போகும் கணவனை இந்த அன்பைக் கொண்டு குளிப்பாட்டி திக்குமுக்காட வைத்துவிட வேண்டும் என முன்பே கணக்குப் போட்டு வைத்திருந்தாள் அவள்.

அப்படி அன்பில் குளிப்பாட்டி திணறத் திணற வைத்து விட்டால், பதிலுக்கு அவனும் அன்பைத்தான் அவளை நோக்கி வீசியாக வேண்டும். ஏனெனில் அன்புக்கான விலை இன்னொரு 'அன்பு'தான்! வேறு எதுவும் அதற்கு



ஈடாக முடியாது. யார் எதைக் கொடுத்தாலும் அதை சரிப்படுத்த முடியாது. அன்பிற்கு அன்புதான் ஈடாக முடியும்.

அதனாலே கிருபாகரனிடம் தன் அன்பு முழுவதையும் முதலில் காட்டி விட்டால் பதிலுக்கு அவனும் தன் அன்பு முழுவதும் முழுமையாக அவளுக்கு உணர்த்த ஆரம்பித்து விடுவான்.

அப்படி ஒரு மனக் கணக்கு அவள் கொண்டிருந்த தால்தான் கிருபாகரன் தன் விருப்பு வெறுப்புகளை அவளிடம் சொல்லாத போதும் அவனை தேடிக் கண்டுபிடித்து அறிந்தும் கொண்டாள்.

அவனுக்கு வீட்டில் அலுவலக பைல்களைக் கொண்டு சரி பார்த்துக் கொண்டிருக்கும்போது யாரும் தொந்தரவு செய்வது பிடிக்காது என்பதை அறிந்ததும் அவன் வேலையாய் இருக்கும்போது அவன் பக்கமே போக மாட்டாள்.

அவனுக்கு நேரம் தவறாமை முக்கியம். ஆறு மணிக்கு காபி, எட்டு மணிக்கு டிபன் என்றால் சரியாய் அந்தந்த மணிக்கு ரெடியாய் இருக்க வேண்டும். அதையறிந்து பம்பரமாய்ச் சுழன்று காலை முதல் இரவு வரை அவனுக்கான பணிவிடைகளை சரியான நேரத்தில் செய்து அவனது பாராட்டுதலையும் பெறுவாள்.

கிருபாகரனுக்கு எப்போதும் சிரித்த முகம்தான். அதனாலே அவனுக்கு 'சிடுமூஞ்சு'க் காரர்களையோ சிரிக்காதவர்களையோ கண்டால் பிடிக்காது. எரிச்சலாகவே

பார்ப்பான். நிர்மலாவின் பூவிதழ் புன்னகை அழகானது என்றாலும் அதற்காக அவள் எப்போதும் சிரித்தபடியே இருக்கும் முகத்தை வைத்திருக்கும் வழக்கம் கிடையாது.

ஆனால் கிருபாகரனுக்காக மாறிக் கொண்டாள் அவள். கண்ணாடியின் முன் நின்று வெவ்வேறு போஸில் தனது பூவிதழ் புன்னகையை சிரித்துப் பழகி அழகான 'சிரிப்பு' ஒன்றையும் தேர்ந்தெடுத்துக் கொண்டாள் அவள்.

அந்தச் சிரிப்பை அப்படியே தன் முகத்தில் வலுக் கட்டாயமாய் ஒட்டவைத்துக் கொண்டு எப்போதும் நடமாட ஆரம்பித்தாள் அவள்.

கிருபாகரனும் தற்செயலாய்ப் பார்த்து அதைக் கண்டு பிடித்தவன், "வாவ்! அழகான அழகோடு சிரிப்பு ஒன்றும் சேர்ந்து கொண்டு கண்கொள்ளாக் காட்சியாகி விட்டதே.. எதனால் இந்த மாற்றம்?" என்றான் ஆச்சரியமாய்.

"நான் உஜாலாவுக்கு மாறி விட்டேனே!" எனக் கேலியாய் சொல்லியபடி மறுபடியும் அந்தச் சிரிப்பைச் சிரித்துக் கொண்டு ஓடினாள் அவள்.

ஓடியவள் சற்றுத் தள்ளி கதவொன்றின் மறைவுக்குப் போய் நின்று அவன் பார்வையில் படாத வண்ணம் திரும்பிப் பார்த்தாள். அவன் கிருபாகரன் அப்படியே நின்று கொண்டு.. அவள் சென்ற திசையையே ரசனையோடு பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஆக.. அவன் அப்படி ரசனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறான் என்றால்.. அது.. அது... அவன் ரசிக்க ஆரம்பித்து விட்டான் என்று தானே அர்த்தம்? அதுதானே



அவளுக்கு வேண்டும்? எவன் ஒருவன் தன் மனைவியை, மனைவியின் செயல்களை ரசிக்க ஆரம்பித்து விட்டானோ... அன்றே அவன் அவளை புரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டான் என்று தத்துவ ஞானிகள் சொல்வார்களே.. அதுபோல் அவள் விஷயத்தில் நடந்து விட்டதே! அப்படியானால் அவள் ஜெயித்து விட்டாள் தானே!

மகிழ்ச்சி மிகுதியானவளாய் ரத்தச் சிவப்பேறும் அளவுக்கு உதடுகளை அழுந்தக் கடித்தாள் அவள். துள்ளிக் குதிக்க வேண்டும் போலவும் இருந்தது.

அடக்கிக் கொண்டு மறுபடியும் மறைவிலிருந்து வெளிப்பட்டு கிருபாகரன் முன் போய் நின்றாள். "என்னைப் பிடிக்கிறதா?" என்றாள் கிளிப்பிள்ளை போன்ற குரலில்.

வேண்டுமென்றுதான் இப்படி ஒரு கேள்வியை அவனிடம் அவள் கேட்டாள் என்று சொல்ல வேண்டும். அதற்கு அவன் எப்படி எவ்வாறு பதில் சொல்ல வேண்டும் என்று உள்ளுக்குள் ஒரு எதிர்பார்ப்பு வேறும் வைத்திருந்தாள். அவள் எதிர்பார்ப்புப்படி நடக்கிறதா, அவன் நடந்து கொள்கிறானா என அவனுக்கு ஒரு டெஸ்ட் இது!

என்ன ஆச்சரியம்! அவள் நினைத்ததுபோலவே நடந்தது. அவளது கேள்விக்கு எந்தவித பதிலும் சொல்லாமல் மூச்சு முட்டுமளவுக்கு அவளை இறுக்கமாய் ஒரு அணைப்பு செய்து விடுவித்தான் கிருபாகரன். கூடவே திருவாயைத் திறந்து, "இதோ பார், இனி இதுபோன்ற கூமுட்டைத்

தனமான கேள்விகளைக் கேட்டால் இப்படிப்பட்ட பதில்தான் கிடைக்கும்!" என்ற மிரட்டல் வேறு.

அவன் பிடியிலிருந்து விலகி ஜன்டகன் ஆட துள்ளிக் குதித்து முகம் சிவக்க உள் ரூமிற்கு ஓடினாள் அவள்!



## 8

தினமும் இரவு எப்போது பேசினார்கள்... எப்போது பேசி முடித்தார்கள்... எப்போது தங்களை மறந்து அயர்ந்து தூங்கினார்கள் என்றெல்லாம் நிர்மலாவுக்கு ஞாபகமில்லை.

ஆனால் அவ்வப்போது கிருபாகரன் மென்மையாய் அவள் நெற்றியில் முத்த மிட்டு 'குட்நைட்' சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அதற்கு முன் அவள் கைகளை வருடியபடி, 'மற்ற விஷயங்களுக்கு அவசரமில்லையே? இன்னும் கொஞ்சம் புரிந்து கொண்ட பின் முன்னேறலாம் என பார்க்கிறேன்' என்று சொன்னது அதன் அர்த்தத்தை உணர்ந்து அவள் முகம் சிவந்து எல்லாம் திரும்பவும் ஞாபகத்தில் ஓடியது.

அவன் நெற்றியில் இதமாய் முத்தமிட்டதும் அவள் அவன் மார்பில் கோழிக் குஞ்சாய் ஒண்டிக் கொண்டதும், பதிலுக்கு அவனை மலர்க் குவியலை நெஞ்சோடு இறுக்குவது போல் நோகாமல் தனது கரங்களால் அவளை வளைத்து அவன் அணைத்துக் கொண்டதும், 'இந்த சுகம் ஒன்று போதுமே!' என அவள் கிறங்க வைத்து அவள் மைவிழிக் கண்களை துயில் கொள்ளவும் செய்தது.

மீண்டும் அதிகாலை வழக்கமான ஐந்தரைக்கு அவளுக்கு விழிப்பு தட்டி விட்டது. மெல்ல இமைகளைப்



பிரித்தவள், நேற்று வரை இல்லாமல் இன்று திடீரென யாரோ ஆடவன் ஒருவன் நெஞ்சில் பொதிந்து படுத்துக் கொண்டு.. என திடுக்கிடலாய் ஒரு கணம் நினைத்து மறுகணம் தொங்கிக் கொண்டிருந்த தாலிச் சரடைப் பார்த்து அமைதியானாள்.

கல்யாணம் என்பது ஒரே நாளில் அவளையே, அவளின் அடிப்படையையே மாற்றி விடுகிறதே என்று எண்ணினாள்.

மேலும் அவள் நெஞ்சில் பொதிந்து கிடந்த ஆடவன் யாரோ இல்லையே.. கிருபாகரன்தானே! அவளது இனிய கிருபாதானே!

இரவு முழுவதும் அவன் நெஞ்சில் படுத்தா தன்னை மறந்து துயில் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்ததும் கன்னக் கதுப்புகள் சூடேற முகம் சிவக்கலானாள் அவள்.

அவள் மட்டுமா அப்படி? அவனும் இதமாய் வளைத்து அணைத்திருந்த அவனது பிடியை விடவில்லையே? மெல்ல நிமிர்ந்து விழிகள் படபடக்க அவன் முகத்தைப் பார்த்தாள்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் அவன். தூங்கும்போது கூட ஒரு பொலிவு.. முகத்தில் ஆண்மை பிறக்கும் ஒரு கம்பீரம்... இது எல்லா ஆண்களுக்கும் உரியதா அல்லது இவன் இவனுக்கே மட்டும் உரித்த ஸ்டைலா.. எனவும் திகைப்பாய் அவள் நினைப்பு ஓடியது.

அந்த திகைப்புடனே மெல்ல முகம் நிமிர்த்தி மெல்லவே அவள் கரங்களை விடுவித்து அவள் உறக்கம்

கலையா வண்ணம் அவன் பிடியில் இருந்து வெளியே வந்தாள்.

அவளது நெற்றித் திலகமெல்லாம் சிவப்பாய் அவன் நெஞ்சில் கோலமிட்டிருந்ததைப் பார்க்கையில் அவள் மெல்லிதழ்களில் வெட்கமான சிரிப்பு பரவியது. கலைந்திருந்த முடியையும், உடைகளையும் சரி செய்து கொண்டாள்.

கட்டிலை விட்டு ஓசையில்லாமல் இறங்கி கீழே கால்களை வைத்தாள். சட்டென வீட்டு நினைப்பு ஓடியது. இந்நேரம் தங்கை நீலாவும் அலாரம் வைத்து எழுந்திருப் பாள். பால் பூத்திற்குச் சென்று பால் வாங்கி விட்டு.. வாசல் தெளித்து.. கோலமிட்டு.. காலை டிபன் செய்துவிட்டு அவள் பள்ளிக்குக் கிளம்ப வேண்டும்.

சின்னப் பெண்.. சுமை தாங்குவாளா? என இதுபற்றி முன்பேதான் சிந்தித்து தவித்தபோது ஆறுதலாய் தந்தை சொன்ன வார்த்தைகள் அவள் நினைவில் ஓடியது. "நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம் அம்மா. கடையில் தான் இப்போது பாக்கெட் பாக்கெட்டாய் தோசை மாவு வரை விற்கிறார்களே..? அதை வைத்து கல்லில் இரண்டு இழுப்பு இழுத்தால் தோசை ரெடி. இதுவெல்லாம் எனக்குத் தெரியாததா? நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? நீ கவலையை விடு!"

தந்தையின் வார்த்தைகளை மனதில் ஓடவிட்டு தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டு மெல்ல எழுந்து நடந்தாள்.



அதேபோல் ஓசையில்லாமல் கதவின் பிடியைத் திறந்து வெளிவந்தபோது கீழே முன்புற வாசல் பக்கம் லைட் வெளிச்சம் தெரிந்தது.

கிருபாகரனுடைய வீடு மேலே மாடியில் இரண்டு அறைகள். கீழே மூன்று அறைகள் எனக் கூடிய விஸ்தார மான வீடு. மாடியின் ஒரு அறையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்க.. எதிர் அறையில் அக்கா யாமினிக்கு எனவும் ஏற்பாடாயிருந்தது.

கீழ் அறைகளில் மாமியார் அன்னபூரணி, தங்கை மல்லிகா, ஒன்றுவிட்ட சித்தி கவிதா என தங்கிக் கொண்டனர். ரூமை விட்டு வெளிவந்த நிர்மலா முதலில் குளியலறையில் நுழைந்தாள்.

முன்புற வாசலில் அன்று முதலே பொறுப்புகளை ஏற்று கோலமிட வேண்டும் என்பது அவள் எண்ணம். நமக்கு முன் மாமியார் எழுந்து விடக் கூடாதே.. என்ற அவசரத்துடன்தான் வேக வேகமாய் குளித்து பூத்துவாலை டவலால் தலையைச் சுற்றிக் கொண்டபின் கிண்ணக் கோலத்துடன் முன்புறம் வந்தாள்.

அவள் நினைப்பு சரிதான். மாமியார் அன்னபூரணி முன்பே எழுந்து வாசல் தெளித்து கோலமிட்டு.. அன்றைய தினப் பேப்பரை மூக்குக் கண்ணாடியுடன் தனது இடுங்கிய கண்களால் வாசித்தபடி உட்கார்ந்திருந்தாள்.

நிர்மலாவுக்கு ஒரு கணம் சங்கடமாய் போய்விட்டது. எதைச் செய்யலாம் என்று நினைத்து ஆவலாய் ஓடி

வந்தாளோ.. அது முதல் நாளே செய்ய முடியாமல் போய்விட்டதே!

அத்தையிடம் சொல்லிவிடலாமா... நாளை முதல் இந்த வேலைகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என நினைத்தவள் அப்படியே அன்னபூரணியின் பக்கம் போனாள்.

அவள் வந்ததை அப்போதுதான் உணர்ந்த அன்னபூரணி நிமிர்ந்து, "வாம்மா.." என புன்னகை பூத்தாள்.

"அத்தை, நான் தெளித்து கோலம் போடத்தான் அவசரமாய் வந்தேன் அதற்குள் கொஞ்சம் லேட் ஆகிவிட்டது.." என்றாள் திக்கித் திணறி.

"கொஞ்சம் இல்லை, ரொம்பவும் லேட் ஆகிவிட்டது. எனக்குத் தெரிந்து நாற்பது வருஷமாய் இந்த வீட்டில் காலை ஐந்து மணிக்கு டாணென்று தெளித்து கோலமிடுவது வழக்கமாய் இருக்கிறது. நீ சின்னப் பெண், தாயில்லாதவள் வேறு, உனக்கு எங்கே தெரியப் போகிறது?"

அன்னபூரணி சொன்ன வார்த்தைகளில் சிலவை ஊசி குத்தலாய் மனதை சட்டென குத்தியது போல் உணர்ந் தாலும் வெளிக்காட்டாதவளாய் மறுபடியும் புன்னகைத் தாள்.

"இல்லை, நாளை.. நான் சீக்கிரமே எழுந்து வந்து.." என அவள் வார்த்தையை முடிக்கவில்லை, அன்னபூரணியிடம் இருந்து தெறித்தாற் போல் வார்த்தைகள் வந்து விழுந்தத.



"முதலில் காலையில் சீக்கிரமாக எழுந்து பழகு... அதற்குப் பின் மற்றதைப் பார்க்கலாம்.."

முகத்திலடித்தாற் போன்றான பேச்சு, நிர்மலா இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அன்னபூரணி சொல்லியபடி சட்டென சேரில் இருந்து எழுந்து சென்று விட்டாள்.

ஒருவேளை காலையில் சீக்கிரமே எழுந்து வந்து வாசல் தெளிக்காதது மாமியாருக்குக் கோபத்தை உண்டு பண்ணி விட்டதோ.. என நிர்மலா நினைத்தாள்.

நாளை சீக்கிரமே எழுந்து வேலையைச் செய்து விட்டால் சரியாகி விடும் எனவும் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அதன் பின் சமையலறைக்குச் சென்று சிறு சிறு வேலைகளைச் செய்துவிட்டு காபி தயார் செய்து கிருபாகரனுக்கு கொண்டு போனாள்.

அப்போதுதான் கட்டிலில் இருந்து எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டிருந்தான் கிருபாகரன்.

அவளைப் பார்த்ததும் பளீரென வசீகரப் புன்னகை செய்து "ஹாய் குட்மார்னிங்" என்றதும் அவளுக்கும் அவனது உற்சாகம் தொற்றிக் கொண்டது.

"நான் முதன் முதலாக உங்களுக்குத் தரும் சூடான காபி..." என்றபடி கோப்பையை அவனிடம் நீட்டினாள். கூடவே "காபி எப்படி இருக்கிறது.. சுவையாகவா.. இல்லையா.. என்பதை கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும்.." என்றாள் குரலை உயர்த்தியபடி.

அவன் அதே சிரிப்புடன் கோப்பையை வாங்கியவன், "இதோ, இப்போதே குடிப்பதற்கு முன்பே சொல்லி விடுகிறேன். காபி.. ஏ.. ஒன்! சூப்பர்..! நன்றாக அற்புதமாக இருக்கிறது.." என்று சொன்னதோடு நில்லாமல் அவளை நோக்கி கண் சிமிட்டியபடி, "பார்த்தாயா? கல்யாணம் முடிந்த மறுநாளில் இருந்து கணவன்மார்களுக்கு நன்றாக பொய் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது பார்த்தாயா?" என்றான் சிரிப்பு பொங்க.

"ஐயோ! நீங்கள் ஒன்றும் பொய் சொல்ல வேண்டாம்.. உண்மையிலேயே.. உண்மையாகவே.. நான் போடும் காபி.." என அவள் சீரியசாய் ஆரம்பிக்க அவளை தன் மறு கரத்தினால் இழுத்து பக்கத்தில் உட்கார்த்தி வைத்து தோளோடு இறுக்கியவன், "இரு, குடித்துவிட்டு சொல்கிறேன் டார்லிங்.." என்றபடி தனது உதடுகளால் ரசித்து உறிஞ்சினான்.

அதை ஆவலாய்ப் பார்த்த அவள் பக்கம் திரும்பி, "உன் கைப் பக்குவமே தனிதான். நல்ல காபி ஒன்றைப் போட்டுக் கொடுத்த இந்தக் கைகளுக்கு அன்புப் பரிசு உண்டு" என்றபடி அவள் பிஞ்சு விரல்களை எடுத்து ஆசையாய் முத்தம் கொடுத்தான். சிலிர்த்துத்தான் போனாள் அவள்.

கணவனின் சிறிய பாராட்டு கூட அவளை பெரிதும் உவகைப்படுத்தி மகிழ்ச்சியை உண்டு பண்ணியது. அன்று முழுவதும் அதே மகிழ்ச்சியுடன் நடமாடினாள்.

சொல்லப் போனால் கிருபாகரனும் அவளைக் கவனித்து அவளுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் உற்சாகம் வரும்படி அவள் சந்தோஷமாய் இருக்கும்படி பார்த்துக் கொண்டான்.



அவனது செய்கையை அவள் ஆச்சரியமாய் பார்த்தபோது, "இவ்வளவு வருடங்கள் வாழ்ந்த வீட்டை சொந்தங்களைப் பிரிந்து வந்திருக்கிறாய். உன் மனதுக்கு கஷ்டமாகத்தானே இருக்கும். அதான் என்னால் ஆன முயற்சி.." என அதற்கும் விளக்கமளித்து பதில் கொடுத்தான்.

நமக்காக, நம்மை எண்ணி இவ்வளவு கவலைப்படுகிறானே.. என நிர்மலாவுக்கு பெருமிதமாகவும் இருந்தது. அன்றும் அடுத்து வந்த இரண்டு நாட்களும் கோவில், நண்பர்கள், உறவினர்கள் வீடு, விருந்துச் சாப்பாடு என்பதிலே கழிந்தது.

நாலாவது நாள் மாலை அவளை வெளியே ஷாப்பிங் அழைத்துச் செல்வதற்காக கிருபாகரன் கிளம்பினான். அப்போதுதான் புதிதாய் பிரச்சினையொன்று முளைத்தது. அக்கா யாமினி கீழிறங்கி வந்தவள் அவள் புதுச்சேலையுடன் நிற்பதைப் பார்த்து, "என்ன ஷாப்பிங் செல்கிறீர்களா? நானும் வருகிறேன்.." என்றபடி கிளம்பி விட்டாள்.

கிருபாகரனும் அவளும் தனியே அதுவும் முதன் முறையாக ஷாப்பிங் போகிறோம் என குஷியாய் நினைத்தவளுக்கு சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது.

இருந்தும் வெளிக்காட்டாமல், "வாருங்கள்!" என்றாள். கிருபாகரன் கிளம்பியவனும் யாமினியுடன் உடன் தொற்றுவதைப் பார்த்து ஒரு நிமிடம் முகம் மாறியவன், மறு நிமிடமே "தாராளமாக வரட்டுமே.." என்று சொல்லி விட்டான்.

வெளியே கிருபாகரனின் புது ஹோண்டா பைக் தயாராய் இருந்தது. அதில் தான் போகப் போகிறோம் என

நிர்மலாவுக்கு உற்சாகம் இருந்தது. கிருபாகரன் வேகமாக ஓட்ட, அவன் இடுப்பை அணைத்தபடி அவள், "மெதுவாக.. மெதுவாக.. செல்லுங்கள்" எனச் சொல்ல, வேண்டுமென்றே அவளுக்கு பயம் கொடுக்க.. அவன் மேலும் வேகத்தை அதிகரிக்க.. அவள் பொய்க் கோபத்துடன் அவன் இடுப்பைக் கிள்ள.. அவன் சிரிப்புடன் வேகத்தைக் குறைக்க.. இப்படி ஒரு சுகமான அனுபவம்தான் நேற்று அவனுடன் உறவினர் ஒருவர் வீட்டு விருந்துக்குச் செல்லும்போது கிடைத்தது.

அதேபோல் இன்றும் தனக்கு ஏற்படும் என்று நினைத்து ஆசையாய் இருந்தவளுக்கு யாமினி வருவது பூஜை வேளையில் கரடி சொற்றொடரையே ஞாபகப்படுத்தியது.

மூன்று பேர் செல்ல வேண்டும் என்பதால் பைக்கை விட்டு விட்டு ஆட்டோ ஒன்றைப் பிடித்து வந்தான் கிருபாகரன். முதலில் நிர்மலா ஏறி சீட்டில் அமர்ந்து கொண்டாள். அடுத்து கிருபாகரன் ஏறுவதற்குள் முந்திக் கொண்டு யாமினி படக்கென ஏறினாள்.

கிருபாகரன் வேறு வழியில்லாது யாமினியின் மறுபுறமே உட்கார.. தன் பக்கத்தில் அவன் அமர்வான் என எதிர்பார்த்த நிர்மலாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

திரும்பி தனக்கும் கிருபாகரனுக்கும் இடையே நந்தி போல் உட்கார்ந்திருந்த யாமினியை முறைக்கத்தான் செய்தாள். என்ன பெண் இவள்! இந்தச் சின்ன இங்கிதம் கூட தெரியாது? இவளும் கல்யாணமாகி கணவனோடு குடித்தனம் நடத்தியவள்தானே! புதுமணத் தம்பதிகளை அவர்களை சேர்த்து உட்கார வைக்க வேண்டும் என்கிற



சாதாரண விஷயம் கூடவா இவள் மண்டையில் உரைக்கவில்லை!

ஆனால் யாமினியோ எதுபற்றியும் கவலைப்படாமல் பராக்குப் பார்த்தவாறு சளசளத்துக் கொண்டிருந்தாள். எல்லாம் அவளது துபாய் புராணம்தான்! கணவனோடு அங்கு அவள் இரண்டு வருடம் துபாயில் கழித்த நாட்களை நிர்மலா வந்ததில் இருந்தே சொல்லிக் கொண்டுதான் இருக்கிறாள். அங்கு துபாயில் ஒரே சுத்த மயமாம்! சாலைகள் எல்லாம் பளபளப்பாய், கட்டிடங்கள் எல்லாம் பெரிது பெரிதாய், தண்ணீர், மின்சாரம் மளிகைப் பொருட்கள் வீட்டுத் தேவைகள் எல்லாம் அங்கு தங்கு தடையின்றி உடனுக்குடன் கிடைக்குமாம்..! இப்படி பலமுறை யாமினி சொல்லிச் சொல்லியே நிர்மலாவுக்குப் புளித்துப் போய் விட்டது.

இந்த துபாய் புராணத்தை நிறுத்த மாட்டாளா? என்றுதான் எண்ணுவாள். அன்றும் அதேபோல் அறுத்தபடி வந்தாள் யாமினி. கிருபாகரன் எப்போதும் போல் யாமினியின் பேச்சை சட்டை செய்யாது வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். என்ன இருந்தாலும் நாத்தனாராயிற்றே... மதிப்புக் கொடுக்க வேண்டும்.. என வேறு வழியில்லாது எரிச்சலோடு 'உம்' கொட்டிக் கொண்டு வந்தாள் நிர்மலா.

கிருபாகரனுக்கும் உள்ளூர எரிச்சல்தான். அவனது திட்டம் ஷாப்பிங் செய்கிறோமோ இல்லையோ, நிர்மலாவைக் கூட்டிக் கொண்டு இரண்டு மூன்று ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் ஏறி இறங்கிட வேண்டும் என்பதுதான்.

காபி ஷாப், ஐஸ்க்ரீம் பார்லர் என்று இருக்கிறதே.. அங்கங்கே உட்கார்ந்து கொறித்துக் கொண்டு நிர்மலாவுடன் பேசிக் கொண்டு பொழுதைக் கழிப்பது எனத் தான் திட்டமிட்டிருந்தான்.

ஆனால் யாமினி வந்ததும் அவன் திட்டத்தை அடியோடு மாற்ற வேண்டியதாயிற்று. யாமினியை வைத்துக் கொண்டு நிர்மலாவும் கொஞ்சிக் குலவி பேசவா முடியும்! சும்மாவே யாமினி வாயாடி. சாதாரண பேச்சைக் கூட நிர்மலாவிடம் பேச விடமாட்டாளே.. இப்போது என்ன செய்வது? என தவித்தான்.

தவித்தவன் அப்படியே திரும்பி நிர்மலாவைப் பார்க்க அவளும் அதேபோல் திரும்பி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்திலும் தன்னைப் போலவே ஒருவித பரிதவிப்பு ஓடுவதைக் கவனித்தவன் 'கொஞ்சம் பொறுத்துக் கொள்' என்கிற தொனியில் மெல்ல கண் இமைகளை மூடி அவளுக்கு ஜாடை செய்தான்.

அவனது ஜாடையை நொடியில் புரிந்து கொண்ட நிர்மலா அதை ஏற்றுக் கொள்பவள் போல் மெல்லிதழ் களில் சிரிப்பை உதிரவிட்டாள். அத்தோடு கிருபாகரன் விடவில்லை. கண்களால் அவள் கட்டியிருக்கும் ஆரஞ்சு வண்ண பூனம் ஸேரியில் படர விட்டான். அவளது நிறத்திற்கு ஏற்றாற் போல் அழகாய் உடம்பை ஒட்டி நளினமாய் அவளைக் காட்டியது. கண்களால் மேலும் கீழும் பார்வையால் அவளை வருடி விட்டு, "இந்தச் சேலையில் நீ ரொம்பவும் அழகு!' என்பதுபோல் கண்களை அகல விரித்து ஜாடையாலே புரிய வைத்தான்.



அட.. கண்களால் இப்படியெல்லாம் பேசும் கலையை கற்று வைத்திருக்கிறானே என அதிசயித்து வியந்தவள் அதேபோல் அவனது ட்ரஸ்ஸிலும் பார்வையை ஓட விட்டு, அவன் அணிந்திருந்த ப்ளூ நிற டீ ஷர்ட், ஜீன்ஸ் அழகாக இருப்பதாய்.. அவனைப் போலவே தனது மைவிழிகளை விரித்து ஜாடை செய்தாள்.

அவள் ஜாடை காட்டியதின் அர்த்தத்தை புரிந்தவன் அதோடு விடவில்லை. அவளைக் கேலி செய்யும் நோக்கில் டீ ஷர்ட்டுக்குள்ளிருந்த பனியனைக் காட்டினான். பின் ஜீன்ஸுக்குள் இருக்கும் உள்ளாடையை ஞாகப்படுத்துவது போல் காட்டிவிட்டு.. இரண்டும் எப்படி இருக்கிறது..? என ஜாடையாலே கேட்க, அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. க்ளுக்கென சிரித்து விட்டாள்.

யாமினி வழக்கம் போல் சளசளத்துக் கொண்டிருந்தவள் திடீரென நிர்மலா களுக் கென சிரிப்பதைப் பார்த்து திகைத்துப் போக.. கிருபாகரன் ரசனையாய் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"என்னாயிற்று நிர்மலா.. திடீரென சிரிக்கிறாய்? என்ன விஷயம்?" என யாமினி பரபரக்க, நிர்மலா "அது வேறு ஒன்றுமில்லை.. ஒரு பழைய ஜோக் ஞாபகம் வந்தது. அதை நினைத்தேன் சிரிப்பு வந்து விட்டது.." என ஒருவாறு சொல்லி சமாளிக்கப் பார்த்தாள்.

அதற்குள் கிருபாகரனும் சிரித்தவன் நிர்மலாவைக் காப்பாற்றும் விதமாய், "காம்ப்ளெக்ஸ் வந்து விட்டது. இங்கு

இறங்குவோம்'' என பேச்சை மாற்றி ஆட்டோவை நிறுத்தச் சொன்னாள்.

எல்லோரும் இறங்கினார்கள்.

கிருபாகரன் அழைத்துக் கொண்டு அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்சினுள் நுழைந்தான்.

அங்கு நிறைய பியூட்டி ஷாப்கள், மேக்கப் ஒப்பனைப் பொருட்கள், பர்ஃப்யூம்கள் என பலதரப்பட்ட கடைகள் இருக்க அவர்களை அங்கு போய் நிறுத்தினான்.

"இருவரும் போய் உங்களுக்கு வேண்டியதை ஷாப்பிங் செய்து வாருங்கள். நான் இங்கே நிற்கிறேன்..'' என்றபடி போகச் சொன்னான்.

அவன் சொன்னதுதான் தாமதம் யாமினி அவள் பாட்டுக்குத் திரும்பி நிர்மலாவின் கைகளை பிடித்து தரதரவென இழுக்காத குறையாய் அழைத்துச் சென்றாள். நிர்மலாவுக்கு ஒரே எரிச்சல். கிருபாகரன், வராமல் அவனுக்கு என்ன ஷாப்பிங்... என குமைய அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாதவளாய் அவளை ஒரு காஸ்மெட்டிக் கடைக்குள் இழுத்துச் சென்று விட்டாள் யாமினி.

அரை மணி நேரம் சென்றிருக்கும். யாமினி தனக்கு வேண்டிய க்ரீம்கள், லோஷன்கள், சென்ட் வகையறாக்கள் என தேடிப் பிடித்து வாங்கினாள்.. இவள் நீள மூஞ்சிக்கு நாற்பது வயது முகத்திற்கு இதுவெல்லாம் தேவையா? என்பது போல் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள் நிர்மலா.



அவளுக்கு அதைவிட வெளியே கிருபாகரன் தனியே பொழுது போகாமல் நின்று கொண்டிருப்பானே.. எனவும் தவிப்பாக இருந்தது.

ஒரு வழியாய் அரை மணி நேரத்தில் யாமினி வாங்கி முடித்தாள். கவுண்டருக்கு வந்து பில்லுக்குப் பணம் கொடுக்க கிருபாகரனைத் தேடினாள். தள்ளி வராண்டாவில் நின்ற அவனைக் கத்திக் கூப்பிட்டு வரச் செய்தாள்.

நிர்மலாவிற்கு ஒருபுறம் ஆத்திரமாகவும் இருந்தது. 'புருஷன் துபாயில் இருக்கிறார்.. துபாயில் இருக்கிறார்.. என அடிக்கடி பீற்றிக் கொள்கிறாளே.. அந்தத் துபாய் புருஷன் மாதா மாதம் அனுப்பும் பணத்தில் பொருட்களை வாங்க வேண்டியதுதானே..? எதற்கு கிருபாகரனுக்கு செலவு வைக்க வேண்டும்?' என நினைத்தாள்.

அவள் அப்படி நினைப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. கிருபாகரன் தன்னைக் கட்டிக் கொண்ட பிறகு அவனது முதல் செலவு செய்வது அவன் முதலில் வாங்கித் தருவது தனக்குத்தான் கிடைக்க வேண்டும் என ஆசைப்பட்டிருந்தாள். அதை இந்த யாமினி தட்டிப் பறித்துவிட்டாளே! இவளை என்ன செய்வது?

நிர்மலா தனக்கென்று ஒன்றும் வாங்காததையும், அவள் முக வாட்டத்தையும் பார்த்தே அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டான் கிருபாகரன்.

அவன் என்ன செய்ய முடியும்? சொல்லப் போனால் அவனுக்கும் அதே எரிச்சல்தானே!

இருந்தாலும் புரிந்து கொண்டவனாய் நடந்தான். "நிர்மலா, என்ன உனக்கென்று ஒன்றும் எடுக்க வில்லையா?" என்று கேட்டுவிட்டு அத்தோடு விட்டு விட்டான்.

பின் எதிரே இருந்த காபி ஷாப் ஒன்றில் மூவரும் அமர்ந்து சிறிய டிபனையும் காபியையும் அருந்திவிட்டுக் கிளம்பி விட்டார்கள்.

காம்ப்ளெக்ஸை விட்டு வெளிவந்து மறுபடியும் ஆட்டோ பிடித்தான் கிருபாகரன்.

இம்முறை நிர்மலா முதலில் யாமினியை ஏறச் செய்து விட்டு பின் தான் ஏறினாள். அவளுக்கு ஒட்டி இடப்புறமாய் கிருபாகரன் அமர்ந்து கொண்டான். 'அப்பாடா..! இதையாவது இந்த யாமினி விட்டாளே..' என பெருமூச்சு விட்டாள் நிர்மலா.

கூடவே திரும்பி யாமினி முகத்தை உற்றுப் பார்த்தாள். யாமினி எவ்வித உறுத்தலுமின்றி மறுபடியும் கிருபாகரனிடமும் அவளிடமும் அந்த சளசளப்பு பேச்சை ஆரம்பித்து விட்டாள்.

ம்ஹூம்! இவளைத் திருத்த முடியாது. இவள் உணரவும் போவதில்லை! என எரிச்சலாய் நினைத்தாள் நிர்மலா.

பக்கத்தில் அமர்ந்திருந்த கிருபாகரன் அவள் மனநிலையைப் புரிந்தவன் போல் அவள் கைகளை மெல்லப் பற்றியிருந்தவன், அவளை ஆறுதல் படுத்துவது போல் தனது விரல்களால் அவளது கையை வருடி விட்டுக் கொண்டிருந்தான்.



ஒரு வழியாய் எல்லோரும் வீடு வந்து சேர்ந்தார்கள். நிர்மலா இனி கொஞ்ச நாளுக்கு ஷாப்பிங் என்ற பேச்சே எடுக்கக் கூடாது என முடிவும் செய்து கொண்டாள்.



9

நிர்மலா புகுந்த வீடு புகுந்து இருபது நாட்கள் ஓடிவிட்டது. காலண்டரைப் பார்த்து தேதியைக் கிழித்தவள் கற்சிலை போல் அப்படியே சுவரை வெறித்துக் கொண்டு நின்றாள்.

அப்படி அவள் ரொம்ப நேரம் நின்றுக் கொண்டிருப்பதை கவனித்ததாலோ, என்னவோ தற்செயலாய் அந்த ரூமிற்குள் தன் அலுவலக பைல்களை வைக்க வந்த கிருபாகரன் அதைக் கவனித்துவிட்டான்.

மெல்ல பைல்களை ஷெல்ஃப்பில் வைத்துவிட்டு ஓசைப்படாமல் அவள் பின்னால் வந்து நின்றான். அவள் அவன் வந்து நிற்பதையும் உணராமல் இருக்க.. இனிப் பயனில்லை என்பது போல் சட்டென அவளை முதுகோடு ஒரு அணைப்பு செய்து தன் முகத்தை அவள் தோள்களில் வைத்து தலைசாய்த்து "மகாராணியாருக்கு காலையிலே அப்படி என்ன தீவிர சிந்தனையோ?" என்றான்.

நிர்மலாவும் அந்த அணைப்பில் உணர்வுக்கு வந்தவள் கண்கள் விரியத்தான் அவனைப் பார்த்தாள். ஒரு மாதமாகியும் அவள் இந்த வீட்டில் புரிந்து கொண்டது கிருபாகரனை மட்டும்தான்! அவனது அன்பு ஒன்றுதான் அவளுக்குத் தங்கு தடையின்றி கிடைக்கிறது. ஆனால்

அது மட்டும் போதுமா? அந்த வீட்டில் உள்ள அனைவரது அன்பையும் அவள் பெற வேண்டுமே! அதுதான் அவளது லட்சியமும் அல்லவா!

கிருபாகரன் கேட்டதும் கவலையாய் அதையே வெளிப்படுத்தினாள் நிர்மலா.

கிருபாகரன் அதைக் கேட்டு கடகடவென சிரித்தான்.

''அது உன் பிரச்சினை! நீதான் முயற்சி செய்ய வேண்டும். அன்பைப் பெற வழி தேட வேண்டும்.. தேடு பார்க்கலாம்.'' என்றான், அவனுக்கு அதில் சம்பந்தம் இல்லாததுபோல்.

''அதற்கு நீங்கள் உதவலாமே?'' என்றாள் அவள் விடாப்பிடியாய்.

''நானா.. எப்படி? நீயே சொல்லு..!''

''எல்லோருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுங்கள். அவர்களது விருப்பு வெறுப்பையெல்லாம் பட்டியலிடுங்கள். அதன்படி நடந்து கொள்கிறேன். அவர்கள் மனதில் இடம் பிடிக்கிறேன்..'' குஷியாய்ச் சொல்லி சிரித்தாள் அவள்.

வரிசையான பற்களுடன் கூடிய அவளது முத்துப் புன்னகையை ரசித்தவன், 'இதெல்லாம் உனக்குத் தேவைதானா?' என்பதுபோல் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்றாள் மைவிழிகள் விரிய.



அந்த விழிகளின் இமைப் படபடப்பை மேலும் ரசித்தவன், ''உண்மையைச் சொல்லட்டுமா?'' என்றான்.

''சொல்லுங்கள்..''

''இதோ இதற்கு முந்திய நிமிடம் வரை ஒரு கொள்கை வைத்திருந்தேன். அது இந்த நிமிடமே உன் விழியோரப் பார்வை அழகைப் பார்த்ததும் 'பணால்'என நொறுங்கி சுக்கு நூறாகி போய்விட்டது..'' என்றான்.

அவளுக்குப் புரியவில்லை.

''என்ன.. என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் அப்பாவியாய்.

''முதலில் இப்படி வா..''என்றபடி கட்டிலில் அமர்ந்தவன் அப்படியே அவளை தன் மடியில் இழுத்து வைத்தான். அவள் கைகள் இரண்டையும் எடுத்து ''இந்த மலர்க் கரங்களால் மாலை போல் என் கழுத்தை வளைத்துக் கொள்' என அவளை கழுத்தோடு அணைத்துப் பிடிக்கச் செய்து சிணுங்கியவளிடம் ''இரு.. இரு.. நான் சொல்லப் பேசிற விஷயத்தை இந்த 'போஸில்' இப்படி நெருக்கமாய் அமர்ந்து கேட்டால்தான் புரியும்...'' என்றபடி விவரிக்க ஆரம்பித்தான்.

''இதற்கு முன் வரை தனிக்குடித்தனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. என்ன ஆனாலும் சரி.. கூட்டுக் குடித்தனம் தான் என ஒரு கொள்கையை லட்சியம் போல் வைத்திருந்தேன். அது.. அந்தக் கொள்கை என் மனைவியும் உலக மகா ரதியும் ஆன என் நிம்மிக் கண்ணுவின் அழகைப் பார்த்ததும் படாரென பறந்து போய்விட்டது. இப்போது உன்னைக்

கூட்டிக் கொண்டு எங்காவது போய் தனிக்குடித்தனமா இருந்து கொண்டு சதா உன்னைக் கொஞ்சிக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது.."

அவன் சீரியசாய் சொல்லி முடிக்க, "ஐயோ.. ஐஸ்.. மழை.. ஐஸ்.. ஐஸ்... மழை.. என் உடம்பு தாங்காதப்பா!" என அவள் முகம் சிவக்க பதறினாள்.

கூடவே வெட்கத்தோடு முகத்தை குனிய வைத்தவள், 'விழியோரப் பார்வையாம்... உலக மகா ரதியாம்.. தன்னை இந்தப் புகழ் புகழ்கிறானே' என நாணிக் கோணியவள் கடைசியில் தாங்க முடியாதவளாய் கை விரல்களால் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

உண்மையாகத்தான் இவன் சொல்கிறானா? சொல்லி யிருப்பானா? என்ற ஆர்வம் துளைத்தெடுக்க விரலிடுக்கு வழியாக மெல்ல தன் பார்வையை அனுப்பி அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் சரியான கள்ளன்தான் போலும்!

"அட.. இந்த விரலிடுக்குப் பார்வை கூட அபாரமாய் இருக்கிறதே.." என அதற்கும் ஒரு ஐஸ் வைத்து அவள் நிலையை கண்டுபிடித்து விட்டான்.

"நான் சொல்வது உண்மைதான்.. உன் அழகில் தினம் தினம் மயங்கித் தொலைத்துக் கொண்டுதான் இருக் கிறேன்.." என்றபடி அவளை உடம்போடு சேர்த்து ஒரு குலுக்கு குலுக்கியவன் அப்படியே இறுக்கியபடி, "என்ன நான் சொல்வதெல்லாம் புரிந்ததா?" என்றான்.



"புரிந்தது.." என்றாள் அவள்.

"என்ன புரிந்தது?"

"நீங்கள் விட்டது போல் என்னுடைய லட்சியத்தையும் விட்டுவிடச் சொல்கிறீர்கள். அப்படித்தானே?" என்றாள்.

"அதுதான் இல்லை.." என்றான் அவன்.

"பின் என்னவாம்?"

"நான்தான் தோற்று விட்டேன். நீயாவது ஜெயித்துக் காட்டு.." என்கிறேன்.

"ஜெயித்துக் காட்டு என்றால்..?"

"கூட்டுக் குடித்தனத்திலும் சந்தோஷமாய் இருக்க முடியும். முயன்றால் எல்லோருடைய அன்பையும் பெற முடியும் என்கிற உன் லட்சியத்தில் ஜெயித்துக் காட்டு.." என்றவன் கூடவே "உன்னால் அது முடியும்.." என்றான் அழுத்தந்திருத்தமாய்.

அவள் பேசாமல் இருக்கவும் அவனையே புருவம் உயர்த்திப் பார்த்தான்.

"எதை வைத்து இவ்வளவு உறுதியாய்ச் சொல்கிறேன் தெரியுமா?"

"நீங்களே சொல்லுங்கள்.."

"உன் அழகால்.. அன்பால்.. நான் குப்புற விழுந்திருக் கிறேனே.. அதுபோல்தானே... எல்லோரும்.. அதிலும் உன் அழகான.." என அவன் மறுபடியும் கேலியும் சிரிப்புமாய்

வர்ணிக்க ஆரம்பிக்க, "ஐயோ... ஆளை விடுங்கள் சாமி" என அவனிடம் விடுபட்டு முகம் சிவக்க ஓடினாள் அவள்.

கூடவே அவனை நினைத்து பெருமிதமாகவும் இருந்தது. கல்யாணமாகி ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் இப்படி வழிகிற அளவுக்கு வந்து விட்டானே.. என நினைத்தவளுக்கு இது சரியா.. தவறா..? என்ற பயமும் வந்தது.

அது என்னவோ சொல்வார்களே.. ஆசை அறுபது நாள்.. மோகம் முப்பது நாள்.. என அதுபோல்.. இவனுக்கு அந்த அன்பு ப்ரியம் ஏற்பட்டு விலகி விடுமோ? என்ற நினைப்பும் ஓடியது.

அப்படி நினைக்கும்போதே, "சே! சே! அப்படியெல்லாம் இருக்காது. கிருபாகரன் என்ன அப்படி மயக்கத்தில் கிறங்கி பின் விடுபடும் அளவுக்கு புத்தியில்லாதவனா? அவனுக்குத்தான் எப்போதும் தீர்க்கமான சிந்தனை தெளிவான பார்வை இருக்கிறதே! மற்ற எத்தனையோ விஷயங்களில் அவன் விளக்கமாய் பேசி தெளிவாக முடிவெடுப்பதை எத்தனையோ முறை கண்டிருக்கிறாளே!

அதனால் பயம் நீங்கி கிருபாகரன் தன் மீது நிஜமாகவே அன்பு வைத்திருக்கிறான் என்ற பெருமிதத்துடன் நடமாடினாள்.

அன்று கிருபாகரனின் தங்கை மல்லிகா கல்லூரிக்கான ஹோம் அசைன்மெண்ட் ஒன்றை தயார் செய்து கொண்டிருந்தாள். பெரிய ரிக்கார்டு நோட்டுகளில் படங்களை



வரைந்து கொண்டு போக வேண்டும். அதற்கு மதிப்பீடும் போடுவார்கள்.

மல்லிகா நோட்டுகளில் படங்களை வரைய முடியாமல் திணறிக் கொண்டு இருக்க அதைக் கவனித்த நிர்மலா வலியப் போய் அவளுக்கு உதவினாள். இயல்பிலேயே அவளுக்கு ஓவியம் வரைவது நன்றாக வரும் ஆனதால் அவளால் மல்லிகாவுக்கு வேண்டிய படங்களை எல்லாம் அழகாய் சிறப்பாக செய்ய முடிந்தது...

வரைந்து முடிந்ததும் கடைசியில் அவளுக்கு ஒரு வண்டி நன்றிகளைச் சொல்லி.. உச்சி குளிர வைத்தாள் மல்லிகா.

அப்படி நன்றி சொல்லும்போது தான் முதன் முறையாய் பல்கள் அத்தனையையும் காட்டி சிரிக்கவும் செய்தாள்.

இயல்பிலே.. மல்லிகா ஏதோ தனக்கு ஆகாதவள் போல் நிர்மலா பக்கம் வருவதில்லை. அவள் பாட்டுக்கு எழுந்து வேலைகளை முடித்துவிட்டு காலேஜுக்குக் கிளம்பி விடுவாள். பின் மாலை வந்தால் கொஞ்ச நேரம் டி.வி. முன் தடிமனான புத்தகங்களை விரித்து வைத்துக் கொண்டு படிப்பதுபோல் உட்கார்ந்து விடுவாள்.

மற்றவர்களிடமாவது ஓரிரு வார்த்தைகள் பேசுவாள். நிர்மலாவிடம் வெறும் ம்ம், சரி.. என ஒப்புக்கு பேசும் ஒற்றை வார்த்தைகள்தான்!

நிர்மலாவே வலியப் போய் பேச்சுக் கொடுத்தாலும், அதேபோல்தான் சுருக்கமாய் அளவோடு பேசுவது போலத்தான் செய்வாள்.

அதனால் அவள் புன்னகைத்து நன்றி தெரிவித்தது. இவனிடம் நன்கு பேசிப் பழக, இவன் மனதில் இடம் பிடிக்க இதுதான் வழி.. என நிர்மலாவும் உணர்ந்து தெரிந்து கொண்டாள்.

அதனாலே அவளுக்குத் தேவைப்படும் விஷயங்களை அவன் விரும்புவதை தேடிப் பிடித்துச் செய்யலானாள்.

அப்படி அவள் தேடிப் பிடித்து செய்யும் ஒரு விஷயம்தான் பின்னாளில் பெரிய விபரீதம் ஒன்றில் கொண்டு போய் விடும் என நிர்மலா அப்போது கொஞ்சமும் உணரவில்லை.



10

மூன்று வாரம் மிகவும் இனிமையாய் கழிந்ததற்குத் திருஷ்டி போல் ஐந்தாம் வாரம் அந்தச் சம்பவம் நடந்தது.

அன்று முதன் முறையாய் கிருபாகரனின் இன்னொரு முகத்தை அவளது கோபத்தை அவள் சந்திக்க வேண்டியிருந்தது.

அன்றுதான் கல்யாண லீவு முடிந்து அலுவலக வேலையில் ஜாயின் செய்ய பரபரப்பாய் கிளம்பிக் கொண்டிருந்தான் கிருபாகரன். அவளும் அவன் அவசரத்தை உணர்ந்து அவனுக்கு வேண்டிய ஏற்பாடுகளை விறுவிறுவென செய்து கொண்டிருந்தாள்.

குளித்துவிட்டு வந்தவனுக்கு ரெடியாக சூடான பொங்கல், இட்லி டிபனை பரிமாறினாள். அவனும்



படபடவென சாப்பிட்டுக் கொண்டு,அந்த அவசரத்திலும் 'டிபன் பிரமாதம்..' என்றபடி யாரும் பார்க்காத வண்ணம் அவள் இடுப்பை ஒரு தட்டு தட்டிய சில்மிஷத்துடன்தான் அகன்றான்.

முன் ஹாலில் வழக்கம் போல் டி.வி. முன் உட்கார்ந்திருந்தாள் மாமியார் அன்னபூரணி. அவனைக் கண்டதும், ''ப்பா, கிருபாகரா, உன்னிடம் எத்தனை முறை சொல்லியாகி விட்டது.. இந்தப் பழைய ஈஸி சேரை பின்னல் மாற்றி ரிப்பேர் செய்யும்படி. நீயும் நான் சொல்வதை காதில் வாங்கிக் கொள்ளவே மாட்டேன் என்கிறாய். என்னதான் மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ?'' என விரட்டும் குரலில் கேட்க கிருபாகரனுக்கு ஒரே எரிச்சல்தான்.

ஆனாலும் தன் கோபத்தை தாயாரிடம் காட்ட முடியாது என்பதால் அடக்கிக் கொண்டு, ''ஐயோ, அம்மா, கொஞ்சம் பொறுங்கள். இன்று மாலை அலுவலகம் முடிந்து வந்ததும் முதல் வேலையாய் அதைச் சரி பண்ணி கொடுக்கிறேன், போதுமா?'' என்றான்.

ஆனால் அன்னபூரணி பதிலுக்கு சலிக்கவே செய்தாள்.

''என்னவோ போ..! எப்போதும் இப்படித்தான் செய்கிறேன், செய்கிறேன் என்று சொல்வாய். ஆனால் செய்ய மாட்டாய். முன்பாவது தனிக் கட்டை. இப்போது கல்யாணம் வேறு ஆகிவிட்டது. உன் புதுப் பொண்டாட்டியை கவனிக்கவே உனக்கு நேரம் சரியாக இருக்கும்.. ம்..ம்..''

அழுத்த குரலில் முடித்தவாறு வழியனுப்பினாள். கிருபாகரன் குபுக்கென எழுந்த கோபத்தை அடக்குவதற்குள் உள்ளிருந்து அவனது அலுவலக பைல்கள் நாலைந்தைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்தாள் நிர்மலா.

''இந்தாருங்கள்.. இதை மறந்து விட்டீர்கள்!'' என பைல்களை அவன் கைகளில் திணிக்க முயல.. கொண்டிருந்த கோபம் மேலும் அதிகமாக தனது கொதிப்பு முழுவதையும் அவளிடம்தான் எரிச்சலாய் காட்டினான் அவன்.

"உனக்கு அறிவு என்பது கொஞ்சமாவது இருக்கிறதா? இப்படியா அவ்வளவையும் என் கையில் கொண்டு திணிப்பது.. அப்படியென்ன அவசரம் உனக்கு?'' என சட்டென அவள் மேல் எரிந்து விழுந்தான் அவன்,

ஒரு கணம் அவன் கோபத்தைக் கண்டு அப்படியே ஆடிப்போய் திடுக்கிட்டுத்தான் விட்டாள் நிர்மலா.

அவன் கோபத்தை விட... எரிச்சலாய் அவன் பார்த்த பார்வை... தீயாய் வீசிய.. சொற்கள்... கிருபாகரனா இப்படி? அதுவும் நம்மீதா..?

அப்படி என்ன தவறு நடந்து விட்டது?

சொல்லப் போனால்.. அவள் அவனுக்கு உதவி செய்யத்தானே போனாள்.. அதற்காகவா இப்படி முகத்தை அஷ்டகோணலாக்கி நம் மீது எரிந்து விழுகிறான்?

என்ன இது அநியாயம்! செய்யாத தப்பிற்கு தண்டனையா?



அவளும் கோபம் கொண்டவளாய் பட்டென நிமிர்ந்து பார்த்தாள்.

ஆனால் அவன் கிருபாகரன் அங்கு நின்றால்தானே?

அவன் அந்த பைல்களோடு அங்கிருந்து எப்பவோ அகன்று வெளிப்புறம் சென்று ஷெட்டிலிருந்த பைக்கை எடுத்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் அங்கு போய் விட்டானா.. என அவள் சிறு ஓட்டமாய் முன்புறம் நடந்து வந்தாள்.

என்ன ஆச்சரியம்? அவள் வந்து நின்ற மறு நிமிடமே பைக்கை ஸ்டார்ட் செய்து கிளம்பியவன் அங்கிருந்தும் சிட்டாய் பறந்து விட்டான்.

ஒரு தலையசைப்பு, ஒரு பை, வருகிறேன்.. என ஒரு வார்த்தை.. ம்கூம்! ஒன்றும் சொல்லவில்லை, தன் கோபத்தை ஆக்ஸிலேட்டரை திருக்கி பைக்கை உறுமவிட்டு காட்டினான். அவள் ஒருத்தி முன் கதவு பக்கமாய் தனக்காக வந்து நிற்பதை கவனியாதவன் போலவே திருப்பிய தலையுடன் பைக்கை வெளியெடுத்து வேகமாய் சென்றும் விட்டான்.

பஸ்ஸை தவற விட்ட பேதை போல் அவன் அப்படிப் போவதையே தூரமாய் அவன் சிறு புள்ளியாகி மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவள், கொஞ்ச நேரம் அதிர்ச்சியில் அப்படியே சிலை போலத்தான் நின்று கொண்டிருந்தாள்.

முதன் முறையாய் தன் மீது கோபப்பட்டிருக்கிறான்!

அதுவும்.. காரணமில்லாமல் எவ்வித அர்த்தமும் இல்லாமல்!

மூன்று வாரம் அவளை அன்பு மழையில் நனைய வைத்தவன் கடைசியில் ஏதோ ஒரு சிறு விஷயத்திற்காக பெரிய பகையாளி போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறானே!

எல்லா ஆண்களையும் போல் கிருபாகரனும் ஒரு சராசரி மனிதன்தானா? சமயம் கிடைக்கும் போதெல்லாம் கோபம் என்னும் குதிரையில் ஏறி அவளை அதட்டி உருட்டி மிரட்டி அடிமையாக்கப் பார்க்கும் ஒருவித முயற்சியா இது?

என்னென்னவோ எண்ணங்கள் நிர்மலாவினுள் ஓடின. ஆனாலும் இதை சும்மாவாக எளிதாக விட்டுவிடக் கூடாது என்பதில் மட்டும் உறுதியைக் கூட்டிக் கொண்டாள்.

வழக்கம் போல் வீட்டு வேலைகளில் ஆழ்ந்தாள். ஆனாலும் அவளுக்கு மூட் அவுட்தான்! அவன் முதன் முறையாய் தன் மீது கோபப்பட்டிருக்கிறான் என்பதை உணர்ந்தபோது அவளுக்கு வலிக்கத்தான் செய்தது. ஆனாலும் அவனது கோபம் சிறிதும் நியாயமில்லை என அவள் உள்ளுக்குள்ளே ஒரு குரல் கத்திற்று.

அதனாலேயே அதற்குப் பதிலடி கொடுக்க விரும்பியவளாய் இரவுப் படுக்கையில் திரும்பிப் படுத்து முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டாள். கண்களை திறந்து வைப்பதா அல்லது மூடிக் கொண்டு பாசாங்கு செய்வதா என நினைப்பு ஓடியது.



தூங்குவது போல் அவள் இருந்தால் அவன் கிருபாகரன், 'தூங்கிவிட்டாளா? நல்லதாய் போய்விட்டது!' என அவன் பாட்டுக்கு படுத்துவிட்டால்...? அப்படி விடக் கூடாதே.. அவனது கோபத்தையும் அவள் காட்டியாக வேண்டுமே..?

ஊரில் பக்கத்து வீட்டு மாமிமார்கள் சொன்னதெல்லாம் காதில் ரீங்காரமிட்டது. எப்போதும் எதிலும் நியாயம் என்று பட்டால் உன் எதிர்ப்பை காட்டி விடு - இல்லையெனில் இந்த ஆண்கள் அதுதான் புருஷ லட்சணம் என உன்னை குட்டக் குட்ட குனிய வைத்து விடுவார்கள்.. ஜாக்கிரதை.. என்று.

அதனால் நிர்மலா மைவிழிக் கண்களை நன்கு அகல விரித்துக் கொண்டு இறுக்கமாய் உதடுகளை அழுத்திக் கொண்டு காத்திருந்தாள். இப்படி எத்தனையோ சினிமாக்களில் கதாநாயகி காத்திருப்பதையும் கதாநாயகன் வந்து தாஜா செய்வதையும் அவள் கண்கூடப் பார்த்திருக்கிறாள்.

ஆனால் அவள் விஷயத்தில் கிருபாகரன் வந்து என்ன தாஜா செய்தாலும் அவள் மயங்கப் போவதில்லை. கீழே இறங்கி வரப் போவதில்லை.

அவள் கோபத்தை அவன் பக்க நியாயத்தை உணர்த்தி விட்டுத்தான் சகஜமாய் அவனுடன் பேச வேண்டும் என்றும் முடிவெடுத்திருந்தாள்.

ஆனால் கிருபாகரன் வந்தபோது நடந்ததோ வேறு. விறுவிறுவென ரூமில் நுழைந்தவன் எதுவுமே நடவாதது போல் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

மெத்தையின் மறுபுறம் சிலிர்த்துக் கொண்டு கிடந்தவளை, ஏதோ நாய்க்குட்டியை இழுப்பது போல் கரங்களால் இழுத்து அவன் நெஞ்சில் போட்டுக் கொண்டு மாலை போல் இறுக்கி நெஞ்சோடு சிறைப்படுத்தியும் கொண்டான்.

கோழிக்குஞ்சு போல் அவன் நெஞ்சில் பதிந்து கிடந்தவள் கஷ்டப்பட்டுத்தான் முகம் நிமிர்த்தி அவனது முகத்தைப் பார்த்தாள்.

எவ்வித சலனமுமின்றி பார்த்தவன் அவள் முறைத்துப் பார்ப்பதை உணர்ந்து, வசீகரப் புன்னகை யொன்றை உதிர்த்து விட்டான். ''ஐ.. ஆம்..ஸாரி! நான் அப்படி கோபப்பட்டிருக்கக் கூடாதுதான்..'' என்றபடி சட்டென குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டபடி சொன்ன போது பொசுக்கென்றுதான் உணர்ந்தாள்.

அதுவரை அவள் அவன் மீது கொண்டிருந்த கோபம், இறுமாப்பு.. எல்லாம் போன இடம் எங்கு என்றுதான் தெரியவில்லை!

ஆனாலும் அவள் அப்படி கோபப்பட்டிருந்ததை அவனுக்கு கொஞ்சமாவது உணர்த்தியாக வேண்டும் என நினைத்தவள், ''உங்களிடம் பொறுமை இல்லை'' என்றாள் இறுகிய குரலோடு.

அவன் அதற்கு, ''ம்ம்... இல்லைதான்! நீ.. சொல்வது உண்மைதான்!'' என்றபடி அவள் காதோரமாய் கழுத்துப் பக்கம் முகர்ந்தவன், ''இந்த இனிமையான நீ போட்டிருக்கும் ஜவ்வாது வாசனையை முகர்ந்த பிறகு.. என்னால்



பொறுமையாக இருக்க முடியாதுதான்..'' என்று சொல்லிய படி தன் உதடுகளால் அவள் இதழ்களை முத்தமிட வர உண்மையிலே அவளுக்கு கோபம் வந்து விட்டது.

அவன் தோள்களைத் தாங்கிப் பிடித்து தடுத்து நிறுத்தினாள். அவனும் நெஞ்சை நிமிர்த்திய பராக்கிரம பாண்டியன் போலத்தான் அவளைப் பார்த்தான்.

''எவ்வளவு பெரிய விஷயம்.. நான் சும்மா இருந்து விட முடியுமா?'' என்றாள்.

''முடியாதுதான்.. ஆனால் நான்தான் மன்னிப்பு கேட்டு விட்டேனே?''

''ஆனால் நடந்தது அவமானம்தானே.. என்னைக் காயப்படுத்தி விட்டீர்களே! இன்று முழுவதும் எனக்கு ஒன்றும் ஓடவில்லை தெரியுமா?'' என்றாள்.

பதிலுக்கு அவனும் அவளைப் போலவே முகத்தை பாவமாய் வைத்துக் கொண்டு ''பின் எனக்கு மட்டும் என்னவாம்? உன்னிடம் அப்படி கோபித்துக் கொண்டு சென்ற எனக்கும் வேலை ஓடவில்லை!'' என்றான்.

''நான் நம்ப மாட்டேன் இதை..!'' என்றாள் அவள் மூக்கைச் சிலுப்பிய கோபத்துடன்.

''நீ நம்புவாய்..! முதலில் நான் கோபப்பட்ட காரணத்தைச் சொல்கிறேன்..'' என்றபடி தாய் அன்னபூரணி காலையில் தன்னை எரிச்சல் படுத்திய விஷயங்களை விவரித்தான். மெல்லிய குரலில் மன்னிப்பையும் கேட்டான்.

மனம் இளகியவளாய் அவனை மன்னித்து அன்பாய் முத்தமிட்டாள் அவன் மனைவி!

## 11



யாமினிதான் ஓயாத சளசளக்காரி என்றால் அவள் தங்கை மல்லிகாவும் அதற்குத் தப்பாமல் இருந்தாள். எந்த ஒரு கேள்வியைக் கேட்டாலும், எந்த ஒரு பேச்சை ஆரம்பித்தாலும் மூச்சு விடாமல் பேசுமளவுக்கு அறுக்க ஆரம்பித்து விடுவாள்.

அதனால் நிர்மலா அவர்கள் இருவரிடமும் பேசுவதற்கு பயந்தாள். சந்தர்ப்பம் கிடைக்கும்போது பின்புற சிறிய தோட்டத்தில் உள்ள சிறு சிறு செடிகளுக்கும் மரங்களுக்கும் தண்ணீர் ஊற்றுவது என வேலையை இழுத்துப் போட்டுச் செய்தாள்.

வீட்டு வேலைகளுக்கு அன்னபூரணி வேலையாள் வைத்திருந்தாலும், அவளே ஆர்வமாய், சுவர்களை ஒட்டடை அடிப்பது, ஜன்னல்களுக்கு திரைச் சீலைகளை அழகுபட போடுவது, எல்லா இடங்களையும் பொருட்களையும் சுத்தமாய் வைத்துக் கொள்வது என முயற்சி செய்தாள்.

ஆனாலும் அவள் எது செய்தாலும் அன்னபூரணியால் சும்மா இருக்க முடியவில்லை. ஏதோ வேண்டாத காரியத்தை அவள் பண்ணுவது போலவே சலித்து முடித்துச் சொல்லுவாள்.



“இதையெல்லாம் எதற்குச் செய்கிறாய்? ஒருநாள் ஒட்டடை அடித்தால் தூசு எல்லாம் போய்விடுமா?” என்பாள்.

நிர்மலா பதிலுக்கு ஏதாவது சமாதானம் சொன்னாலும், “உன் புருஷன் முன் நீ வீட்டு வேலையெல்லாம் பார்ப்பதாய் காட்ட வேண்டும் என்று செய்கிறாயா?” என்பாள்.

அதற்கும் நிர்மலா செவி சாய்க்கவில்லை என்றால் “இப்படியெல்லாம் வேலைகள் செய்துதான் அவனை மயக்க வேண்டுமா? அவன்தான் ஏற்கனவே உன் சிவப்புத் தோலைப் பார்த்து மயங்கிக் கிடக்கிறானே?” என்பாள்.

இந்த பெரிய குத்தலைக் கண்டு அப்படியே துடித்துதான் போவாள் நிர்மலா. முதலில் அன்னபூரணி பேசுவதை எல்லாம் வழக்கமான மாமியாரின் பேச்சு என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தாள்.

ஆனால் அன்னபூரணியின் பேச்சில் ஒருவிதமான ஊசி குத்தும் பாணி தொனிப்பதைக் கண்டதும் பயப்படவே செய்தாள். நம் வீட்டிற்கு பெண் பார்க்க வந்தபோது வெகுளி போல் கலகலப்பாய் பேசியவர்களா இப்படி? என வியப்பும் வந்தது.

ஒருவேளை தான் எதுவும் தவறாக செய்கிறோமா, அவர்களுக்குப் பிடிக்காத விஷயங்களை எல்லாம் தேடிப் பிடித்துச் செய்கிறோமா.. அதனால் தான் இப்படி குத்தலாக பேசுகிறார்களா? என நினைத்தாள்.

அதனாலே அதுபற்றி வெளிப்படையாகவே கேட்டால் என்ன என்ற நினைப்புடன் மறுநாள் போய் நின்று அதையே கேள்வியாகவும் கேட்டான்.

ஆனால் அவள் நினைத்ததற்கு மாறாய்த்தான் எல்லாம் நடந்தது. அதற்கும் "இப்படியெல்லாம் கேட்டால் நல்ல மருமகள் என்று என்னிடம் பெயர் எடுத்து விடலாம் என்று நினைக்கிறாயா?" என்றாள் அன்னபூரணி மறுபடியும் குத்தலாய்.

அப்போதுதான் நிர்மலாவுக்கு புரிந்தது. அடடா.. இது தானாக அவர்கள் பேசுவதல்ல. அன்னபூரணியின் குணமே அப்படி என்று எதையும் எதிலும் திருப்தி வராமல் குற்றம் கண்டுபிடித்தே திருப்தி கொள்ளும் அபூர்வ விநோதமான மனச் சுபாவம் அன்னபூரணிக்கு என்று!

தன் மனதுள் எழுந்த சந்தேகத்தை நடந்தவைகளை விளக்கி கிருபாகரனிடம் கேட்டபோது, அவன் அதிர்ச்சியில்லாமல் சிரித்தான்.

"இது... இப்படியெல்லாம் நடக்கும் என எனக்கு முன்பே தெரியும்..?" என்றான்.

"என்ன முன்பே தெரியுமா?"

"ம்ம்..! என் வீட்டில்.. என் அம்மாவுக்கு நாங்கள் துடுக்காய் வைத்திருக்கும் பட்டப் பெயர் என்ன தெரியுமா?"

"என்ன..?" என்றாள் ஆவலாய்.

"அதை நான் சொன்னால் உனக்கு உடனே புரிந்து விடும்! நீயும் உடனே சிரித்து விடுவாய்.." என்றான்.



"சொல்லுங்கள்.." என்றாள் மேலும் ஆர்வத்தோடு.

"பிரோடு நம்பர் ஒன்!" எனக் கூறி பெரிதாய் சிரித்தான் கிருபாகரன்.

அவளுக்கும் அடக்க முடியாத சிரிப்பு வரத்தான் செய்தது.

கைகளைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

கிருபாகரன் அவளை நிமிர்ந்து உற்றுப் பார்த்தான்.

"இனி உனக்கு சவால்தான்!" என்றான்.

"சவாலா?"

"ஆம்.. இனி... நீ அம்மாவை திருத்தப் போகிறாயா.. அல்லது அவர்கள் உன்னைத் திருத்தப் போகிறார்களா என்ற சவால்தான்!"

"என்னால் முடியும்.." என்றாள் அவள் செவ்விதழ்களை அழுத்திய ஒரு வித இறுக்கத்தோடு.

"அப்படியானால் என் தாயாரை மாற்றி விடுவாயா?" என்றான்.

"மாற்றுகிறேனோ.. இல்லையோ. ஆனால்.."

அவள் நிறுத்த, "ஆனால்.. என்ன ஆனால்.. சஸ்பென்ஸ் எல்லாம் வைக்காதே. சீக்கிரம் சொல்லு!" என அவசரப் படுத்தியதும், "உங்கள் தாயார் மனதில் நிச்சயம் நான் இடம் பிடிப்பேன்.." என்றாள்.

''அப்படியா?'' என சிரித்த கிருபாகரன் நகைப்பை விடாமல், ''அங்கு இடம் பிடிப்பது இருக்கட்டும் முதலில் இங்கு இடம் பிடி..'' என்றபடி அவன் நெஞ்சைக் காட்டினான்.

''அங்குதான் இருக்கிறேனே..? அதில் வேறு சந்தேகமா?''

''நீ அப்படி இங்கு இருப்பதை நான் அல்லவா சொல்ல வேண்டும்?''

''சொல்லுங்கள்.. ஏன் சொல்ல மாட்டீர்கள்..?'' என்றாள் கன்னங்களில் சிவப்புடன்.

''சொல்கிற மாதிரி.. நீ... அங்கு இருப்பதை எனக்கு ஞாபகப்படுத்துகிற மாதிரி நீ அடிக்கடி நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதானே நீ நெஞ்சினில் அப்படி இருப்பதை நான் உணர முடியும்?''

''சொல்லுங்கள் ஐயா! அப்படி நான் தங்களது பரந்த நெஞ்சினில் எப்போதும் இடம் பிடித்திருக்க என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள் ஐயா!'' என்றாள் அவள் கேலிக் குரலில்.

அவனும் அதற்கு சரியசாக, ''உனது அந்த நாலடி ஐந்து அங்குல அழகுத் திருமேனி என்னை நெஞ்சார அணைக்க வேண்டும். ஒட்டி வெட்டிய பழத் துண்டுகள் போல் இருக்கும் உன் செவ்விதழ்கள் அடியேனின்...'' என்றபடி அவனது உதட்டைக் காட்ட, 'ச்சீ..' என்ற வெட்கத்துடன் ஓடி ஒளிந்தாள் அவள்.



கூடவே அன்று முழுவதும் அவளது சிந்தனையில் அந்த விஷயமே ஓடிற்று. கிருபாகரனை இரண்டு மாதங்களுக்கு முன் வரை யார் என்றே தெரியாது.

அப்படிப்பட்டவன் திடீரென அவள் கணவனாய் வந்ததும் அவன் மேல் அன்பைப் பொழிந்து தன் பாசத்தைக் காட்டி அவனை தன் வசப்படுத்தி விட்டாள்தானே! அவனும் அவளுக்காக உருகத்தானே செய்கிறான்!

அவள் என்ன சொன்னாலும் செய்கிறான். அவள் விருப்பப்படியே நடந்து கொள்கிறான். அவள் பாசத்தைப் பொழிவது போல் அவனும் அன்பை பாசத்தை அவளுக்கு பொழிய வேண்டும் என்று நினைக்கத்தானே செய்கிறான்? அவனது ஒவ்வொரு செய்கையிலும்தான், அது வெளிப்படுகிறதே! அவளால் அதைக் கண்டு கொள்ள முடிகிறதே!

அவனை அப்படி அன்பை பாசத்தைக் காட்டி தன் பக்கம் இழுத்ததுபோல்.. கடுகடுவென இருக்கும் மாமியார் அன்னபூரணியையும் தன் பக்கம் இழுத்து விடலாம்தானே? அது சாத்தியம்தானே?

மனதுள் அதுபற்றி தீவிரமாய் யோசித்து ஒரு முடிவிற்கு வந்தாள் நிர்மலா.

முதலில் அன்னபூரணிக்கு எதுவெல்லாம் பிடிக்கும் தான் எப்படி நடந்து கொண்டால் மெச்சுவாள் என்பதையெல்லாம் கண்டுபிடிக்கத் திட்டமிட்டாள்.

ஆனால் அது.. கடலலையில் தொலைந்த ஊசியைத் தேடுவது போல கடினமாகவே இருந்தது. அன்னபூரணி

அவளிடம் மட்டுமல்ல, யார் என்ன பேசினாலும், எரிந்து விழாத குறையாய்த்தான் ஒருபேச்சு பேசுவதாக தெரிந்தது.

இந்த சுபாவத்திற்கு என்ன காரணமாக இருக்கும் என யோசித்து பின் அதையும் கண்டுபிடித்தாள்.

தன் கணவரை இழந்த பின் அவள் மனதில் ஏகப்பட்ட விரக்தி ஒருவித தனிமை அவள் இப்படியெல்லாம் மாற்றி விட்டதை நிர்மலா கண்டுபிடித்தாள்.

அதற்குமுன் வரை நிர்மலா புன்னகை முகமாய் கலகலப்புடன்தான் அந்த வீட்டில் நடமாடி வந்தாள். கணவனை இழந்த துக்கம் சோகம் அவளை இப்படி சுடுசுடுவென சுபாவம் கொண்டிருக்கும்படி மாற்றி விட்டது.

அதைத் தெரிந்து கொண்ட நிர்மலா, அதற்கும் ஒரு வழி செய்தாள். தினம் போட்டோவில் இருக்கும் அன்னபூரணியின் கணவர் படத்திற்கு மாலை போட்டு வணங்கும் பொறுப்பை வலியப் போய் ஏற்றுக் கொண்டாள்.

யாமினி அதை செய்து கொண்டிருந்தாள். நிர்மலா கேட்டதும், 'யப்பா.. விட்டது பொறுப்பு!' என்பதுபோல் அவளிடம் கொடுத்து விட்டாள்.

அன்னபூரணி தினம் காலை எழுந்ததும் அந்தப் புகைப்படம் முன் நின்று தான் மனம்உருக வேண்டுவது வழக்கம். அன்று அப்படியே வந்தவள், யாமினிக்கு பதிலாக நிர்மலா பணிவிடைகளைச் செய்வதைப் பார்த்து விட்டாள்.

அவள் முகத்தில் என்றுமில்லாததாய் கோபமும் கடுகுத் தனமும் கூடியது. ''யாமினி...'' என்றாள் கடுமையான கர்ஜிக்கும் குரலில்.



என்னவோ.. ஏதோவென்று யாமினி ஓடி வர.. அவளிடம் "இவளை யார்இதை எல்லாம் செய்யச் சொன்னது? முதலில் நீ வாங்கிச் செய்!'' என்றாள் கோபம் குறையாமலே.

அவள் பேச்சையும் செயலையும் கண்ட நிர்மலா மூக்கறுபட்டதுபோல்தான் உணர்ந்தாள்.

* * *

நிர்மலாவுக்கு அன்று என்னவோ ரொம்பவும் போரடிக்கத்தான் செய்தது. இத்தோடு அவள் வேலைக்குப் போவதை நிறுத்தி சரியாய் ஒரு மாதம் முடிந்திருந்தது.

இன்னும் இரண்டு மாத விடுப்பு இருக்கிறது. அதற்குப் பின் அலுவலகம் செல்லலாம்தான். ஆனால் மாமியார் மனமுவந்து அனுமதிப்பார்களா? என்ற சந்தேகம்தான் மனதுள் எழுந்தது.

இவ்விஷயத்தில் கிருபாகரன் இருக்கிறான். சொன்ன வாக்கை அவன் காப்பாற்றுவான் என்ற தைரியம் எழுந்தது. அன்று இரவு அதுபற்றி தயக்கமாய் கிருபாகரனிடம் கேட்டபோது, ''இதில் என்ன தயக்கம்? கண்டிப்பாக லீவு முடிந்ததும் நீ வேலைக்குப் போகலாம். யாரும் தடுக்கப் போவதில்லை..'' என்றவன், ''எனக்குத் தெரியாதா நிம்மி? தூங்கை எடுத்து ஆடிய கால்களால் சும்மா இருக்க முடியாது என்பதுபோல், வேலை பார்த்துப் பழகியவர்களால் சும்மா வீட்டில் உட்கார்ந்து கிடக்க முடியாது..'' என்றும் விளக்கமாய் சொல்லி முடித்தான்.

அப்பாடா! தம் நிலைமையை நன்கு புரிந்து வைத்திருக்கிறாளே என பெரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் நிர்மலா.

ஆனால் மறுநாள் அக்கா யாமினி அவளிடம், "நிரு, நீ மறுபடியும் வேலைக்குப் போகப் போகிறாயா?" என்று விசாரித்ததும் ஒரு கணம் திகைத்து விழித்தவள் மறுகணமே தலையை பலமாய் ஆட்டினாள்.

"நிரு.. இதை நான் எதற்கு கேட்கிறேன் தெரியுமா?" என்றபோதுதான் அவள் தன் பெயரைச் அப்படிச் சுருக்கி 'திரு' என அழைக்க ஆரம்பிப்பதை உணர்ந்தாள். அது என்ன நிரு.. கரு.. வென ஆட்டுக்குட்டியை கூப்பிடுவது போல! முழுப் பெயரை ஒழுங்காக உச்சரித்து கூப்பிட வாய்தான் இவளுக்கு வலிக்கிறதோ? என எரிச்சலாய் நினைத்தவள் அடக்கிக் கொண்டு "எதற்கு?" என்றாள்.

"எனக்கும் வீட்டில் இருந்து போரடிக்கத்தான் செய்கிறது. நானும் உன்னுடன் வேலைக்கு வருகிறேனே?" என்றாள்.

'ஆமாம்! அது ஒன்றுதான் குறைச்சல்! நீங்கள் வேலை கேட்டதும் உங்களுக்காக உடனே வாசல் கதவைத் திறந்து வைத்து விடுவார்கள் பாருங்கள்..' எனக் கேலியாய் நினைத்தவள் அமைதியாகி, "நான் மேனேஜரிடம் உங்களுக்காக கேட்டுப் பார்க்கிறேன்" என்றாள்.

ஆனால் அன்றுதான் அவளுக்கு அந்த விஷயம் ஞாபகம் வந்தது. இந்த யாமினி இப்படித் தன்னிடம் எல்லாம் அறுக்காத குறையாய் சளசளப்பவள் துபாயில் இருக்கும் தன் கணவரிடம் மட்டும் வாரம் ஒரு முறைதான்



பேசுவது வழக்கம். அது ஏன் என்று அவள் அறிந்து கொள்ள முடியாத புதிராய்த்தான் இருந்தது.

ஆனால் ஒருநாள் தங்கை மல்லிகாவுக்கும் அவளுக்கும் உடை விஷயத்தில் ஏதோ சண்டை வர அந்த ரகசியம் வெட்ட வெளிச்சமாயிற்று.

யாமினி தங்கை மேல் ஏதோ கோபம் கொண்டு, "ஏய்.. குண்டு மல்லிகா.. குண்டு மல்லிகா.." என கத்த பதிலுக்கு மல்லிகா தனது முட்டை கண்களை உருட்டி விழித்தபடி "என்ன சொன்னாய்..? என்னையா குண்டு என்று சொன்னாய்? நீ மட்டும் என்ன ஒல்லிக்குச்சு என்ற நினைப்பா? போய் கண்ணாடியில் உன் சரீரத்தைப் பார். ஆங்காங்கே புடைத்து விடைத்துக் கொண்டு.. பார்க்கவே சகிக்காது.." என கோபத்தில் வெடிக்க.. யாமினியும் விடவில்லை.

"ஏய்.. ஏய்.. என்னை.. என்னையா.. கிண்டல் செய்கிறாய்? என்னை விட குண்டு நீதான்! உன்னைக் காலேஜில் எல்லோரும் குண்டு மல்லிகா என பட்டம் சூட்டித்தானே அழைக்கிறார்கள்... பின் ஏன் என்னிடம் மட்டும் சொல்லாததை சொல்லிவிட்டது போல் கோபம் காட்டுகிறாய்?"

யாமினி கூப்பாடு போடாத குறையாய் கத்தியும் மல்லிகா விடவில்லை. அவளும் பதிலுக்குப் பதில் கொடுத்தாள்.

"என்னை விடு, உன் வண்டவாளம் மட்டும் தெரியாததா? உன் கணவன் அந்த அப்பாவி உன் குண்டு உடம்பை பார்த்து தான் தினம் தினம் சகிக்க முடியாமல்

துபாய்க்கு ஓடிப் போனார். அது மட்டுமா? உன் கரகரத்த ஆண் குரலைக் கேட்க பிடிக்காமல்தான் உன்னை அடிக்கடி போன் பேசக் கூடாது.. வாரம் ஒருமுறை பேசினால் போதும் என கன்டிஷன் போட்டிருக்கிறார்..''

மல்லிகா சொல்ல.. யாமினியும் பதிலுக்கு வெடிக்க.. அதற்கு மேல் அவர்களது சம்பாஷணைகளைக் கேட்கப் பிடிக்காமல் காதுகளை பொத்திக் கொண்டாள் நிர்மலா.

என்ன பெண்கள் இவர்கள்! உடன் பிறந்த சகோதரிகள் போலவா நடந்து கொள்கிறார்கள்? விட்டால்.. குடுமியை பிடித்துக் கொண்டு ஆளுக்கு ஆள் சண்டை போடுவார்கள் போல் தெரிகிறதே!

முதல் முறையாக அவர்களை நினைத்துப் பயப்படவும் செய்தாள் அவள்.



## 12

அன்று மறுவீடு சடங்கிற்காக தன் வீட்டுக்குச் செல்லப் போகிறோம் என்பதை காலை உணர்ந்ததுமே இன்பம் புரிய மகிழ்ச்சியும் குதூகலமும் அவளுக்கு உண்டாயிற்று.

அவள் சந்தோஷத்தைப் பார்த்த கிருபாகரனும், ''அடடா! பிறந்த வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் பெண்களுக்கு வருகிற குஷியே தனி!'' என்றான் கேலிக் குரலில்.



''பின் இருக்காதா? இவ்வளவு நாட்கள், கிட்டத்தட்ட இருபது வருடங்கள் வாழ்ந்த இடத்தை கழுத்தில் ஒரு கயிறை கட்டி நீங்கள் மூன்று முடிச்சு போட்டதும் உதறி விட்டது போல் வருகிறோமே.. அந்தத் தேடல் எங்களுக்கு இருக்காதா?''

''அட.. ரொம்பவும் அலுத்துக்கிறியே! இதோ பாரம்மா, இப்படி தாலி கட்டியதும், பெண் கணவனின் வேஷ்டியைப் பிடித்துக் கொண்டு புகுந்த வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என நான் ஒன்றும் புதிதாய் சட்டம் போடவில்லை. ஏற்கனவே இருக்கும் சம்பிரதாயச் சட்டம்தான்!'' என்றான்.

அவளும் பதிலுக்கு மோவாயில் கை வைத்துக் கொண்டு, ''இருக்கட்டுமே! அந்தச் சட்டத்தை நீங்கள் மீற வேண்டியதுதானே!'' என்றாள்.

கிருபாகரன் நாற்காலியில் சாய்வாக அமர்ந்திருந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''நான் தயார்! சட்டத்தை மீற நான் தயார்!'' என்றவன், ''இப்போது ஒன்றும் கெட்டுவிடவில்லை. நான் என் பிறந்தகத்தை விட்டு விட்டு புகுந்த வீடு புகுவதுபோல் உன் வீட்டோடு மாப்பிள்ளையாய் ஆகத் தயார்தான்! என்றவன் மீண்டும் ஜம்பமடிக்கும் குரலில், ''என்ன.. பின் நீ மட்டுமில்லாமல் உன் வீட்டு ஆட்களும் இந்த மாப்பிள்ளையைத் தாங்கித் தாங்கி உபசரிக்க வேண்டியதாய் இருக்கும்..'' சொல்லி முடிக்கவும் செய்தான்.

அதற்கு நிர்மலா பெரும் சிரிப்புதான் சிரித்தாள்.

''அட.. அப்படி ஒரு நினைப்பு வேற ஐயா மனதில் ஓடுகிறதா? வீட்டோடு மாப்பிள்ளை என்றால் மரியாதை கிடைக்கும் என்று வேறு நினைப்பா? கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதுபோல் கடைசியில் விளக்குமாறுதான் மிஞ்சும்..'' என்றபோது அவனும் சேர்ந்து சிரித்தான்.

பின் இருவரும் காலை எட்டு மணிக்கே கிளம்பி விட்டனர். காலை உணவு மதியச் சாப்பாடு என இரண்டும் நிர்மலா வீட்டில் விருந்தாய் சாப்பிட ஏற்பாடு ஆகியிருந்தது. கிளம்பும்போது அன்னபூரணியிடம் சொல்லிக் கொண்டு இருவரும் கிளம்ப, ''சாயங்காலம் நேரத்தோடு திரும்பி வந்துவிடு. அவள் ஆசைப்பட்டாள் என அங்கே பெஞ்சைத் தேய்த்தபடி உட்கார்ந்து நேரத்தைப் போக்காதே!'' என்றாள் கிருபாகரனைப் பார்த்து.

முன்பு என்றால் நிர்மலாவுக்கு இந்த இதுபோன்ற சுருக் குத்தலில் கோபம் வந்திருக்கும். இப்படி அடிக்கடி குத்தல் செய்வதால் அது கூட அவளுக்குப் புளித்துப் போகலாயிற்று.

கிருபாகரனுக்கும் அப்படியே போலும். பிறந்ததில் இருந்து அன்னையின் இதுபோன்ற பேச்சை கேட்டு பழகி விட்டதால் அவன் ஒன்றும் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை. 'சரி' என்ற தலையாட்டலுடன் நடக்க ஆரம்பித்தான்.

அவனுடன் வெளிவந்து பைக்கில் ஏறி எதிர் வீட்டுக் காம்பவுண்டைத் தாண்டியதும்தான் ஒளிந்திருந்த மகிழ்ச்சி மறுபடியும் வெளிவந்தது.



அரைமணி நேர பயணத்தில் இருவரும் வீட்டை அடைந்து விட்டனர். வாசலிலே அவர்கள் வருவதை பார்த்து வரவேற்கத் தயாராய் நின்று கொண்டிருந்தார் தந்தை சுந்தரம்.

தந்தையைக் கண்டதும் பாசம் பொங்க, ''அப்பா..'' என்றபடி அவரது கைகளைப் பிடித்துக் கொண்டாள் நிர்மலா. தங்கை நீலாவும் அக்காவை பார்த்து ஓடி வந்து கழுத்தோடு இறுக்கி கட்டிக் கொண்டாள். அவர்களது பாசப் பொழிவை புன்னகையுடன் பார்த்துக் கொண்டு உள்ளே நுழைந்தான் கிருபாகரன்.

கிருபாகரன் அப்போதுதான் முதன் முறையாக தன் வீட்டுக்கு வந்திருப்பதால் நிர்மலா ஆவலாகி வீட்டின் ஒவ்வொரு பகுதியாய் அவனை அழைத்துக் கொண்டு போய் சுற்றிக் காண்பித்தாள்.

மூன்று தட்டுகளே கொண்ட சிறு வீடு என்றாலும் மரப்படிகள் வழியாக ஏறிச் செல்லும் சின்ன மாடி. மாடியில் அதேபோல் சிறிதாக இரண்டு அறைகள். ஒன்று நிர்மலாவுக்கு மற்றொன்று தங்கை நீலாவுக்கு.

எல்லாவற்றையும் கிருபாகரனுக்கு காட்டி அவனை அவளது அறையில் உள்ள சிறிய மரக்கட்டிலில் உட்கார்த்தி வைத்தாள் நிர்மலா.

''இதுதான் எனது உலகம். வேலை முடிந்து வந்து இங்கு படுத்தால் களைப்பே தெரியாது. மணிக் கணக்காய் கண்களை மூடிக் கொண்டு அப்படியே கிடப்பேன்..'' என அவள் சொல்ல அவன் ஆவலானான்.

"அப்படியா? எங்கே நானும் படுத்துப் பார்க்கிறேன்.." என்றபடி அந்தக் கட்டிலில் அவள் சொன்னதுபோல் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான். ஓரிரு நிமிடங்கள் அப்படியே இருந்தான்.

பின் புன்னகையுடன் எழுந்தவன், "நீ சொல்வது உண்மைதான். பெரிய ஏஸி ரூமில் கிடைக்காத சுகம் இங்கு கிடைக்கிறதே!" என்றான்.

அத்தோடு நிர்மலா விடவில்லை. அவள் சேர்த்து வைத்த புத்தக அலமாரி, அவள் பாட்டு கேட்கும் சிறிய டிரான்சிஸ்டர், அவள் தினம் தினம் நடப்பதை எழுதி வைக்கும் டயரித் தொகுப்புகள் என ஒவ்வொன்றாய் காட்ட, அவளைப் போலவே புருவம் உயர்த்தி ஆச்சரியத்துடன் பார்த்தான் அவன்.

"என்ன உனக்கு டயரி எழுதும் பழக்கம் உண்டா?" என்றான் வியப்போடு.

பலமாய் தலையாட்டினாள் நிர்மலா.

"சிறு வயதில் பள்ளியில் படிக்கும்போது மாரல் டீச்சர் ஒருவர்.. கையெழுத்திற்காகவும், நல்ல பழக்க வழக்கங்களுக்காகவும் டயரி எழுதச் சொன்னாங்க. அது அப்படியே வளர வளர பழக்கமாகி விட்டது.."

"அப்படியானால் எல்லாவற்றையும் எழுதி வைத்திருக்கிறாயா?"

அதற்கும் அவள் பெரிதான தலையசைப்புடன் தலையை ஆட்டியவள், "ம்ம்.. உங்கள் வீட்டில் பெண்



பார்க்க வந்தது.. நீங்கள் என்னிடம் வந்து பேசியது என்று ஒன்று விடாமல் எழுதி வைத்திருக்கிறேன்.." என்றாள்.

அவன் பதிலுக்கு தலையாட்டியவன், "அவை எல்லாவற்றையும் நான் படிக்க வேண்டும். படிக்க எனக்கு அனுமதி உண்டா?" என்றான் கண்களைச் சிமிட்டியபடி.

"கண்டிப்பாக உண்டு.." என்று அவளும் பதிலுக்கு கண் சிமிட்டி சிரித்தாள்.

"அப்படியானால் நான் கிளம்பும் போது அந்த டயரிகளை ஞாபகமாக எடுத்துக் கொண்டு வா!" என்றான் கிருபாகரன்.

பதிலுக்கு உற்சாகமாய் தலையாட்டியவள் அப்போதே தன் ஹாண்ட் பேக்கை எடுத்து அதனுள் அந்த டயரிகளை வைத்து பத்திரப்படுத்திக் கொண்டாள்.

அதற்குள் காலை உணவு ரெடியாக இருப்பதாய் அறிந்து இருவரும் கீழே இறங்கி சாப்பிட வந்தனர். நீலாதான் ஓடியாடி பரிமாறினாள்.

அவளது பழைய சேலை ஒன்றை கட்டிக் கொண்டு பெரிய மனுஷி போல் அவள் அலைந்து வேலை பார்ப்பதை நிர்மலா ரொம்பவும் ரசித்தாள்.

சாப்பிட்டு முடித்ததும் முன் ரூமில் அமர்ந்து குருநாதரும் கிருபாகரனும் பேச ஆரம்பித்தனர். நடுக்கட்டில் நீலாவுடன் அமர்ந்து வீட்டுக் கதைகளை கேட்க ஆரம்பித்தாள் நிர்மலா.

நேரம் போவது தெரியாமல் தான் நால்வரும் பேசிக் கொண்டிருந்தனர் போலும். மதியம் மணி இரண்டை கடிகாரம் காட்டியபோதுதான் உணர்வுக்கு வந்தார்கள்.

பின் மதிய உணவை முடித்துவிட்டு மறுபடியும் பேசிவிட்டு மாலை ஐந்து மணிக்கு இருவரும் கிளம்பி விட்டார்கள். கண்ணெல்லாம் கலங்கியவளாய் அவர்களிடம் மனமுருக விடை பெற்று கிளம்பினாள் நிர்மலா.



## 13

தினமும் சுவாரஸ்யமாக ஏதாவது செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் அவன் தன்னை வியந்து ரசிக்க வேண்டும் என்ற நினைப்பே நிர்மலாவின் மனதில் தினமும் ஓடியது.

அதனாலே அன்று அந்த கிளிப் பச்சை ஜரிகை பார்டர் சேலையை, உடம்போடு ஒட்டி அவளை நளினமாக காட்டிய சேலையைக் கட்டிக் கொண்டு அவன் முன் போய் நின்றாள்.

வீட்டில் இதைக் கட்டியபோது "இந்தச் சேலையில் நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?" என எல்லோரும் புகழ்ந்து தள்ளியது அவள் காதுகளில் எதிரொலித்தது.

அதைப் போலவே அவனும் அதைப் பார்த்து கிறங்க வேண்டும்.. என்ன ஒரு அழகு.. என புகழ வேண்டும்.. என எதிர்பார்ப்பு அவள் மைவிழிக் கண்களில் மின்னியது.

மனதிலோ, அவன் அப்படியே பார்த்துக் கொண்டிருக்கும் வேலையைப் போட்டுவிட்டு, ஓடி வந்து அவளை இறுக்கக் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையும் குதூகலித்தது.



என்ன இது? அவள் ஆசைப்படி எதிர்பார்ப்புப்படியே எல்லாம் நடந்தது.

காணாததைக் கண்டது போல் பார்த்துக் கொண்டிருந்த அலுவலக பைலை அப்படியே கீழே போட்டு விட்டு ஓடி வந்து ஆசையாய் அவளைக் கட்டினான் கிருபாகரன். அதுவும் இறுக்கமாய் மூச்சு முட்டும் அளவுக்கு!

"ஐயோ! என்ன இது விடுங்கள்.." என திணறித்தான் போனாள் அவள். அவனது இறுக்கமான ஸ்பரிசம் அவளை கிறங்கடித்தாலும் அவன் முத்தாய் காதுகளில் உதிர்த்த வார்த்தைகள் அவளை திக்குமுக்காட வைத்தது.

"இப்படி ஒரு அழகுச் சிலை வந்து அப்சரசாய் நின்றால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க நான் என்ன முட்டாளா?" என்றபோது தன் மீது இவ்வளவு அன்பு ஆசை வைத்திருக்கிறானே என அவள் சொக்கித்தான் போனாள்.

"உன் அழகிற்கு இந்த அடிமையின் பரிசு" என மென்மையாய் அவளது செவ்விதழ்களில் முத்தமிட்டு விட்டு விலகினான் அவன்.

ஓரேடியாய் பூரித்துதான் போனாள் அவள்!

அழகைப் புகழ்ந்தது, இறுக அணைத்தது என அதோடு நில்லாமல் போனசாக முத்தம் வேறு கொடுத்து விட்டானே!

"நீ இந்தச் சேலையில் ரொம்பவும் அழகாய் இருக்கிறாய்" என்று மறுபடியும் சொல்லி இதழ் விரிந்த பளீர் சிரிப்புடன் அவளை முழுவதுமாய் விடுவித்து அதே குறும்புடன் செல்லமாய் அவள் பின்புறத்தை ஒரு தட்டு தட்டியபடி

அவன் வேலைகளைக் கவனிக்கச் செல்ல கிறுகிறுத்துத் தான் போனாள் அவள்.

இது இதைத்தானே... அவள் எதிர்பார்த்தாள்!

கல்லூரி நாட்களில் சக மாணவியரோடு எதிர்கால கணவன் பற்றிய கனவு காணும்போது இப்படி இப்படியெல்லாம் எனக்கு வருகிறவர் இருப்பார். இருக்க வேண்டும் என்று வரையறுத்து பட்டியல் கூட போட்டாளே?

தோழிகள் எல்லாம் கூட கிண்டல் செய்தார்களே...? நிர்மலா.. நீ சொல்லுகிற படி ஆளை படைக்கக் கூட முடியாது.. ஆராய்ச்சிக் கூடத்தில் ஜீன் மூலமாகத்தான் உருவாக்கத்தான் வேண்டும்..!''

ஆனால்.. அவள் நினைப்பு படியே கிருபா.. கிருபாகரன் அமைந்து விட்டானே!

அவளுக்கு கிருபாகரனிடம் பிடித்த இன்னொரு விஷயமும் உண்டு.

என்னதான் திடீரென வந்து அணைத்தாலும், சட்டென முத்தமிட்டாலும், ஒரிரு நிமிடங்களிலே அவளை விடுவித்து விலகி விடுவான். அவனது எந்த செய்கையும் அவளை எரிச்சல்படுத்தி விடக் கூடாதாம்!

அதாவது அவன் ஆசையாய்ச் செய்தாலும் அவளுக்கும் உணர்வுகள் உண்டு! அவளை எந்நிலையிலும் சங்கடப் படுத்தி விடக் கூடாது என்பது போல்! அதுபோன்ற சூழ்நிலையில் அவளும் விலகியவனை இழுத்து இறுக அணைத்து தன் அன்பை தெரிவிப்பாள்.



அப்படிச் செய்யும்போது அவளுக்கே குறுகுறுப்பாய்த் தான் இருக்கும். இதைத்தான் கதைகளில் சினிமாப் படங்களில் 'ரொமான்ஸ்' என்று சொல்கிறார்களோ.. என்று வியப்பாள்.

கிருபாகரனுக்கு எப்படித்தான் தெரியுமோ.. என்ன மாயம் செய்து கண்டுபிடித்தானோ.. அவள் நினைக்கிற விரும்புகிற விஷயங்களை எல்லாம் அவள் கேட்காமலே நிறைவேற்றி வைத்தான்.

அவளுக்குக் கதைப் புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தை அறிந்து மறுவாரமே வீட்டுப் பக்கம் இருந்த பொது நூலகம் ஒன்றில் அவளை அழைத்துப் போய் உறுப்பினராக்கினான்.

தினம் அலுவலகம் முடிந்து வீடு வந்ததும் பைக்கில் ஷாப்பிங் அல்லது காலாற ஒரு வாக்கிங் என அவளைக் கூட்டிக் கொண்டு போவதை வழக்கமாக்கினான்.

அப்படியொரு ஒரு மணி நேர தனிமையில் இனிமையாய் அவனுடன் நடப்பது அவளுக்கு பேரின்பம் போல் இருந்தது.

சில சமயம் பக்கத்து சிறுவர் பூங்காவில் விளையாடும் வாண்டுகளின் சேஷ்டைகளை ரசித்தபடி சிமெண்டு பெஞ்சில் அமர்ந்து இருவரும் மணிக் கணக்காய் பேசுவார்கள்.

பழைய கதைகள் சிறு வயதில் விஷயங்கள் என கிருபாகரன் ஒவ்வொன்றாய்ச் சொல்ல... அவள் ஆர்வம் பொங்க கேட்பாள்.

அவன் சொல்லும் சாதாரண விஷயம் கூட பெரும் சுவாரஸ்யம் உள்ளது போல்தான் அவளுக்குத் தோன்றும்.

பதிலுக்கு அவளைப் பற்றி கேட்பான் அவன்.

தனது சிறு வயது அனுபவங்களை, தாயின் அன்பு அரவணைப்பு இல்லாமல் தானும் தங்கையும் பாசத்துக்காக ஏங்கி கஷ்டப்பட்டு வளர்ந்த சூழ்நிலைகளை விளக்குவாள். தந்தை குருநாதர் தங்கள் இருவரது நலனுக்காகவே உறவினர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் மறு கல்யாணம் செய்ய மறுத்து, தன் வாழ்நாளை தங்களை வளர்ப்பதிலேயே அர்ப்பணித்து விட்டதையும் சொல்வாள்.

இரக்கம் பொங்க கேட்பான் அவன்.

இப்படி இருவரும் அடிக்கடி பார்க்கிற்குச் சென்று நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டு வருவதைக் கண்ட அன்னபூரணிக்குத்தான் பெரும் எரிச்சல் ஏற்பட்டது.

தனது எரிச்சலை அன்றே அவர்களிடம் காண்பிக்கவும் செய்தாள் அவள்.

"என்ன இது பழக்கம்? பேச வேண்டும் என்றால் இங்கு வீட்டில் உட்கார்ந்து பேச முடியாதா? பக்கத்து சிறுவர் பூங்கா பெஞ்சில் போய் தினம் தினம் உட்கார்ந்தால்தான் பேச்சு வருமோ?'' என குத்தலாய்க் கேட்கவும் நிர்மலா வாயடைத்துப் போனாள்.

முன்னால் விறுவிறுவென நடந்து ரூமிற்குள் நுழைந்த கிருபாகரன், இதைக் கேட்டானா இல்லை கேட்டு விட்டுத்தான் ஒன்றும் பதில் பேசாமல் அகன்றானா.. என்பதை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.



ஆனால் அவன் மறுநாள் வழக்கம் போல் வாக்கிங் செல்லக் கூப்பிட்டபோது அவள் நாசூக்காய் மறுத்து, "இங்கு உட்கார்ந்தே பேசலாமே?'' என்றாள். கிருபாகரனும் மேற்கொண்டு எதுவும் கேள்விகள் கேட்காமல், ''சரி, உன் இஷ்டம்..'' என்று சொல்லிவிட்டான்.

அவளுக்கு அன்னபூரணிக்கு தாங்கள் அப்படிச் செய்வதில் பிடித்தமில்லாதபோது அதை மீறிச் செய்யவும் மனமில்லை. ஆரம்பத்திலேயே அப்படி பிடிக்காததை செய்து அன்னபூரணியின் வெறுப்பை சம்பாதித்து விடக் கூடாது எனவும் நினைத்தாள்.

மேலும் கிருபாகரன் தாய் விஷயத்தில் ஒருவித நிலைப்பாட்டை வைத்திருப்பதைப் பார்த்து வியக்கவும் செய்தாள். அன்னபூரணி எதிலாவது தலையிட்டு வீண் பிரச்சினைகளைக் கிளப்பினாலும், அவனை எந்த விஷயத்திலாவது குறை கூறி கடிந்தாலும் பதிலுக்கு தாயுடன் வாதிடாது அமைதியாய் இருந்து விடுவான் கிருபாகரன்.

அதாவது தாயார் சொல்வது சரியோ தப்போ.. எதுவானாலும் சரி, ஒருபோதும் அதை தான் எதிர்த்து பேசிவிடக் கூடாது என்பதில் உறுதியாய் இருப்பான் அவன்.

நிர்மலாவுக்கு கூடவே ஒரு பயமும் எகிறுவது உண்டு. இப்படிப்பட்டவன் முன் அவள் அன்னபூரணியை எதிர்த்து ஏதாவது செய்தாலோ அல்லது பதிலுக்கு பதில் வார்த்தைகளை பதிலடியாய் விட்டாளோ, தன்னை நோக்கி

புயலாய் புலிபோல் சீறி விடுவான் என்பதையும் உணர்ந்திருந்தாள்.

ஆனால் அன்னபூரணிதான் அவள் நினைப்பில் இருந்து விடுபட்டு கொஞ்சம் கொஞ்சமாய் மாறிக் கொண்டிருந்தாள். புன்னகையும் சாந்தமும் தவழும் அன்னபூரணியின் மங்களகரமான முகத்தைப் பார்த்ததும் முதலில் தன் தாயில்லாத குறையை தீர்க்க வந்தவர்கள் இவர்கள் என்று தான் புளகாங்கிதம் அடைந்தாள் நிர்மலா.

ஆனால் நாளாக நாளாக நடந்தது வேறு. அன்னபூரணியிடம் அந்த அமைதியான சுபாவம் கொஞ்சமும் இல்லை. எப்போதும் அந்தச் சிடுசிடுத்தனம்தான். வேண்டா வெறுப்பாய் அவளைப் பார்ப்பது போன்ற ஒரு பார்வைதான்!

சொல்லப் போனால் நிர்மலா முதன் முதலாய் தன் வீட்டில் பெண் பார்க்க வந்தபோது பார்த்த அன்னபூரணி வேறு இப்போது பார்க்கும் அன்னபூரணி வேறு! சாந்தமும் கருணையும் இருந்த முகம் மாறி.. அவளை யாரோ.. வேண்டாதவர் போல் தங்கள் வீட்டிற்கு இடைஞ்சலாக வந்தவள் போல் அல்லவா பார்க்கிறாங்கள்.

ரொம்பக் கூர்ந்து அன்னபூரணியின் பேச்சுகளையும் நடவடிக்கைகளையும் கவனித்து இந்த விஷயத்தைக் கண்டுபிடித்தாள் நிர்மலா.

இப்படிப்பட்ட மாமியாரின் சுபாவம் ஆபத்தானதே.. அவள் எது செய்தாலும் குறை கண்டுபிடிக்கக் கூடியதே.. என்ற பயமும் அவளுள் உண்டாயிற்று.



திருபாகரனை அன்பு காட்டி தன் வசப்படுத்தி, தன் மீது அன்பு காட்டும்படி வைத்தது போல் அன்னபூரணியை, அவர்களது மொத்தக் குடும்பத்தையும் அன்பால் அரவணைத்து கட்டிப் போடுவதுதானே அவளது லட்சியம்.. தீராத ஆசை?

ஆனால்.. அது.. அன்னபூரணியின் விஷயத்தில் நடைபெறுவது கடினம்போல் தோன்ற திகைக்கத்தான் செய்தாள் அவள்.

அவள் திகைப்பை மேலும் அதிகமாக்கும்படி அக்கா யாமினியும் தங்கை மல்லிகாவும் செயல்பட.. இந்தக் குடும்பத்தை அன்பால் கட்டிப் போட நினைக்கும் தன் ஆசை நிறைவேறாதா? என கலங்கத்தான் செய்தாள் நிர்மலா.



## 14

இரண்டு நாள் கழித்து வீட்டில் நடந்த சம்பவம் ஒன்று நிர்மலாவை பெரும் திகைப்பில் ஆழ்த்தி விட்டது. அன்று மதியம் கொஞ்சம் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவள் விழிப்பு தட்டிவிட தன் அறையிலிருந்து கீழிறங்கி வந்தாள்.

பின்புற தோட்டத்து கிணற்றடிப் பக்கம் பேச்சு சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பேச்சுகள் ஒரேமாதிரியாக மெல்லிய சப்தத்தில் கிசுகிசுப்பாய் இருப்பதுபோல் இருக்க தன்னையறியாமல் ஆவலாகி காதை தீட்டினாள் அவள்.

மாமியார் அன்னபூரணி, அக்கா யாமினி, தங்கை மல்லிகா என மூவரும்தான் எதிர் எதிரே அமர்ந்தபடி பேசிக் கொண்டு, பேச்சில் தன் பெயர் அடிக்கடி அடிபட நிர்மலாவின் ஆவல் அதிகமானது.

''ஆனாலும் பாரம்மா... இந்த கிருபா கத்த மோசம். அவள் பெரிய அழகி என எண்ணிக் கொண்டு, அவள் முந்தானை யையே பிடித்துக் கொண்டு.. அவள் சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டு.. பார்ப்பதற்கே ரொம்பவும் கேவலமாய் இருக்கிறதம்மா.. எப்படி இருந்த கிருபா.. எப்படி மாறிவிட்டான்!''

யாமினி இவ்வாறு அன்னபூரணியிடம் சொல்ல அவள் அதற்கு பெரிதாய் தலையாட்டுவது தெரிந்தது. அதற்குள் முந்திரிக் கொட்டை போல் மல்லிகாவின் குரல் நுழைந்தது.

''ஆமாம்.. ஆமாம்.. அண்ணன் கிருபா ரொம்பவும் மாறிவிட்டான்தான். முன்பெல்லாம் என்னிடம் அடிக்கடி வந்து பேசுவான், தங்கை என பாசமாய் ஏதாவது வாங்கிக் கொடுப்பான். இப்போது..? என் பக்கமே வருவதில்லை... எல்லாம் அந்த மாயக்காரியே கதி என அவளுடன் ரூமிலே பித்தன் போல் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டு..''

மல்லிகா சொல்ல அதற்கும் தலையாட்டிய அன்னபூரணி தன் பங்கிற்கு ''நீ சொல்வது போல் அவள் மாயக்காரிதான். அவள் என்ன மாயம் செய்தாளோ அவனிடம் வசியம் போட்டது போல் பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடக்கிறான். இவனை என்ன செய்வது?'' என்று அலுப்பது நிர்மலாவுக்குக் கேட்டது.



''என்னவாவது நாம் செய்தாக வேண்டும்..'' என்றாள் யாமினி உரத்த குரலில்.

''நீயே சொல்லு..'' என்றாள் அன்னபூரணி.

''முதலில் அவர்கள் நெருக்கத்தைக் குறைக்க வேண்டும்..'' என்றாள் யாமினி.

''நெருக்கத்தை என்றால்..?'' எனக் கேட்டாள் மல்லிகா.

''அதான் அண்ணன் தினமும் அவளை ஷாப்பிங், கோவில், சினிமா என எங்காவது கூட்டிக் கொண்டு போகிறானே.. அவளும் சீவிச் சிங்காரித்து உடனே குதி போட்டபடி பின்னால் செல்கிறாளே.. அதைத்தான் சொல்கிறேன்.. நாம் அதைத்தான் நிறுத்த வேண்டும்..''

''எனக்குப் புரிகிறது..'' என்றாள் அன்னபூரணி.

''எனக்கு அப்படி அவள் சீவிச் சிங்காரித்து ஒவ்வொரு முறை, வெளியே போகும் போதும் பற்றிக் கொண்டு வரும். எனக்கும் புருஷன் என்று ஒருத்தர் வாய்த்தாரே.. ஒருநாளாவது என்னை இப்படி கூப்பிட்டுப் போயிருப்பாரா.. என்றுதான் எரிச்சல் வரும்.''

தன் ஆங்காரத்தை முழுவதும் குரலில் கொட்டி யாமினி பேச பதிலுக்கு மல்லிகா எண்ணெய்தான் ஊற்றினாள்.

''எல்லோருக்கும் அண்ணன் கிருபா மாதிரி இளிச்சவாயன்கள் கிடைப்பார்களா? அந்த நம் வீட்டு சிங்காரி மருமகளுக்குத்தான் அந்த யோகம் இருந்திருக்கிறது. உனக்கில்லையே!''

''ஆமாம்.. நீ சொல்வது சரிதான்! கிருபா சரியா இளிச்சவாயனைத்தான் நடந்து கொள்கிறான். அவனை ஒரு வார்த்தை கடுமையாகவோ ஒரு விரட்டலாகவோ பேசி இருப்பானா..? எல்லாவற்றுக்கும் ஆமாம் சாமி போல் காலில் விழாத சரணாகதிதான்! நம் கிருபாகரனா இப்படியெல்லாம் மாறிவிட்டான் என நெஞ்சு பதறத்தான் செய்கிறது...''

மல்லிகாதான் மறுபடியும் இடைமறித்தாள்.

''சரி.. சரி.. ஆள்.. ஆளுக்கு இப்படி பேசிக் கொண்டிருப் பதில் எவ்வித பிரயோஜனமும் இல்லை. என்ன தீர்வு செய்யலாம்? அதைச் சொல்லுங்கள்!''

''எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றுகிறது..'' என்றாள் யாமினி.

''என்ன யோசனை சொல்லு?''

''முதலில் கிருபா அந்தச் சிங்காரியைக் கூட்டிக் கொண்டு வெளியே சுற்றுவதை தவிர்க்க வேண்டும். அடியோடு நிறுத்த வேண்டும்..''

''அதாவது அவள் எங்கும் வெளியே போகாமல் வீட்டினுள்ளே அடைந்து கிடக்கும்படி செய்ய வேண்டும். அப்படித்தானே?''

''அதேதான்!'' என்றபடி யாமினி பலமாய் தலையாட்டுவது தெரிந்தது. ''அப்படிச் செய்து விட்டால்.. அவள் தினமும் புதுப்புது சேலையைக் கட்டிக் கொண்டு கொஞ்சிக் குலவி கிருபாகரனுடன் ஊர் சுற்ற முடியாது. வீட்டிலேயே முடங்கி விடுவாள்.''



''நீ சொல்வது சரிதான். நல்ல ஐடியாதான். ஆனால்.. எப்படிச் செய்வது?''

''எப்படிச் செய்வது என்றால்?''

''கிருபாகரனே ஆசை ஆசையாய் அவளை வெளியே அழைத்துச் செல்லும் போது நாம் எப்படி தடுக்க முடியும்?''

''முடியும்!'' என்றாள் யாமினி குரலை உயர்த்தியபடி.

''அது எப்படி?''

மல்லிகா கேட்க யாமினி மறுபடியும் கிசுகிசுவென விவரிக்க ஆரம்பித்தாள்.

அதன்படி அப்படி கிருபாகரன் நிர்மலாவை கூட்டிக் கொண்டு கிளம்பும் ஒவ்வொரு சமயமும் யாமினி அல்லது மல்லிகா நானும் உடன் வருகிறேன் என வலுக்கட்டாயமாக அவர்களுடன் தொற்றிக் கொள்ள வேண்டும். அவர்கள் இருவருக்கும் அப்படி பிடிவாதம் பிடித்து கேட்கும்போது வேறு வழியில்லாது போய்விடுமாம். இப்படி ஒவ்வொரு முறை அவர்கள் கிளம்பும் போதும் யாராவது ஒருவர் தொற்றிக் கொண்டால்.. நினைத்ததை சாதித்து விடலாமாம்.. அக்காவையோ தங்கையையோ கூட வைத்துக் கொண்டு கிருபாகரனால் தன் மனைவியை கொஞ்சிக் குலவ முடியாதாம். மேலும் இப்படிச் செய்தால் நிர்மலாவே எரிச்சலாகி இனிமேல் நாம் வெளியே போக வேண்டாம்... வீட்டிலேயே இருப்போம் என்று சொல்லி விடுவாளாம்!''

அவர்கள் ஒவ்வொன்றாகப் பேசி ஒரு முடிவெடுத்தது போல் கடைசியாய் அதைக் கூறி முடித்தார்கள்.

அவர்களது சம்பாஷணைகள் எல்லாம் கேட்ட நிர்மலாவிற்கு மூச்சே நின்று விடும்போல்தான் இருந்தது. அவள் என்ன அவர்களை மனதில் நினைத்து முயன்று கொண்டிருக்கிறாள்? அவர்களிடம் நல்ல பெயர் எடுத்து எல்லோரும் கூட்டுக் குடித்தனமாய் சந்தோஷமாய் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஆசைப்பட்டால்..? அவர்கள் அவர்களோ அவளை.. சினிமாவில் வரும் வில்லியைப் போல் அல்லவா பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்?

மகனை.. மயக்கி விட்டாளாம்... சிங்காரியாம்! அவள் சொல்வதற்கெல்லாம் பூம் பூம் மாடு போல் கிருபாகரன் தலையாட்டுகிறானாம்!

நிர்மலா இப்படி ஒரு விஷயத்தை இப்படி அவர்கள் பேசுவார்கள் என்பதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. வேறு ஏதோ பேசிக் கொண்டிருப்பார்கள் எனத்தான் கவனிக்க ஆரம்பித்தாள்.

ஆனால் அவர்கள் தன்னைப் பற்றி இவ்வளவு பெரிய விவகாரமாய் தனது நடவடிக்கைகளை ஆக்கி பேசுவார்கள் என அவள் நினைத்துப் பார்க்கவில்லை.

அவர்கள் பேச்சை முடித்து விட்டது போல் தெரிய தன் பின்புற ரூமில் இருந்து அவர்கள் பேசியதைக் கேட்டு விட்ட விஷயம் அவர்களுக்குத் தெரிந்து விடக் கூடாது என நினைத்தாள். அதனால் வந்தது போலவே ஓசைப்படாமல் பின்னோக்கி நடந்தாள். மாடிப் படி ஏறி தன் ரூமிற்குச் சென்றாள்.



கட்டிலில் போய் பொத்தென விழுந்தாள்.

என்ன மனிதர்கள் இவர்கள்! என்றே அவளுக்கு நினைக்கத் தோன்றியது.

அக்கா யாமினி, தங்கை மல்லிகாவைக் கூட விட்டு விடுவோம்.

மாமியார் அன்னபூரணி?

இவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் இருந்து புத்தி சொல்ல வேண்டியவள்.. இவர்களுடன் சேர்ந்து பழித்துப் பேசுவது.. எந்த விதத்தில் நியாயம்?

மகனுக்கு கட்டி வைத்த பெண்ணை, தங்களையே நம்பி வந்திருக்கும் ஒரு பெண்ணை ஏதோ அவர்களது நிம்மதியைக் கெடுக்க வந்த விரோதி போல் அல்லவா பார்க்கிறார்கள்?

அவர்கள் புதிதாய் கல்யாணமானவர்கள், பேச்சும் சிரிப்புமாய் இருப்பது வழக்கம்தானே! புதுமணத் தம்பதிகள் இப்படி உற்சாகமும் குஷியுமாய் இருப்பது இயல்புதானே?

அதை வேண்டுமென்றே பொறாமைக் கண் கொண்டு பார்த்தால் எப்படி?

அதுவும் உடன் பிறந்த அக்காவும் தங்கையுமே தன் உடன் பிறந்த அண்ணனின் சந்தோஷத்தை எதிரி போல் பார்த்தால் எப்படி?

இதில் யாமினிக்குக் கூட தன் கணவன் தன்னை இப்படியெல்லாம் கொஞ்சவில்லையே என்ற ஆதங்கம்

ஏற்பட்டிருக்கலாம். அந்த ஆதங்கமே எரிச்சலாய் பொறாமையாய்க் கூட மாறியிருக்கலாம்! அதனால் யாமினி இப்படிப் பேசுவதில் கூட வியப்பில்லை! ஆனால் இந்த கல்லூரியில் படிக்கும் மல்லிகாவிற்கு என்ன வந்தது?

அவள் தன் சொந்த அண்ணன், அண்ணி சந்தோஷமாய் குடும்பம் நடத்தினால் அதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்வாளா.. அதை விட்டுவிட்டு.. இப்படி பொறாமை கொண்டு.. இப்படித் திட்டம் தீட்டுமளவுக்கு.. போய் விட்டார்களே!

அது என்ன... என்ன சொன்னார்கள்? இருவரது நெருக்கத்தையும் குறைக்க வேண்டுமாம்? அவள் கிருபாகரனுடன் வெளியில் சுற்றாமல் சதா வீட்டிலேயே அடைந்து கிடக்கும்படி செய்ய வேண்டுமாம்!

என்ன ஒரு அபாண்டம் இது! எல்லோரும் புதிதாய் கல்யாணம் ஆன கணவனும் மனைவியும் எவ்வித சச்சரவும் இல்லாமல் சந்தோஷமாய் வாழ வேண்டும் என்று நினைப்பார்கள். இங்கு என்னடாவென்றால் நேர்மாறாய்.. அவர்கள் மகிழ்ச்சியாய் சந்தோஷமாய் இருக்கக் கூடாது என்றல்லவா நினைக்கிறார்கள்?

என்ன கொடுமை இது!

திரும்பத் திரும்ப அவர்கள் பேசிய விஷயத்தையே பயம் பொங்க நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் நிர்மலா.

முதலில் இந்த விஷயத்தை கிருபாகரனிடம் உடனே சொல்லியாக வேண்டும் என்றுதான் நினைப்பு ஓடியது.



அப்படி நினைக்கும்போதே அவன் இதையெல்லாம் நாம் சொன்னாலும் நம்புவானா? என்ற சந்தேகமும் அவளுள் எழுந்தது.

'என்ன நீ? என் உடன்பிறந்தவர்களைப் பற்றி என்னிடமே தவறாக சொல்கிறாயே? உனக்கு என்ன வந்துவிட்டது? ஏன் அவர்களை வெறுக்கிறாய்?' என நம்பாமல் தன்னையே எதிர் கேள்வி கேட்டு விட்டால்.. அது அவளுக்கு மிகுந்த வருத்தத்தையும் சங்கடத்தையும் ஏற்படுத்தி விடுமே!

பின் என்ன செய்வது?

கிருபாகரனிடம் சொல்லாமல் இருந்து விடுவதா?

இவ்வளவு பெரிய விஷயத்தை கிருபாகரனிடம் சொல்லாமல் மறைப்பதும் தவறுதானே?

நாளை இவர்கள் பிளான் செய்தது போல் எதுவும் விபரீதமாய் நடந்து விட்டால், அன்று கிருபாகரனுக்கு உண்மை தெரிய வந்தால், என்னிடம் அன்றே ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதானே? என அவன் கேட்டு விடுவானே! என்ற நினைப்பும் ஓடியது

ஒருவாறு பலவிதமான யோசனைகள், பலவாறாய் மனதுள் ஓடி ரொம்பவும் குழம்பித்தான் போனாள் நிர்மலா.

அப்படியே சிலை போல் பிரமை பிடித்த நிலையில் அவள் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாள் என்று தெரியாது.

தற்செயலாய் தன் தலையை இதமாய் ஒரு கரம் பற்றி மென்மையாய் நீவி விடுவது உணர்ந்து கண் இமைகளை அவசரமாய்ப் பிரித்தாள்.

வசீகரப் புன்னகையுடன் அவளையே பார்த்தபடி கிருபாகரன் நின்று கொண்டிருந்தான்.

கிருபாகரனைப் பார்த்ததும்தான் அவளுக்கு திரும்பவும் மூச்சு வந்தது போலவே இருந்தது. அப்படியே தாவி அவனைக் கட்டியவள் சிறு குழந்தை போல் அவன் நெஞ்சில் ஒண்டிக் கொண்டாள்.

கிருபாகரனும் அவள் நிலை புரிந்தவன் போல் முதலில் ஒன்றும் கேட்கவில்லை. பரிவாய் அவள் சாய்ந்திருந்த தலையை வருடியவன் எவ்வித சலனமுமில்லாமல் கொஞ்ச நேரம் அவளை அப்படியே வைத்துக் கொண்டான்.

நிர்மலாவுக்குத்தான் ஒரே ஆச்சரியம்! இதற்கு என்ன.. எதற்கு? என்று கொஞ்சங் கூட பதறாமல் அவள் அபயம் போல் நெஞ்சில் திடீரென போய் ஒட்டிக் கொண்டதும் - ஒரு கேள்வியைக் கூட அவளிடம் கேட்காமல் இதமாக அவளை அணைத்து பரிவாக அவளை வருடி - ஆசுவாசப்படுத்திக் கொண்டு இருக்கிறானே?

அவ்வளவு தூரம் அவன் அவளைப் புரிந்து வைத்திருக்கிறானா?

இருவருக்குள் அந்தளவுக்கு சொல்லாமலே புரிந்து கொள்ளும் 'அண்டர்ஸ்டாண்டிங்' வந்து விட்டதா?



ஒருகணம் அப்படி எழுந்த உணர்வே அவளை அந்த நிமிட கவலைகள், துயரங்கள் எல்லாவற்றையும் தள்ளி உவகை கொள்ளச் செய்ய வைத்தது.

யார்.. என்ன சொன்னால் என்ன?

இருவருக்குள்ளும் அந்த ஒரே எண்ணம் அலைவரிசை வந்தாயிற்றே.. இனி யாரைப் பற்றி என்ன கவலை?

குபீரென மனதுள் கிளம்பிய சந்தோஷ ஊற்றில் அப்படியே நிமிர்ந்து அவன் கண்களைச் சந்தித்தாள்.

அவன் வசீகரப் புன்னகையை மறுபடியும் புரிந்தவாறு, என்ன.. என்பதை வாயால் கேளாமல் புருவம் உயர்த்தியே வினவினான்.

"ஒன்றுமில்லை.." என்றாள் அவசரமாக.

அவனிடம் தான் கேட்டதை அப்படியே சொல்லலாம் தான். அவனும் புரிந்து கொள்வான்தான் ஆனால்...

இந்த சந்தோஷ மனநிலை மாறிவிடுமே! அவன் அவர்கள் பேசியதற்காக வருத்தப்பட ஆரம்பித்து விடுவானே! இந்த மகிழ்ச்சியான நேரத்தில் அது எதற்கு? என நினைத்தாள்.

அதனாலே மீண்டும் அவன் முகத்தை நேருக்கு நேராய் பார்த்தவள்... "அதெல்லாம் ஒன்றுமில்லை. சும்மா கொஞ்சம் டயர்டா இருந்தது. அதான் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டேன்" என்றாள்.

அவன் ஒன்றும் பேசாது குனிந்து, அவள் நெற்றியில் மென்மையாக தனது உதடுகளை பதித்துவிட்டு, "ஏதோ

ஒரு விஷயம் உன்னைப் பாதித்திருக்கிறது என்பது புரிகிறது கண்மணி. ஆனால் அவசரமில்லை. உனக்கு எப்போது தோணுகிறதோ அப்போது என்னிடம் சொன்னால் போதும்..'' என்றான் கொண்டிருந்த புன்முறுவலை பெரிதாக்கியபடி.

அட... கண்டுபிடித்துவிட்டானே.. அதுவும் அவள் இஷ்டப்படும்போது மட்டும் சொன்னால் போதும் என்கிறானே.

அவள் மறுபடியும் உள்ளுக்குள் துள்ளினாள்.

அவன் சரியாகத்தான் நினைத்திருக்கிறாள். அந்த அன்பான கணவன் மனைவிக்குள் இருக்க வேண்டிய அந்த 'அண்டர்ஸ்டாண்டிங்' அவர்களுக்குள் மிகச் சரியாகவே வந்துவிட்டது. மேட் ஃபார் ஈச் அதர், பெஸ்ட் கப்பிள், கிஃப்டட் ஒன்ஸ்..., என என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாமே!

அவள் மறுபடியும் விழிகளை விரிந்தபடி சிந்தனைக்குச் சென்றுவிட கொஞ்ச விநாடியில் தன் உதடுகள் முழுக்க ஈரம் படர்வதை உணர்ந்துதான் உணர்வுக்கு வந்தாள்.

உதடுகளில் அழுந்த முத்தமிட்டுக் கொண்டிருந்தான் அவன்.

''ஐயோ! போதும்! கதவு வேறு திறந்து கிடக்கிறது. பட்டப் பகலில் இது என்ன கூத்து?''

அவள் பதறித்தான் விலகினாள்.



அவனும் அவளை சட்டென விடுவித்துக் குறும்புச் சிரிப்பு சிரித்தான்.

''பதட்டம் வேண்டாம் கண்மணி. நான் இப்படிச் செய்வதெல்லாம் காரணமாகத்தான்!'' என டயலாக் வேறு பேசினான்.

''காரணமா? அப்படி என்ன காரணம் ஸார் இதற்கு சொல்லப் போகிறீர்கள்?'' என்றாள் அவளும் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு.

அவன் குறும்பு முகத்தை சீரியசாய் மாற்றிக் கொண்டு சொன்னான், ''நீயே பார், நான் இந்த அறையுள் நுழையும் போது நீ எப்படி இருந்தாய்? ஏதோ ஒரு பிரச்சினையை மனதில் போட்டு குழப்பிக் கொண்டு மனம் முழுக்க கவலைகளோடு.. ஆனால் இப்போது பார்.. உன் மனநிலை எப்படி குதூகலமாய் சந்தோஷமாய், குறும்பு பொங்க மாறிவிட்டது... என்ன நான் சொல்வது உண்மைதானே?'' என அவன் கேட்டதும்,

அவள் நிஜமாக திகைக்கத்தான் செய்தாள். அவன் சொல்வது உண்மைதானே? அவனது அந்த ஐந்து நிமிட மன்மதக் குறும்பில் அவள் கவலைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டாள்தானே?

அவன் விடவில்லை.

''ம்ம்.. இப்போது புரிகிறதா? இனி இதுபோன்று கவலை, துயரம், தோன்றும் நேரங்களில் எல்லாம் நேரிடையாக ஐயாவிடம் ஓடி வந்து உதட்டில் தேவையான ஒன்றை

வாங்கிக் கொண்டு போய்விட வேண்டும்.. ம்ம். புரிகிறதா?''

வேண்டுமென்றே போலியாய் விரட்டும் தொனியில் கேட்டு அவன் கைகளை உயர்த்தி மிரட்ட அவள் பவ்யமாய் தலையாட்டினாள்.

''ஓகே பாஸ்!'' என்றாள் கைகளால் சலாம் செய்தபடி.



## 15

அன்னபூரணி, யாமினி, மல்லிகா என மூவரும் பேசிய விஷயங்களைக் கேட்ட நிர்மலா ரொம்பவும்தான் அதிர்ந்து போயிருந்தாள். அன்று இரவு முழுவதும் தூக்கமில்லாமல் ரொம்ப நேரம் தவித்தாள். விஷயத்தை கிருபாகரனிடம் சொல்லி விடலாமா... வேண்டாமா? என்று குழம்பிப் போய் அப்படியே தூங்கியும் போனாள்.

மறுநாள் எழுந்ததும், அவளையறியாமலே அவளுக்குள் ஒரு தெளிவு வந்துவிட்டது.

அவர்கள் அவளைப் பற்றி எப்படியும் நினைத்துப் போகட்டும். என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். ஆனால் அவள் மாறப் போவதில்லை. அப்படியேதான் இருக்கப் போகிறாள். அவர்கள் மீது பதிலுக்கு அன்பைத்தான் பொழியப் போகிறாள். ஏனெனில் அன்புதான் அவளது ஆயுதம்!



அதனாலே இவ்விஷயத்தைப் பெரித பண்ணி கிருபாகரனிடம் கொண்டு போய் விவகாரமாக்காமல் அப்படியே அமுக்கி விட்டாள்.

ஆனால் இரண்டு நாள் கழித்து கிருபாகரனுடன் அவன் வெளியே கிளம்பும் போது, ''நானும் வருகிறேன்'' என வேண்டுமென்றே தொற்றினாள் யாமினி.

'எல்லாம் பேசி வைத்த பிளானை நிறைவேற்ற போலும்..' என உள்ளுக்குள் நினைத்துக் கொண்டாலும் எதையும் வெளிக்காட்டாமலே நின்றிருந்தாள் நிர்மலா.

ஆனால் யாமினி கேட்டதும் கிருபாகரன் பதில் சொல்லாமல் திரும்பி நிர்மலா பக்கம்தான் பார்த்தான்.

அவன் தன் பக்கம் தன் நிலையை அறிய பார்க்கிறான் என்பதைப் புரிந்து கொண்டவள் ''தாராளமாக அவர்களும் வரட்டும். நமக்கும் நன்றாக இருக்கும்!'' என்றாள் உற்சாக குரலில்.

உடனே பைக்கை வைத்துவிட்டு ஆட்டோவை பிடித்தான் கிருபாகரன்.

மூவரும் ஏறிக் கொண்டார்கள்.

நிர்மலா கிருபாகரனின் பக்கத்தில்தான் உட்கார வேண்டும் என்றெல்லாம் பிளான் செய்யாமல் இயல்பாகவே நடந்து கொண்டாள். கிருபாகரனின் பக்கத்தில் யாமினி உட்கார அடுத்தாற்போல் அவள். இப்படித் தள்ளி உட்கார்ந்ததால் கிருபாகரன் அவள் கணவன் இல்லை

யென்று ஆகிவிடுமா? ஏதோ.. இதில் யாமினிக்கு ஒருவித திருப்தி கிடைத்தால் கிடைக்கட்டும்.

அன்று கிருபாகரன் சினிமா ஒன்றுக்குத்தான் நிர்மலாவை அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தான். அதனாலே தியேட்டருக்கே சென்றனர். அங்கு தியேட்டரில் டிக்கெட் எடுத்து உள்ளே நுழைந்து இருக்கையில் அமரும்போது யாமினி அதே கைங்கரியத்தைத்தான் பண்ணினாள்.

கிருபாகரன் உட்கார வேண்டுமென்றே லீட் பிடிப்பது போல் பக்கத்தில் போய் டபக்கென்று உட்கார்ந்து விட்டாள். நிர்மலா இது தெரிந்ததுதானே என சிரிப்புடன் அடுத்த இருக்கையில் அமர்ந்தாள்.

ஆனால் கிருபாகரன் விடுவதாயில்லை. அவனுக்கு நிர்மலா தன் பக்கம் உட்கார முடியாமல் போனதும் எரிச்சலாகி விட்டது. அதே எரிச்சலில் யாமினி பக்கம் திரும்பி ''அவளை இங்கு உட்காரச் சொல்..'' என்றதும் முகத்திலடித்தாற் போல் சொல்லிவிட்டான்.

கிருபாகரன் இப்படிச் சொன்னதும் யாமினியின் முகம் அப்படியே கறுத்து விட்டது. எள்ளும் கொள்ளும் வெடித்தவளாய் இருக்கையிலிருந்து எழப் போக அவனை அப்படியே இருக்கையில் அமர்த்தியபடி ''நீங்கள் இருங்கள். இந்த இடம் நன்றாகத்தான் இருக்கிறது'' என கிருபாகரனிடம் சொல்லியபடி அவனுக்கு மட்டும் தெரியும் வகையில் கண்களைச் சிமிட்டி ஜாடையும் செய்தாள்.



கிருபாகரன் அவள் ஜாடையில் ஏதோ காரணமிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டவன் சரிதான் என விட்டு விட்டான்.

நிர்மலாதான் யாமினி மனம் வாடி விடக் கூடாது என்பதற்காக வலிய வலிய பேச்சுக் கொடுத்தாள். நேரம் கிடைக்கும்போதெல்லாம் கலகலப்பாய் அவளுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

இடையில் இடைவேளையின் போது அவளிடம் பாப்கார்ன் வாங்கி கைகளில் திணித்த கிருபாகரன் திகசிசுப்பாய் ''என்ன விஷயம்?'' என்று கேட்டபோது ''பிறகு சொல்கிறேன்..'' என்றபடி மீண்டும் அந்த கண் சிமிட்டலை சிமிட்டிக் காட்டினாள்.

ஒருவாறு படம் முடிந்து மூவரும் வீட்டுக்குத் திரும்பினர். அன்றிரவு படுக்க வந்தவளின் இடையை வளைத்த கிருபாகரன், ''என்ன விஷயம்? தியேட்டரில் பெரிய சஸ்பென்ஸ்போல் விஷயத்தைச் சொல்லாமல் கண்களைச் சிமிட்டிக் கொண்டே இருந்தாயே?'' என்றான்.

''அது.. ஒன்றுமில்லை.. உங்கள் அக்கா யாமினி உங்கள் பக்கம் உட்கார விரும்பி இருக்கிறார்கள்... அவர்கள் மனம் நோகக் கூடாது என்றுதான்!''

''ஓஹோ.. அப்படியா..?'' என போலியாய் வியப்புக் காட்டியவன், ''ஆனால் நீ அப்படிச் செய்ததால் எந்தன் அன்பு மனம் நொந்து விட்டதே!'' என்றான்.

''நொந்த மனதுக்கு தக்க மருந்து தரப்படும்..'' என்றபடி அவள் மீண்டும் கண்களைச் சிமிட்டிக் காட்டினாள்.

அவளும் விடவில்லை.

''ம்ம்... சீக்கிரமாக மருந்தைக் கொடு. நொந்த மனது ரொம்பவும் வலிக்கிறது..'' என்றான்.

அவள் அவன் பக்கத்தில் வந்து கைகளை மாலையாய் அவன் கழுத்தில் கோர்த்து மென்மையாய் அவன் நெற்றியில் தன் இதழ்களைப் பதித்தாள்.

பின் அவனை நோக்கி குனிந்து அதே கள் சிமிட்டலுடன், ''மருந்து வேலை செய்ய ஆரம்பித்து விட்டதா? காயம் ஆறிவிட்டதா? என ஆரம்பித்தவள், சட்டென குரலை அவனைப் போலவே மிரட்டும் தொனியில் மாற்றி, ''இனி மனதில் எப்போதெல்லாம் காயம் படுகிறதோ அப்போதெல்லாம் உடனே ஓடி வந்து வெட்கப்படாமல் என்னிடம் இந்த மருந்தை கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும். என்ன புரிகிறதா?'' என அதேபோல் அவனைப் போலவே பேசி காட்டவும் அடக்க முடியாமல் சிரித்தான் அவன்.

அந்தச் சிரிப்பில் அவளும் கலந்து கொண்டாள்.

அவள் பேச்சை மாற்றும் விதமாகவே அடுத்த விஷயம் ஒன்றையும் ஆரம்பித்தாள்.

''நாம்.. குடும்ப வாழ்க்கையை மேலும் சுவாரஸ்யமாக்க எனக்கு ஒரு வழி தோன்றுகிறது'' என்றாள்.

''என்ன வழி'' என்றான் கிருபாகரன்.

தனது செவ்விதழ்கள் இரண்டையும் அழுத்தமாய் மூடிக் காட்டினாள்.



அவன் புரியாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

''புரியவில்லை..? மௌனம் மௌன விரதம்!'' என்றாள்.

''மௌன விரதமா?''

''ம்ம்.. வாரத்திற்கு ஒரு முறை நாம் இருவரும் மௌன விரதம் இருப்போமா? அதாவது வாயால் பேசாமல் கையால் ஜாடைகளால் பேசியபடி..'' அவள் சொல்ல அவன் முகமும் சுவாரஸ்யத்திற்குப் போனது. ''நானும் இதுபற்றி நிறைய புத்தகங்களில் யோகா வகுப்புகளில் கேள்விப்பட்டிருக்கிறேன். மௌனம் மிகச் சிறந்த ஒரு விஷயம். மனதை அழகாய் தூய்மைப்படுத்தும் சிந்திக்க வைக்கும் என்று..''

''அப்படியானால் நாம் இந்த வாரம் முதல் மௌன விரதத்தைத் தொடங்கி இருப்போமா?'' என்றாள் அவள் ஆவலாய்.

''ம்ம்.. தாராளமாய்...! ஆனால் பார்.. நாம் மௌன விரதம் இருப்பது ஓகே.. மற்றவர்களிடம் வீட்டில் அலுவலகத்தில் பேசாமல் இருக்க வாய்ப்பில்லையே..''

அவன் திகைக்க அதற்கும் அவள் வழி சொன்னாள்.

''மௌன விரதம் நம் இருவருக்கும் மட்டும்தான். மற்றவர்களிடம் வேறு வழியில்லை,, பேசித்தான் ஆக வேண்டும்.,,''

அவள் சொல்ல அவன் சம்மதமாய் தலையசைத்தான்.

இருவரும் சேர்ந்து ஒரு நாளையும் தேர்ந்தெடுத்தார்கள்.

வியாழக்கிழமை!

அன்று முழுவதும் காலை முதல் மறுநாள் விடியும் வரை பேசிக் கொள்ளக் கூடாது. வெறும் கை அசைப்புதான்! ஜாடைகள்தான்!

இருவரும் சுவாரஸ்யத்தோடு அந்த வார வியாழக் கிழமையை எதிர்பார்த்தார்கள். வியாழக்கிழமை வந்ததும் காலை முதலே தங்களது மௌன விரதத்தையும் தொடங்கினர்.

முதலில் இருவருக்கும் பேசாமல் அப்படி சைகை செய்வது பெரும் விளையாட்டாய் சிறுபிள்ளைத்தனமாயும் தோன்றியது.

அவன் கைகளாலே விளக்கி அசைத்து ஒவ்வொன்றையும் கேட்க புரிந்து கொண்டு பதில் சொன்னாள் நிர்மலா.

அவளும் மைவிழிக் கண்களை விரித்து உருட்டி அழகாக பதிலுக்கு ஜாடை காட்டத்தான் செய்தாள்.

கிருபாகரன் இடையிடையே குறும்புத்தனமாய் கைகளை கோர்த்து, உதடுகளைக் காட்ட அணைக்கும்படியும் முத்தமிடும்படியும் ஜாடை செய்ய அவன் காதைப் பிடித்து இறுக கிள்ளத்தான் செய்தாள் அவள்.

பேசக் கூடாதே தவிர இருவரும் சிரிக்கலாம் அல்லவா?

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை ஜாடை சொல்லி உணர்த்த முயன்று முடியாமல் பெரிதாய் விழுந்து விழுந்து சிரிக்க...

அன்றைய பொழுது முழுவதும் அப்படிக் கேலிச் சைகையிலும் பொங்கும் சிரிப்புமாகவே அவர்களுக்கு



கழிந்தது. விரைவிலேயே அவர்கள் இருவரும் பிரியப் போவதை எண்ணிய கொடிய விதியும் அவர்களுடன் சிரிப்பலையில் சேர்ந்து கொண்டது!

## 16

கிருபாகரன் அன்று அலுவலகம் முடிந்து திரும்பி வந்ததும் வராததுமாக அவளை தனியே இழுத்துக் கொண்டு சென்று வெடிக்கத்தான் செய்தான்.

நிர்மலாவுக்கு என்ன பதில் சொல்வதென்றுதான் தெரியவில்லை. ஒருகணம் திகைத்துப் போய்த்தான் நின்று விட்டாள்.

கிருபாகரனிடம் இருந்து அப்படி ஒரு வார்த்தைகள் வரும் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை.

"உன்மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன். எல்லாவற்றையும் பாழ்படுத்தி விட்டாயே. அப்படியானால் நீ இவ்வளவு நாள் இங்கு காட்டியது எல்லாம் வேஷம் தானா?"

சொல்லியபடி அவள் அவன் தோளில் வைத்திருந்த கையை வெறுப்பாய் தட்டிவிட அப்போதுதான் விபரீதமாய் எதையோ உணர்ந்தாள்.

"என்னாயிற்று உங்களுக்கு? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?"

அவள் கேட்க கைகளை உயர்த்தி பேச்சை நிறுத்தும்படி சைகை காட்டியவன், "கேள்வி கேட்க வேண்டியவன் நான்.

நான்தான்.. என் கேள்விகளுக்கெல்லாம் முதலில் பதில் சொல்..'' என்றான் கோபமாய்.

''கேளுங்கள்..'' என்றாள் அவள் ஒருவித பயக்குரலில்.

''சேகரைத் தெரியுமா?'' என்றான் கிருபாகரன்.

''சேகரா.. யாரது?'' என்றாள் புரியாதவளாய்.

''உன் கல்லூரி நாட்களில் உன்னுடன் படித்தவன்..''

அவள் மென்று விழுங்கினாள்.

''ம்ம்.. ஞாபகமிருக்கிறது..''

''அவனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு?''

''தொடர்பா..? என்ன சொல்கிறீர்கள்?''

அவள் குரலை உயர்த்த அவனும் பதிலுக்குக் கத்தினான்.

''சும்மாவாக நடிக்காதே.. எல்லாம் எனக்குத் தெரியும்! கேட்பதற்கு மட்டும் பதில் சொல்..'' என்றான் அதிகாரமாய்.

''என்ன தெரியும் உங்களுக்கு?''

''சேகர் உன்னுடைய காதலன். நீ அவனை காதலித்திருக்கிறாய். இந்த விஷயத்தை என்னிடம் சொல்லாமல் மறைத்திருக்கிறாய்.''

அவள் திகைப்பில் வாய் பொத்தினாள்.

''அபாண்டம் இது!''

''நீ இவ்வளவு நாள் சொல்லாதது.. என்னிடம் மறைத்தது.. அதான் அபாண்டம்!''



''நான் சொல்வது உண்மை... சத்தியமான உண்மை!''

''அப்படியானால்.. என்ன இது?'' என்றபடி கிருபாகரன் கையிலிருந்த அதை உயர்த்திப் பிடித்தான். அது ஒரு கடிதம்!

அவள் பக்கம் நீட்டினான்.

''படித்துப் பார்! புரியும்..''

நடுங்கும் விரல்களோடு அதை வாங்கிப் பிரித்தாள். என்ன இது?

அவன் சொன்னது சரிதான்..

அது சேகர் அவளுக்கு எழுதிய கடிதம்தான். அதுவும் அவளைக் காதலி போல ரசனையாக பாவித்து...

அவள் திகைக்க, ''லெட்டரை சத்தமாகப் படி..'' என்றான்.

அவள் தயங்கினாள்.

''ம்ம்.. படி..''

அவன் விரட்டலுக்குப் பயந்தவள் கடகடவென அதை வாசித்தாள்.

''அன்பே நிர்மலா, எப்படி இருக்கிறாய்? நாம் பிரிந்து பல வருடங்களாகி விட்டாலும் எல்லாமே நேற்று நடந்தது போல்தான் இருக்கிறது. கல்லூரி நாட்களில் நாம் காதலித்தது, கல்லூரி முழுக்க நம்மை சிறந்த காதல் பறவைகள் என கிண்டல் செய்து கொண்டாடியது நாமும் இனிய காதலர்களாய் பார்க், பீச், சினிமா எனச்

சுற்றியது.. எல்லாமே இனிமையாய் இன்னும் என் மனதில் இருக்கிறது. அவையெல்லாம் மறக்கக் கூடிய.. விஷயங்களா? சூழ்நிலை காரணமாக நான் என் பூர்வீகத் தொழிலை கவனிக்க வெளிநாடு செல்ல வேண்டியிருந்ததும் அதனாலே நம்முடைய காதல் தோல்வியுற்று நிறைவேறாமல் போனதும் உனக்குத் தெரியும்.

மேலும், இப்போது நீ கண்டிப்பாய் வேறு யாரையாவது மணந்து கொண்டு சந்தோஷமாய் இருப்பாய் என எனக்குத் தெரியும். ஆனால் உனக்குத் தெரியுமா? நான் இன்னும் பிரம்மச்சாரியாகவே உன் நினைவோடு வாழப் போகிறேன். நான் தற்போது இருப்பதும் இனி இருக்கப் போவதும் வெளிநாட்டில்தான். தற்செயலாய் சென்னைக்கு இரண்டு நாள் பயணமாய் வந்தேன். உன்னை நேரில் வந்து சந்திக்க ஆசைதான். ஆனால் தொழில் அவசரத்தில் நேரமின்மையால் சந்திக்காமலே திரும்பிச் செல்கிறேன். இருந்தாலும் என் எண்ணத்தை எல்லாம் நீ புரிந்து கொள்ள வேண்டும் என்றே ஒரு லெட்டரில் இப்படி எழுதி உன் முகவரிக்கு அனுப்பியிருக்கிறேன். நீ உன் கணவரோடு சந்தோஷமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே என் ஆசை. எனக்கு உனது நினைவுகள் மட்டும் போதும். நீ ஆசையாய் என்னை பலமுறை அணைத்ததும்



நீ அன்பாய் பலமுறை எனக்குக் கொடுத்த முத்தங்களும் என்றும் என் நினைவில் இருக்கும். அந்த நினைப்பிலேயே நான் என் வாழ்நாளை ஓட்டி விடுவேன். அதனால் எனக்காக நீ கவலைப்படக் கூடாது. உன் வாழ்க்கையை சந்தோஷமாக வைத்துக் கொள். அதுதான் எனக்கு வேண்டும். எனது ஆசையும் கூட! பை!

இப்படிக்கு உனது

அன்பிற்குரிய

**சேகர்**

- என எழுதப்பட்டிருக்க.. முழுவதையும் வாசித்து முடித்தாள் நிர்மலா.

அவளுக்கு அதிர்ச்சியில் ஒருகணம் வார்த்தைகளே வரவில்லை.

அப்படியே நா உலர்ந்து உதடுகள் ஒட்டிக் கொண்டது

பாவி! என்னவெல்லாம் எழுதி இருக்கிறான்! ஏதோ.. அவனைக் காதலித்தது போல் கல்லூரி முழுக்க ஜோடியாய் சுற்றியதுபோல், அவனுக்காக அவள் ஏங்கியதுபோல், என்னவெல்லாம் கதைவிட்டு எழுதி இருக்கிறான்!

இந்தக் கண்றாவியில் அவள் அவனை ஆசையாய் அணைத்தாளாம்! முத்தமிட்டாளாம். அதுவும் பலமுறையாம்! அந்த நினைப்பிலேயே அவனும் வாழ்ந்து விடுவானாம்!

• சண்டாளன்! நடந்தது எல்லாவற்றையும் மறைத்து விட்டானே!

கல்லூரியில் அவள் பின்னால் வந்து ரோமியோத் தொல்லை கொடுத்ததிற்காக அவளிடம் செருப்படிகள் வாங்கிக் கட்டிக் கொண்டான் அல்லவா இந்த சேகர்?

பின் காதல் கடிதத்தை ஒரு நாள் நீட்டி எல்லோர் முன்னிலையிலும் பளாரை செவிட்டில் வாங்கிக் கட்டிக் கொண்டான்.

அப்படியும் திருந்தாமல் அவள் ரோமியோ போல் தினமும் தொல்லை கொடுக்க பொறுக்க முடியாமல் கல்லூரி பிரின்ஸிபாலிடமே சென்று அவனைப் பற்றி புகார் செய்துவிட்டாள் நிர்மலா.

கண்டிப்புக்குப் பெயர் போன அந்தக் கல்லூரி முதல்வர் உடனே.. அந்த சேகரை டிஸ்மிஸ் செய்து கல்லூரியை விட்டே வெளியே அனுப்பி விட்டாரே!

சேகரும் அந்த அவமானம் தாங்காமல் கல்லூரியை விட்டு அகன்றவன் அதற்குப் பின் அவள் பக்கமோ கல்லூரிப் பக்கமோ தலை வைத்து படுக்கவில்லையே!

அப்படிப்பட்ட பொறுக்கியை, காதல் பித்துப் பிடித்து அலைந்த தறுதலையை பேயா அவள் காதலிப்பாள்?

அவனை அடித்து கல்லூரியை விட்டே விரட்டி மற்ற மாணவிகளிடையே சரியான புதுமைப் பெண் என்ற பட்டமும் வாங்கியவளாச்சே.. அவளாவது.. அந்த சேகரை காதலித்ததாவது? யாரோ.. வேண்டுமென்றே கயிறு திரித்து விட்டிருக்கிறார்கள்.



யாராக இருக்கும்?

சரி.. அது யாராக வேண்டுமென்றாலும் இருந்து விட்டுப் போகட்டும்.

ஆனால்.. ஆனால்.. அதற்காக கிருபாகரன் லெட்டரைப் பார்த்ததும் நம்பி விடுவானா?

அதில் உள்ளதெல்லாம் உண்மை என நினைத்து அவள் மீது சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டானா?

என்ன அநியாயம் இது?

அவள் பயந்ததைப் போல்தான் நடந்து கொண்டிருந்தது.

நிமிர்ந்து பார்த்தவள் திடுக்கிட்டாள்.

அவன் குனிந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன.. அடுத்து என்ன பொய் சொல்லலாம்? எப்படித் தப்பிக்கலாம் என்று பார்க்கிறாயா?"

"இல்லை.."

"பின் வேறு என்னவாம்?"

"இதை நீங்கள் நம்புகிறீர்களா?" அவள் லெட்டரை யத்திக் காட்டினாள்.

"ம்ம்.. நம்புவதற்கு இதுமட்டுமல்ல, இன்னொரு சாட்சியும் இருக்கிறது.."

"இன்னொன்று..? சாட்சியா?"

அவள் திடுக்கிட்டு கேட்க, அவன் அமைதியாக அவனது மற்றொரு கையின் மறைவிலிருந்து அதை வெளிப்படுத்தினான்.

அது.. டயரி! அவளது டயரி!

இது எப்படி இவன் கையில்? வீட்டு புத்தக ஷெல்ஃப்பில் தானே இருந்தது வீட்டில் இருந்து கொண்டு வந்த பையில் அனைத்தையும் திணித்து வைத்திருந்தாள். அதை எடுத்து படித்திருக்கிறானா?

சரி.. அவள் அதில் முன்பு கல்லூரியில் நடந்த அத்தனை விஷயங்களையும் ஒன்று விடாமல் எழுதியிருக்கிறாளே..? இந்தத் தறுதலை சேகரைப் பற்றியும் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறாளே?

அதையெல்லாம் படித்துப் பார்த்திருப்பானே? படித்தும் தெளியவில்லை?

''என்ன விழிக்கிறாய்? உன் டயரியைக் குடைந்து உன் கல்லூரி நாட்களில் நீ எழுதிய டயரிக் குறிப்புகள் அத்தனையும் படித்து விட்டேன். உன் வண்டவாளம் முழுவதும் ஒரே நாளில் தெரிந்து விட்டது..''

'என்ன சொல்கிறான்? டயரியை படித்து விட்டேன் என்கிறான்.. வண்டவாளம் என்கிறான்..?'

அவள் புரியாமல் மறுபடியும் விழிக்கத்தான் செய்தாள்.

''என்ன விழிக்கிறாய்..? உன் லட்சணத்தை நீயே பார்!''



டயரியை படக்கென விரித்து அந்தப் பக்கங்களை எடுத்தான். அவள் முகத்தில் கண்களில் அறைவது போல் பக்கத்தில் வந்து அதை உயர்த்திக் காட்டினான்.

''நீதானே எழுதி இருக்கிறாய்? நீயே படி..!'' மறுபடியும் அவள் உடல் பயத்தில் நடுங்கியது. மெல்ல டயரியின் பக்கங்களில் கண்களை ஓட்டியவள் அதிர்ந்தாள்!

என்ன இது அநியாயம்!

அவள் டயரியில் நாலைந்து வரிகளே எழுதுவது வழக்கம். அப்படி எழுதி விட்டு மற்றவைகளை வெற்றிடமாய் விட்டு விடுவாள்.

அதுபோல் சேகர் பற்றிய விஷயங்களை நாலு வரியில் எழுதிவிட்டு மீதிப் பக்கத்தை வெற்றிடமாக விட்டிருக்க.. இப்போது அதிலும் எழுத்துக்கள்!

அவள் எழுதியது போலவே அசப்பில் அவளது கையெழுத்துச் சாயலிலே எழுத்துக்கள்!

என்ன இது அநியாயம்? அவள் எழுதியதுபோலவே எழுதியிருக்கிறார்களே..? யார் எழுதியது இது? என திடுக்கிடலோடு அதைப் படித்துப் பார்த்தவள், சுத்தமாய் அதிர்ந்தும் போனாள்.

அதில், ''சேகர் உன்னை நான் உளமாற காதலிக்கிறேன். நீ இல்லாத வாழ்க்கை ஒன்றை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. மற்ற யாருக்கும் நம் காதல் விஷயம் தெரியக் கூடாது என்பதால்... அவர்கள் முன் உன்னை காதலிக்காதது போல் நடிக்கத்தான் செய்கிறேன். ஆனால் நீ நம்பு, என்

இதயத்தில் இன்று மட்டுமல்ல, என்றும் நீ.. நீ மட்டும்தான் இருப்பாய்!'' என காதல் வசனத்தில் உருக உருக எழுதப்பட்டிருந்தது.

படித்த நிர்மலா சப்த நாடி ஒடுங்க அதிர்ந்துதான் போய்விட்டாள்.



## 17

எல்லாம் முடிந்து விட்டது.

கிருபாகரன் எல்லாவற்றையும் பேசி முடித்து விட்டான்.

தன் கைகளை மீறி எல்லா விஷயங்களும் நடப்பதை நிர்மலாவால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

பேசுவது கிருபாகரன்தானா.. அல்லது அவள் காதுகள் தான் பொய்த்துப் போய்விட்டதா?

அவள் அப்படி சந்தேகம் கொள்வாள் என்று நினைத்தானோ என்னவோ திரும்பவும் அழுத்தந் திருத்தமாக உச்சரித்துக் காட்டினான்.

''சொல்லக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் உண்மை அதுதான். நாம் இருவரும் கொஞ்ச நாட்கள் பிரிந்திருப்பதுதான் நல்லது.''

என்ன ஒரு வார்த்தை.. என்ன ஒரு பேச்சு.. அவன் வாயில் இருந்து வந்து விட்டது...

பிரிந்திருக்க வேண்டுமாமே?



எவ்வளவு எளிதாய் அந்த வார்த்தையை உச்சரித்து விட்டான். இப்படி தைரியமாக உச்சரிக்க அவனுக்கு எப்படி மனம் வந்தது?

அந்த வார்த்தையின் வீச்சிலே நிர்மலாவின் கண்கள் முழுவதும் குளமாகி விட்டன.

நிமிர்ந்து பார்க்கத் திராணியின்றி குனிந்தே தலையை வைத்திருந்தாள்.

எந்த முகம் அவளிடம் ஆசையாய் கொஞ்சக் கொஞ்ச பேசியதோ.. அந்த முகம் அதே முகம் அவளிடம் கடுமையாய் இறுக்கத்துடன் பேசினால் அவளால் எப்படி நிமிர்ந்து பார்க்க முடியும்?

ஆயினும் அவளுள் அந்தக் கேள்விதான் உறுத்தியபடி கிளம்பியது. மனம் விட்டு ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளும் அளவுக்குப் பழகியிருக்கிறோம். சந்தோஷமும் இனிமையுமாய் குடும்பம் நடத்தியிருக்கிறோம். அப்படியும் அவனுக்கு அவள் மீது நம்பிக்கை வரவில்லை?''

"நீங்கள் என்னை நம்பவில்லையா?" நடுங்கும் குரலில் அதையே கேட்டாள்.

அவன் அவளை அவள் சொல்வதை இந்த அளவு கூட நம்பாவிட்டால்.. இவ்வளவு நாட்கள் அவனும் குடும்பம் என்ற ஒன்றை நடத்தியதற்கு கூட எவ்வித அர்த்தமும் இல்லாமல் போய்விடுமே!

ஆனால் அவனது பதில் வித்தியாசமாக இருந்தது.

''நம்புவது.. நம்பாதது... எல்லாவற்றையும் விட்டுவிடு. ராமாயண காலத்தில் இருந்தே இந்தச் சோதனை நடக்கத்தானே செய்கிறது?''

அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவள் சீதையோ.. இல்லையோ..? ஆனால் அவளை சந்தேகப்பட அவன் ஒன்றும் ராமச்சந்திர மூர்த்தி அல்லவே? சராசரி மனுஷன்தானே! ஒரு லெட்டர் வந்ததும் இவ்வளவு நாள் நம் மீது பாசத்தைப் பொழிந்திருக்கிறாள் என்று கூட நினைக்காமல் சந்தேகப்பட்டு விட்டானே!

அவள் பொங்கும் ஆற்றாமையுடன் எரிச்சலும் கோபமும் தாக்க கொஞ்ச நேரம் என்ன செய்வது? எப்படி நடந்து கொள்வது என தெரியாமலே விழித்தாள்.

அவன் இப்போது பக்கத்தில் வந்து கூர்மையாக அவளைப் பார்த்தான்.

''இதோ பார் நிர்மலா, நாம் இருவரும் இந்த வீட்டில் இதே ரூமில் மிக அந்நியோன்யமாக பொறாமை கொள்ளும் நெருக்கத்துடன் குடும்பம் நடத்தியிருக்கிறோம். வாழ்க்கையை மகிழ்ச்சியாய் கழித்திருக்கிறோம். ஆனால் இப்போது..'' என பேசியவன் ஒரு கணம் அப்படியே நிறுத்தி விட்டு ''இப்போது பிரச்சினை என்னவென்று தெரியுமா?'' என்று கேட்டான்.

அவள் புரியாதவளாய் கேட்டாள்.

''என்ன?''



''நீ உன் கல்லூரி நாட்களில் அந்த சேகரை காதலித்தது ஒரு பிரச்சினை. அதைச் சொல்லாமல் என்னிடம் மறைத்தது இன்னொரு பிரச்சினை. எல்லாவற்றுக்கும் மேலாக நான் உன் மீது வைத்திருந்த நம்பிக்கை போயிற்று..''

''நம்பிக்கை போயிற்றா?''

''ம்ம்.. நம் கல்யாண நாட்களில்.. நம் முதலிரவு போன்ற சமயங்களில் நடந்ததை எல்லாம் கொஞ்சம் யோசித்துப் பார்! உன்னிடம் எவ்வளவு தெளிவாக சொல்லியிருந்தேன். எனக்கு எந்த விஷயத்தை மறைப்பதோ, எந்த விஷயத் திற்காகவும் பொய் சொல்லுவதோ சுத்தமாய்ப் பிடிக்காது என்று! சிறு வயதில் இருந்து உண்மை விளம்பி போல இருந்து விட்டதால் அப்படி ஒரு எண்ணம் தீவிரமாக என் மனதில் பதிந்து விட்டது. அதனாலே யார் பொய் சொன்னாலும் பிடிக்காது. அதிலும் கட்டிய மனைவியான நீ பொய் சொல்வது... என்னால் தாங்க முடியாத மன்னிக்க முடியாத குற்றம். நீ மறைத்து பொய் சொன்னது உன்மேல் எனக்கு பல சந்தேகங்களை வரவழைக்கிறது. அதனால் நாம் இனியும் கூடி வாழ்வது இயலாத காரியமும் கூட... மேலும் இனிமையாய் வாழ்க்கை நடத்திய இந்த இடத்தில் உன்னை எதிரி போல நினைத்து இனி வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் அது மிகவும் கொடுமையாக இருக்கும். ஏனெனில் நீ விஷயத்தை மறைத்தது உன் நம்பகத் தன்மையை அழித்து விட்டது. நீ என்.. மேல் காட்டிய அன்பு, பாசம் எல்லாமே நடிப்புதானோ எனவும் நினைக்க வைத்து விட்டது. அதனால் வேறு வழியில்லை.. கொஞ்ச

நாட்களும் நாம் இருவரும் பிரிந்திருப்பது தான் இருவருக்கும் நல்லது..''

''கொஞ்ச நாட்களா?'' என்றாள் அவள் திடுக்கிட்டு.

''ம்ம்.. நாட்கள் என்றால்.. சில மாதங்களாக இருக்கலாம்.. அப்படிப் பிரிந்திருப்பது தவறு நடந்ததற்காக நான் கொடுக்கப் போகும் தண்டனை என்று கூட வைத்துக் கொள்ளலாம்... அல்லவா?'' படபடவெனச் சொல்லியவன் அதே வேகத்தில் ''நாளையே நீ உன் பிறந்தகத்திற்கு தந்தை வீட்டிற்கு கிளம்பலாம்..'' என்றான் அமைதியாக.

அவள் ஒரேடியாய் திடுக்கிட்டுத்தான் போனாள்.

கடைசியில் அவன் வாயில் இருந்தே அதை தெளிவாய் தீர்க்கமாய் சொல்லி விட்டான்.

இனி உனக்கு இங்கு இடமில்லை. பெட்டியைத் தூக்கிக் கொண்டு போ என்று.

கேட்டால் பிரிந்திருக்க வேண்டுமாம்.

அது.. அவன் கொடுக்கும் தண்டனையாம்!

அப்படி பிரிந்திருப்பதுதான் அவன் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தை காயமான சூழ்நிலையை மாற்றுமாம்.

என்னென்னவோ காரணங்களைச் சொல்கிறான்.

முக்கியமாய் அவள் தன் கல்லூரி நாட்களில் நடந்த காதல் விஷயத்தைச் சொல்லாததால் அவள் மீது கொண்டிருந்த நம்பகத் தன்மையை இழந்து அவள் காட்டும் அன்பு கூட வேஷம், நடிப்பு என்ற முடிவிற்கு வந்து விட்டானாம்!



அவன் சொல்வது எல்லாம் சரி! ஆனால் அவள்..?

அவள்தான் எவ்வித தவறும் செய்யவில்லையே!

அதை அவன் நினைத்தும் பார்க்க வில்லையே!

18



மறுநாள் நிர்மலாவுக்கு பயங்கரமாய் விடிந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

கிருபாகரன் அதிகாலையிலேயே இறுகிய முகத்துடன் ''இன்று உன் உடைமைகள் எல்லாவற்றையும் பாக் செய்து வை. நீ கிளம்ப வேண்டும் அல்லவா?''

அவள் திடுக்கிடத்தான் செய்தாள்.

அவன் எதையும் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. நிஜமாகத்தான் சொல்லியிருக்கிறான்!

கல்யாணத்திற்கு முன் வேறு ஒருவனுடன் காதல் வைத்திருந்த குற்றத்திற்காக அவளை தண்டிக்கிறானாம். உண்மையில் அவள் நல்லவள், உத்தமி என்றால் அந்தக் காதல் விஷயத்தை அவனைக் கல்யாணம் செய்யும்போது வெளிப்படையாக சொல்லியிருக்க வேண்டுமாம்.

அப்படிச் சொல்லியிருந்தால் கூட 'சரி பழைய விஷயங்களை விடு என மன்னித்திருப்பானாம்..'

ஆனால் இப்போது கல்லுளி மங்குனி போல் அவள் இருந்திருக்கிறாள்.

முன்னாள் காதலன் போட்ட கடிதம் தான் அவளை காட்டிக் கொடுத்திருக்கிறது.

இல்லாவிட்டால் சோற்றில் பூசணிக்காயை மறைத்த கதையாய் அவள் எல்லாவற்றையும் அவனிடமிருந்து மறைத்திருப்பாள்.

என்று கணவனிடமிருந்து விஷயத்தை மறைக்க வேண்டும் என்று நினைக்கிறாளோ அப்போதே அவள் மனதில் கள்ளத்தனம் வந்து விடுகிறதாம்.

கள்ளத்தனம் அப்படி வந்து விட்டால் பின் அவளது செய்கையும் மாறி விடுமாம். தன்னை உத்தமியாய் காட்ட கணவனின் அன்பைப் பெற அவள் என்ன வேண்டுமானாலும் செய்வாளாம். என்ன நடிப்பு வேண்டுமானாலும் நடிப்பாளாம். அவளை நம்ப முடியாதாம்!

அவனுக்கு எதுவெல்லாம் நியாயமாய்த் தோன்றியதோ, அவன் செய்கையை நியாயப்படுத்த எதையெல்லாம் சொல்லவேண்டுமோ அவை எல்லாவற்றையும் விளக்கமாய் விரிவாய் திரும்பத் திரும்ப சொன்னான்.

ஆனால் ஒருமுறையாவது அவள் பக்கம் அவளது நியாயத்தை கேட்டானா?

இல்லை! அவள் கேட்கத் தயாராகவே இல்லை!

அவனைப் பொறுத்தவரைக்கும் அவள் குற்றவாளி என்றே முடிவு பண்ணி விட்டான்.

அதற்குப் பிரிவு என்கிற தண்டனையும் கொடுத்து செயல்படுத்தவும் ஆரம்பித்து விட்டான்.



குட்கேஸுடன் அவள் கனத்த மனதுடன் கிளம்பும்போது அவன் அதைச் சொன்னான்: 'இப்படி அவள் தண்டனை போல் பிரிவு ஏற்படுத்தி அவள் வீட்டிற்கு கொண்டு போய் விடுவது யாருக்கும் தெரிய வேண்டாமாம். அவர்கள் இருவருக்கும் மட்டும் தெரிந்தால் போதுமாம். யாரும் கேட்டால்.. தந்தைக்கு உடல்நலமில்லை அவள் கவனிக்கப் போய் இருக்கிறாள்.. என அவன் சொல்லி விடுவானாம். அதேபோல் அவளும் தன் பங்கிற்கு கேட்பவரிடம் ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டுமாம்..

அவன் சொல்லி முடிக்க 'இதையெல்லாம் தெளிவாக யோசிக்கத் தெரிந்தவனுக்கு அவள் அப்படிப்பட்டவளா?' என்கிற உண்மை உரைக்கவே இல்லையே!

மேலும் அவள் பக்கம் உள்ள வாதங்களையோ நியாயங்களையோ கூட கேட்கத் தயார் இல்லையே?

வெறுமை அடைந்தவளாய்த்தான் விறுவிறுவென கிளம்பினாள்.

மாமியார் அன்னபூரணி, யாமினி, மல்லிகா என எல்லோரிடமும் அவன் சொல்லிக் கொடுத்ததைப் போலவே சொன்னாள். தந்தைக்கு திடீரென உடல் நலமில்லாததால் தான் பிறந்த வீட்டிற்குச் செல்வதாய் கூறினாள்.

அவர்களும் எவ்வித சலனமுமில்லாமல் ஒருவரை யொருவர் விசித்திரமாய் பார்த்தபடி தலையாட்டினர்.

ஒருவேளை அவர்களுக்கு விஷயம் தெரிந்திருக்கக் கூடுமோ?

கிருபாகரன் தண்டனைக்காகத்தான் அவளை பிறந்த வீட்டிற்கு அனுப்புகிறான் என்ற உண்மையை அவர்கள் அறிந்திருப்பார்களோ?

ஒன்றும் புரியாதவளாய்த்தான் இயந்திரம் போல் நடந்தாள்.

அவனுடன் ஆட்டோவில் கிளம்பி வீடும் வந்து சேர்ந்தாள்.

தந்தை குருநாதர் திடீரென பெட்டியுடன் வந்து நிற்கும் மகளைப் பார்த்து திகைக்கத்தான் செய்தார். கூட கிருபாகரனும் வந்திருந்தது அவருக்கு ஓரளவு நிம்மதியையே தந்தது. நிர்மலாதான் ரொம்பவும் கஷ்டப்பட்டு தனது வாடிய முகத்தை தந்தை கவனித்து விடாத வண்ணம் வலுக்கட்டாயமாக சிரிப்பு ஒன்றை ஓட விட்டு சமாளித்துக் கொண்டிருந்தாள்.

கிருபாகரனும் தன் பங்கிற்கு அவரிடமும் கூற தயாராய் ஒரு பொய் வைத்திருந்தான். அதாவது 'அலுவலக நிமித்தமாக அவன் ஒரு மாத டூர் செல்வதாகவும் அதுவரை நிர்மலா இங்கு இருக்கட்டும்..' எனவும் அவர் நம்பும்படி சொல்லி முடித்தான்.

நிர்மலாதான் அவன் விட்டு விட்டு கிளம்புகையில், "ஒரு நிமிடம்..?" என தனியே அழைத்தாள்.

"திரும்ப அழைக்க வருவதாக எண்ணம் இருக்கிறதா இல்லையா?" என்றாள் சலனமற்ற குரலில்.

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஓரிரு நிமிடங்கள் அமைதி காத்தவன் திரும்பி, "யோசித்துச்



சொல்கிறேன்.." என விட்டேற்றியாய் ஒரு பதிலைச் [illegible].

திரும்பிப் பாராமல் விறுவிறுவென நடந்தான் அவன்!



19

கிருபாகரன் அவளை விட்டுச் சென்று ஒரு வாரம் ஆகிவிட்டது.

அவனிடமிருந்து எந்தவித தகவலும் இல்லை. எந்த பதிலும் இல்லை.

ஒரேயடியாய் தன்னை மறந்து விட்டானா? இல்லை இவளுடன் வாழ்ந்தது போதும் என தலைமுழ்கி விட்டானா?

அப்படியானால் அவனுடன் வாழ்ந்த வாழ்க்கை அந்த இனிமையான நாட்கள் எல்லாம் அவ்வளவுதானா?

நினைத்துப் பார்க்கவே அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

கிருபாகரன் அப்படி நடந்து கொண்டதில் நியாயமே இல்லை.

எவ்வித தவறும் செய்யாமல் அவள் தண்டிக்கப்பட்டிருக்கிறாள்.

அப்படியானால் தவறு செய்தது யார்?

யாரால்.. அவள் பெரிய குற்றவாளி போல் ஆக்கப்பட்டு தண்டனையும் பெற்றிருக்கிறாள்?

திடும்மென அந்தக் கேள்வி எழுந்து அவளைக் குடைய ஆரம்பித்தது.

ஆமாம்.. இந்தக் கோணத்தில் இதுவரை சிந்தித்து பார்க்கவே இல்லையே?

கிருபாகரன் தன் மீது சந்தேகப்பட... அந்த சேகரின் கடிதம் மட்டுமல்ல.. தனது டயரியின் வாசகங்களும் காரணம் தானே?

அப்படியானால்?

சுருக்கென நிமிர்ந்தாள் அவள்.

அந்த டயரியில் சேகரைப் பற்றி அவள் எழுதிய உண்மையான வரிகளுக்கு கீழே உள்ள வெத்துப் பக்கங்களில் அவள் எழுதுவது போல் அவளது கையெழுத்துக்களில் யாரோ எழுதி இருந்தார்களே?

அதில்தானே சேகரை அவள் காதலிப்பது போன்ற வாசகங்களும் காணப்பட்டன.

அந்த வரிகளை வைத்துதானே கிருபாகரன் அவளை நம்ப மறுத்து அவள் பொய் சொல்வதாக நினைத்து விட்டான்!

யோசிக்க யோசிக்க.. இந்த விஷயத்தில் சதி போல் சில வேலைகள் நடந்திருப்பதையும் அவள் உணர்ந்தாள்.

அந்த டயரியில் யாரோ வேண்டுமென்றே அப்படி எழுதியிருக்கிறார்கள்.

யாராக இருக்கும்?



யோசித்துப் பார்க்கையில் ஒரு முறை தன் ரூமிற்கு வந்து தன் புத்தக ஷெல்ஃப்பில் அந்த டயரிகளை குடைந்து கொண்டிருந்த யாமினியின் முகம்தான் அவள் ஞாபகத்திற்கு வந்தது.

அன்று.. நிர்மலா கூட அவள் தன் டயரியை படிப்பதைப் பார்த்து கண்டிக்க நினைத்தாள்.

பின்.. சரி படித்து விட்டுப் போகட்டும் என பெரிது பண்ணாமல் போய்விட்டாள்.

அப்படியானால்..

இது அவள் வேலைதானா?

அவள்தான் அதில் சேகர் பற்றி தான் எழுதிய விபரங்களைப் படித்து, அதனுடன் தான் அவனைக் காதலிப்பது போல் வாசகங்களையும் சேர்த்திருக்கிறாளா?

அப்படிப் பார்த்தால் அந்த லெட்டர் கூட?

சேகர் தனது முகவரிக்காக போட்ட லெட்டர் கூட அப்படித்தானா?

இவளது வேலைதானா?

சேகர் அப்போதே அவமானம் தாங்காமல் கல்லூரியை விட்டே ஓடி விட்டான். அதன் பின் அவள் அவனைப் பார்த்து கூட இல்லை. அப்படி இருக்கையில் இவ்வளவு வருடங்களுக்குப் பிறகு அவன் திடீரென காதலி போல் உருகி ஏன் லெட்டர் எழுத வேண்டும்?

அதற்கு அவசியமும் இல்லையே?

சேகரின் கையெழுத்தை அவள் அறிந்திருக்காததால், லெட்டரில் எழுதிய கையெழுத்தும் அவனது தானா என அவளால் தீர்மானிக்கவும் முடியாது...

ஆனால் ஒன்று மட்டும் உறுதி...

கல்லூரியை விட்டு வெளியே சென்ற சேகர், அதன் பின் கல்லூரிப் பக்கம் ஏன் அவன் நடமாடும் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை!

அதனால்.. அந்தக் கடிதம் நிச்சயம் அவன் எழுதியிருக்க வாய்ப்பில்லை.

அப்படியானால்..!

யார்? யாமினிதான் எழுதினாளா?

சரி.. அப்படி யாமினிதான் எழுதினாலும் அவள் எதற்காக எழுத வேண்டும்? எதற்காக அவள் மீது அபாண்டமாய் பழி ஏற்படுத்த வேண்டும்?

யோசிக்க யோசிக்க நிர்மலாவுக்கு குழப்பமாய்த்தான் இருந்தது.

அதேநேரம்.. தான் பிறந்த வீட்டிற்கு செல்கிறேன் என பெட்டியும் கையுமாக வந்து நின்று சொன்னபோது, யாமினி திருதிருவென விழித்தபடியே அன்னபூரணியையும், மல்லிகாவையும் பார்த்தாள். யாமினி மட்டுமல்ல.. அன்ன பூரணியும் மல்லிகாவும் கூட ஒருவித திருட்டுப் பார்வை தானே பார்த்தார்கள்.

ஒரு வார்த்தை ஒரு கேள்வி என்ன ஏது வென்று கேட்கவில்லையே? அன்றொரு நாள் அவர்கள்



[illegible] பேசியது கூட அவளையும் கிருபாவையும் பிரிப்பது பற்றித்தானே? அப்படியானால் இது அவர்கள் வேலைதானா? இதற்கு என்ன காரணமாக இருக்கும்?

அவனும் கிருபாகரனும் சந்தோஷமாக, வாழ்க்கை நடத்துவதை உணர்ந்து ஏன் பொறாமைப்பட வேண்டும்? அவர்களுக்குள் சண்டையை மூட்டி ஏன் பிரிக்க நினைக்க வேண்டும்? எதற்காக? நினைத்து நினைத்து எவ்வித பதிலும் கிடைக்காமல் குழம்பத்தான் செய்தாள் அவள்.



## 20

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொழுதும் வேதனையாய் நரகமாய் கழிந்தது நிர்மலா வுக்கு.

ஒவ்வொரு நொடியும் அவன் நினைவு தான், அவன் முகம்தான்.

கிருபாகரனுடன் பேசியது, சிரித்தது, குறும்பாய் விளையாடி மகிழ்ந்தது என எல்லாம் இறக்கை கட்டிக் கொண்டு அவள் நினைவில் எழும்பியது. அவள் மறக்க நினைத்தவைகளை ஞாபகப்படுத்தி அவஸ்தையில் தள்ளியது.

அந்த நினைவுகளில் தன்னை மீறி குபுக்கென விழப் போகும் நீர்த்துளிகளை அவசரமாய் துடைத்துக் கொண்டாள் அவள்.

தந்தைக்கும், தங்கைக்கும் விஷயம் தெரியக் கூடாது என்பதில் அவள் பிடிவாதமாய் இருந்தாள்.

அதனாலே விட்டு வேலைகளை எல்லாம் இயந்திரம் போல் முடித்து விட்டு பக்கத்து முருகன் கோவிலுக்குச் சென்று விடுவாள்.

கோவிலின் குளத்தங்கரைப் படிக்கட்டில் அப்படியே குளத்து நீரை வெறித்தவாறு அமர்ந்து விடுவாள்.

கண்கள் வெறிக்க வெறிக்க ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்ப்பாள்.

நடந்தவைகளை நினைத்து குமுறுவாள். கிருபாகரனும் அவளும் எப்படியெல்லாம் மகிழ்ச்சியாய் குடும்பம் நடத்தினான்? எவ்வளவு சந்தோஷமாக இருந்தாள்? இனி அவையெல்லாம் கானல் நீராய் அவளுக்கு கிடைக்காமல் தான் போய்விடுமோ? அஞ்சி நினைத்தபடி, மணிக் கணக்காய் வெறித்துக் கிடந்தாள் அவள்.

நிர்மலா அங்கு இப்படி பித்துப் பிடித்தாற் போல் இருக்க.. அங்கு கிருபாகரனின் நிலைமையும் அதேபோல்தான் இருந்தது.

எதையோ பறிகொடுத்தவன் போல் எதிலுமே லயிப்பில் லாதவன் போல் பிரமை பிடித்தாற் போல்தான் இருந்தான்.

நிர்மலா இல்லாத வீட்டில் அவனால் ஒரு நாள் ஒரு நிமிடம் கூட நிம்மதியாய் இருக்க முடியவில்லை. குட்டிப் போட்ட பூனை மாதிரி குறுக்கும் நெடுக்கும் நடந்தான். இரவு முழுவதும் தூக்கமில்லாமல் கண்விழித்துச் சிவந்தான்.

நிர்மலாவை அவனால் நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.



திடீரென கையில் அந்த சேகரின் லெட்டர் வந்தபோது கூட அவன் நிர்மலாவை சந்தேகப்படவில்லை.

ஆனால் அதே யோசனையில் உண்மையை ஆராயும் பொருட்டு அவளது டயரியை எடுத்துப் பார்த்தபோது.. எல்லாம் தெரிந்து விட்டதே!

நிர்மலா தன் கைப்படவே சேகரைப் பற்றி காதலித்தது பற்றியெல்லாம் உருக உருக எழுதியிருக்கிறாளே?

அதைத்தான் கையும் களவுமாய் பிடிப்பது போல் ஆதாரத்துடன் அவன் பிடித்து விட்டானே!

அப்படியானால்?

நிர்மலா அவனை அந்த சேகரைக் காதலித்தது உண்மைதானே?

அதை நம்மிடம் சொல்லாமல் மறைத்ததும் தவறு தானே?

அந்த தவறுக்கு தண்டனையாய் அவளை சில காலம் பிரிந்திருப்பது கூட நியாயம்தானே?

என்னதான் நியாயப்படுத்தினாலும் கிருபாகரன் உள்ளுக்குள், நிர்மலா அப்படியெல்லாம் இல்லை. மாசு மருவற்றவள் என ஒரு குரல் கத்திற்று.

நிர்மலா கல்யாணம் முடிந்த நாளில் இருந்து அவள் மீது காட்டிய அன்பு, பாசம், பரிவு எல்லாம் உண்மைதானே? அதை நடிப்பு என்றோ வேஷம் என்றோ சொல்லி ஒதுக்கி விட முடியாதே?

அவளிடம் மட்டுமா.. மருமகள் என்றும் பாராது கடுகடுவென அவளிடம் சிடுசிடுக்கும் தாயார் அன்னபூரணியிடம் கூட அவள் இன்முகமாய் பாசம் காட்டித்தானே நடமாடினாள்?

அதேபோல் அக்கா யாமினி, சந்தோஷமாய் வெளியே கிளம்பும் போதெல்லாம் கரடியாய் குறுக்கே வந்து அவள் இடைஞ்சல் கொடுத்த போதிலும் அவளிடம் வெறுப்பு பாராட்டாமல் இனிமையாகத்தானே நடந்தாள்?

கல்லூரித் தங்கை மல்லிகாவிற்கும் தனக்கு பாடங்களில் உதவி செய்து அவளுக்கு தேவையானவைகளை உடனுக்குடன் கவனித்து பாசம் காட்டினாள்?

அப்படி அவள் காட்டிய அன்பு, பாசம், எல்லாம் நடிப்பு இல்லையே.. உண்மையான விஷயங்கள்தானே?

அப்படியானால்.. நிர்மலா நம்மிடம் வேஷம் போட்டிருக்க வாய்ப்பில்லையே!

அவள் நம் மீது காட்டிய அன்பு, அந்த அளவு கடந்த பாசம் எல்லாம் உண்மையானவைகள்தானே?

அப்படி அளவு கடந்த அன்பும் பாசமும், வைத்திருப்பவள் நிச்சயம் தவறு செய்யும் அளவுக்கு மோசமானவளாகவும் இருக்க முடியாதே!

ஒருகணம் தான் குற்றம் சொல்லச் சொல்ல துடித்துப் போய் வெறித்த கண்களுடன் அவள் அவனைப் பார்த்த



பார்வை.. இன்னமும் நீங்காமல் அவன் கண்ணுக்குள்ளேயே நிற்கிறதே!

அப்படியானால்..?

நிர்மலா குற்றவாளி இல்லையா?

நாம்தான் அவசரப்பட்டு விட்டோமா? முன்பின் யோசிக்காமல் அவளுக்குத் தண்டனையைக் கொடுத்து விட்டோமா?

ஒருவேளை அப்படி நிர்மலா எவ்வித தவறும் செய்யாத நிரபராதியாய் இருந்தால்.. அவள் மனம் என்ன பாடுபடும்?

எவ்வளவு துயரப்படுவாள்? எப்படிப்பட்ட வேதனையில் புழுவாய்த் துடிப்பாள்?

- நினைக்க நினைக்க கிருபாகரனுக்கு நிர்மலா தவறு செய்திருக்க மாட்டாளோ.. என்கிற நினைப்பு வலுப்பெற ஆரம்பித்தது.

அதேநேரம் நிர்மலா வீட்டை விட்டு அகன்ற பிறகு சிறிதும் கவலை இல்லாமல், துள்ளிக் குதிக்காத கூடுதல் சந்தோஷத்துடன் அலைந்து கொண்டிருந்த அக்கா யாமினியின் மீது அவன் பார்வை படர்ந்தது.

முதல் முறையாக நிர்மலா விஷயத்தை வேறு கோணத்தில் வைத்து சிந்தித்துப் பார்க்க ஆரம்பித்தான் கிருபாகரன்.



# 21

நிர்மலா பித்து பிடித்தவள் போல்தான் இருந்தாள்.

இந்த ஒரு மாதத்தில் என்ன நடக்கிறது. தன்னைச் சுற்றி சுழலும் வேகமான உலகத்தில் என்னென்ன நடந்து கொண்டிருக்கிறது என எது பற்றியும் அவள் அறியவில்லை. எதைப் பற்றியும் அவளுக்கு கவலை இல்லை.

துக்கம், கவலை, விரக்தி என எல்லாம் சேர்ந்து அழுத்தும்போது அடிமேல் அடி வாங்கியது போல் மரத்துப் போன மூளையுடன் ஒன்றும் தோன்றாமல் பிரமை பிடித்த நிலையிலேயே அவள் இருந்தாள்.

காலையில் எழுந்து இயந்திரம் போல் வீட்டு வேலைகளைச் செய்து விட்டு, கோயிலுக்கு கிளம்பி வந்து விடுவாள்.

அவள் வீட்டுப் பக்கத்திலேயே இருக்கும் குன்றிமலை முருகன் கோயில்.

பழங்காலக் கோவில்தான். இராஜ வம்சத்தில் வந்த சோழ மன்னர்களால் கட்டப்பட்டது என கல்வெட்டுகள் கூறுகிறது. பெரிய பெரிய தூண்கள், பல்வேறு சிற்பங்கள் எனக் கூடிய விஸ்தாரமான கோவில். ஆன்மீகமும் பக்தியும் கமழும் அமைதியான இடம்.

அந்தக் கோவிலின் குளத்தங்கரை படிக்கட்டுதான் அவளது இடம்!



அந்தப் படிக்கட்டில் நிறைய பேர் இறைவனின் சந்நிதானத்தில் ஓய்வெடுப்பதுபோல் உட்கார்ந்திருப்பர்.

நிர்மலாவும் படிக்கட்டு ஒன்றில் அமர்ந்து குளத்தை வெறித்தபடி இருப்பாள். மணிக் கணக்கில் நேரம் போவது தெரியாமல்.

தந்தை குருநாதரும் ஆரம்பத்தில் அவள் என்ன செய்கிறாள் என தேடி வந்து பார்த்தவர் அவள் கோயில் படிக்கட்டில் இருப்பதைப் பார்த்ததும் நிம்மதியடைந்து விட்டார்.

அதனாலே அவள் வெகுநேரம் கழித்து வந்தாலும் அவர் எதுவும் கேட்பதில்லை. அப்படியாவது அவள் தன் கவலையை குறைத்துக் கொள்ளட்டும் என விட்டு விட்டார்.

அன்றும் அப்படித்தான் நிர்மலா பதினோரு மணிக்கு தன் வேலைகளை எல்லாம் முடித்து விட்டு விறுவிறுவென குனிந்த தலையுடன் கோவிலுக்குள் நுழைந்தாள். வழக்கமான குளத்தங்கரை படிக்கட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

கண்களை அகல விரித்து குளத்தையே வெறிக்க ஆரம்பித்தாள்.

கொஞ்ச நேரம் சென்றிருக்கும்...

வெறித்தபடி எவ்வித உணர்வும் இல்லாமல் இருந்த அவளுக்கு தோளில் எதுவோ அழுத்துவது போல உணர்ந்து மூளை எச்சரித்தது!

மெல்ல உணர்வுக்கு வந்து பார்த்தவள் அப்படியே திடுக்கிட்டாள்.

அவளது தோளை உரிமையுடன் ஒரு ஆணின் வலுவான கரம் பற்றி அழுத்திக் கொண்டிருந்தது.

யாரது இப்படி? என நிமிர்ந்தவள் மேலும் திடுக்கிட்டுத் தான் போனாள்.

அங்கு.. கிருபாகரன்! அதே வசீகர புன்சிரிப்புடன்!

அவளுக்கு ஒரு கணம் மூச்சு நின்று விடும்போல்தான் இருந்தது.

அங்கு நிற்பவன் கிருபா... கிருபாகரன்தானா?

அவன்.. அவன்தான் அவளைப் பார்த்து அந்த வசீகரச் சிரிப்பை சிரிக்கிறானா...? நடப்பதெல்லாம் நிஜம்.. நிஜம்தானா? இல்லைக் கனவா?''

'இல்லை.. இது உண்மையில்லை... இது பிரமை.. வெறும் கனவாயிருக்கும்.. அவளை வெறுத்து ஒதுக்கி பிரிந்து சென்ற கிருபாகரனாவது வருவதாவது.. இப்படி விரக்தியில் இருப்பவர்களுக்கு மாயத் தோற்றங்கள் தோன்றுமாம்... அப்படித்தான் நமக்கும் தோன்றுகிறது போலும்..' என்றபடி உள்ளுக்குள் நினைத்து அப்படியே கண்களை மூடி மறுபடியும் குனிந்து கொண்டாள்.

ஆனால்... அவள் தோளைப் பிடித்த கரங்கள் படர்ந்து அவள் இரு தோள்களையும் பற்றியபடி பக்கத்திலேயே அவன் உட்கார்ந்ததும் தான் அது கிருபாகரன்தான், நடப்பது உண்மைதான் என்ற உணர்வுக்கு அவள் வந்தாள்.



இதமாய் அவளை தோளோடு அணைத்து அப்படியே தன் பக்கமாய் இழுத்து சாய வைத்து ஆதரவாய் பிடித்துக் கொண்டான் கிருபாகரன்.

இந்த ஒரு மாதங்களும் சரியான உணவு, தூக்கம், இல்லாமையால் அவள் உடம்பே பலஹீனமாய் போய், இப்போது உணர்ச்சிவசப்பட்ட சூழ்நிலையில் உடம்பே நடுங்க ஆரம்பித்தது.

அதை உணர்ந்தவன் போல் கிருபாகரன் ஒரு சேர அவளை தன்னோடு சாய்த்து அழுத்தியும் பிடித்துக் கொண்டான்.

''அடடா... எவ்வளவு பலஹீனமாய் போய் விட்டாய்.. நீ?'' என அவன் வேதனையாய் முணுமுணுப்பது அவள் காதுகளில் விழுந்தது.

என்ன நமக்காக கவலைப்படுகிறானா? என அவள் திடுக்கிடலாய் அவனைப் பார்த்தாள். அவள் விழிகள் மெல்ல விரிந்தது.

அவள் மட்டுமா? அவனும் தான் முகம் எல்லாம் வாடி.. அரைகுறை முள் தாடியுடன் சற்றே மெலிந்தது போன்றான தேகத்துடன்... அவனும் நம் பிரிவால் வாடி விட்டானா? நமக்காக வருந்தியிருக்கிறானா?

நம்ப முடியாமல் மேலும் மேலும் அவள் கண்களை விரிக்க.. அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டவன், ''அப்பாடா.. இப்போதுதான் அந்த மைவிழிப் பார்வை திரும்புகிறது... என் பழைய நிம்மிக் கண்ணு.. எனக்குக்

கிடைக்கப் போகிறாள்..'' என்றான் மெல்லிய உற்சாகக் குரலில்.

அதைக் கேட்டு அவள் தலை கிறுகிறுக்கத்தான் ஆரம்பித்தது. என்ன நிம்மிக் கண்ணுவா? அதற்குள் அவளைக் கொஞ்ச ஆரம்பித்து விட்டானா? என்ன தான் நடக்கிறது இங்கு? உண்மையில் அவன் அவளிடம் சண்டையிட்டு பிரிந்து சென்றானா.. இல்லை அப்படி எதுவுமே நடக்கவில்லையா?

ஒன்றுமே புரியவில்லையே!

அவளிடம் பிரிவு, அவசியம், நாம் கண்டிப்பாக பிரிந்திருக்க வேண்டும்.. என தண்டனை போல் கொடுத்தவன் திடீரென எப்படி மனம் மாறினான்?

என்னதான் நடந்தது?

அவள் நினைப்பதையெல்லாம் புரிந்தவன் போல், ''எல்லாவற்றையும் விபரமாகச் சொல்கிறேன்..'' என்றவன் ''அதற்கு முன் நீ இதை குடிக்க வேண்டும்..'' என தோளில் தொங்கப் போட்டு கொண்டு வந்திருந்ததை காட்டினான்.

சிறிய பிளாஸ்க், அதைத் திறந்து அதன் உள்ளிருந்த பானத்தை அந்தச் சிறிய கப்பில் ஊற்றிக் கொடுத்து குடிக்கச் சொன்னான்.

அவள் புரியாமல் விழிக்க, ''ஒன்றுமில்லை.. பழச்சாறு தான்! பலஹீனமான உன் நிலை அறிந்து நானே வாங்கி பிழிந்து கொண்டு வந்திருக்கிறேன்.. முதலில் இதைக் குடி!'' ஆச்சரியபட்டுப் போனாள்.



அவளால் நம்பவே முடியவில்லை. நமக்காக பழம் எல்லாம் வாங்கி அவனே பிழிந்து கொண்டு வந்திருக்கிறானா? நம் மேல் அவ்வளவு அக்கறையா?

அவளை மேற்கொண்டு யோசிக்க விடாமல் அந்த சின்ன கப்பில் சிறு குழந்தைக்கு புகட்டுவது போல் அந்தப் பழச்சாறை புகட்டினான். காலை சாப்பிடாததாலோ.. இல்லை அவன் கொடுத்ததினாலோ.. மடமடவென குடித்தாள் அவள்.

அவன் சொன்னது போலவே குடித்ததும் சில வினாடிகளில் உடம்பில் பலம் வந்ததுபோல் தெரிந்தது.

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

சொல்ல வேண்டியது அவன்தானே! திடீரென ஞானோதயம் தோன்றி அவளை மன்னித்து விட்டானா? அல்லது செய்த தப்பை உணர்ந்து விட்டானா?

அவள் மனதுள் நினைப்பதை அறிந்து கொண்டவன் போல், ''எல்லாவற்றையும் உணர்ந்து விட்டேன்... என்று சொல்வதை விட எல்லாம் எனக்குத் தெரியும்.. என்று சொல்வது சரியாக இருக்கும்'' என்றான்.

''எல்லாம் தெரியுமா? என்ன தெரியும்?''

''நீ சொல்லியது எல்லாம் உண்மை.. உனக்கும் அந்தக் காதல் ரோமியோ சேகருக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. நீ மாசமருவற்ற பத்தரை மாற்றுத் தங்கம்'' என்று அவன் சொல்வதைக் கேட்டு 'என்னாயிற்று இவனுக்கு.. தங்கம் அது இதுவென உளறுகிறானே' என்றுதான் நினைத்தான்.

''நான் உளறவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். நீ சொன்னவை எல்லாம் நிஜம் என எனக்கு அப்போதே தெரியும். உன்னிடம் சந்தேகம் கொள்வது போல் நடிக்கவும் செய்தேன்.''

''என்ன நடிப்பா..? இது என்ன புதுக் கதை?'' சினமாய்த்தான் கேட்டாள் அவள்.

அவள் பதறியதை மறுபடியும் தோளோடு அணைத்து ஆறுதல் படுத்தியவன், ''எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன். அப்போதுதான் உனக்குப் புரியும்..'' என்றான்.

'அப்படி என்ன புதிதாய் ஒரு கதையைச் சொல்லி விடப் போகிறான்..' என்ற சலிப்பில்தான் அவளும் ''ம்ம்.. சொல்லுங்கள்..'' என்றாள்.

''நிம்மி... முதலில் ஒன்றைத் தெரிந்து கொள். நடந்த எல்லா விஷயங்களுக்கும் மூல காரணம் சாட்சாத் என் அக்கா யாமினிதான். அது எனக்கு முன்பே தெரியும். ஆனால்...''

அவள் டக்கென குறுக்கிட்டாள்.

''எத்தனையோ முறை இதை எடுத்துச் சொல்லி இருக்கேனே... ஆனால் நீங்கள்.. நீங்கள்.. கடைசி வரை நம்பவில்லையே!''

அவன் குனிந்து அவள் முகத்தை நன்கு நோக்கி விட்டு அந்த வசீகரச் சிரிப்பு சிரித்தான்.



''நான் நம்பாமல் இல்லை! நம்பாமல் இருப்பது போல் நடித்தேன். அதைத்தான் நடிப்பு என்று உன்னிடம் சொல்கிறேன்..''

சொல்லிவிட்டு திரும்பவும் பற்கள் முழுவதையும் விரித்து அந்த வசீகரச் சிரிப்பு சிரிக்க... 'நம்மை இவ்வளவு நாளும் மயக்கிய இந்த வசீகரச் சிரிப்பு கூட நடிப்புதானா?' என அவள் நினைத்தாள்.

அவள் கோபத்தை உணர்ந்தவன், அவள் கைகள் இரண்டையும் தாங்கிப் பிடித்துக் கொண்டு ''நான் இப்போது சொல்வதெல்லாம் உண்மையான விஷயங்கள், நீ நம்பித்தான் ஆக வேண்டும்'' என்றான்.

''ம்ம்.. சொல்லுங்கள்..''

சாத்தில்லாமல் சொன்னான் அவன்.

''நிர்மலா, முதலில் நாம் கல்யாணமான புதிதிலே உன்னிடம் தெளிவாய்ச் சொல்லியிருந்தேன், என்னுடைய வீட்டு ஆட்கள் எல்லாம் ஒரு மாதிரியாகத்தான் வில்லாய் நிற்பார்கள். அவர்களை நீ அன்பால் வளைப்பது கஷ்டம் என்று. அப்படி நான் உன்னிடம் சொன்னது யாமினியை மனதில் வைத்துதான். யாமினிக்கு அப்படி ஒரு வயிறெரியும் பொறாமைத்தனம் வந்துவிட்டதும் எனக்குத் தெரியும். அதற்கு காரணம் வறண்ட பாலைவனம் போல் ஆகிவிட்ட அவளது குடும்ப வாழ்க்கைதான்.

கல்யாணமானது முதல் அவளுக்கும் அவளது கணவனுக்கும் பிடிக்காமல் போய் அடிக்கடி சண்டையிட்டார்கள். ஒரு கட்டத்தில் அந்த மாப்பிள்ளை

புண்ணியவான் இவளது தொந்தரவை தாங்க முடியாமல் புது வேலை ஒன்றைத் தேடிக் கொண்டு துபாய்க்கே ஓடிச் சென்று விட்டான்.

இதனால் யாமினிக்கு மற்ற பெண்கள் போல் கணவனது அருகாமையினால் கிடைக்கும் அந்தச் சந்தோஷங்கள், ஜாலியான அனுபவங்கள், மகிழ்ச்சியில் திளைக்க வைக்க புதுமணக் குறும்புகள் என எதுவுமே கிடைக்காமல் போய்விட்டது.

அவளும் அப்படி தன் மணவாழ்வு மகிழ்ச்சியாய் அமையவில்லையே என தினம் தினம் குமைய ஆரம்பித்தாள். அந்த சமயத்தில்தான் எனக்கு கல்யாணமாகி புது மணப்பெண்ணாய் வீட்டில் நீ குடி புகுந்தாய். நம் இனிமையான குதூகலமாய் நாம் தொடங்கிய மண வாழ்க்கையைப் பார்த்ததும் யாமினியால் பொறுக்க முடியவில்லை.

அவளது இயலாமை, எல்லாம் பெரும் கோபமாய் சேர்ந்து பழிவாங்குவது போல் உன் பக்கம் திரும்பியது.

உன்னை அந்தப் பொறாமையில் தன் எதிரியாகவே பார்க்க ஆரம்பித்துவிட்டாள் அவள். போதாக்குறைக்கு அவளுக்கு புத்தி சொல்லி திருத்த வேண்டிய அம்மாவும் அதை உணராமல், தன் மகளின் வாழ்க்கை இப்படி இருக்கிறதே என்ற கவலையில் அதே பொறாமையை தன்னிடம் வரவழைத்துக் கொண்டு உன்மேல் சிடுசிடுத் தார்கள். தேவையில்லாமல் தங்களது அமைதியான சுபாவத்தை மாற்றி உன்னிடம் எரிந்து விழுந்தார்கள்!''



அவள் ஆச்சரியமாய் குறுக்கிட்டாள்.

''என்ன உங்கள் அம்மா அமைதியான சுபாவம் உடையவர்களா?''

''ஆமாம்.. நிரு..! அம்மாவிற்கு அதிர்ந்து பேசாத அமைதியான சுபாவம்தான். ஆனால் நீ மருமகளாய் நுழைந்ததும் தங்களது சுபாவத்தையே மாற்றி யாமினிக்காக உன்னிடம் கடுமையாக நடந்து கொண்டார்கள்!''

''அப்படியா?''

''ம்ம்... உனக்கு நம்பக் கஷ்டமாய்த்தான் இருக்கும். ஆனால் உண்மை அதுதான். அதற்கு காரணம் யாமினி மேல் கொண்ட அதீத தாய்ப்பாசம்தான். தன் செல்ல மகளுக்கு மட்டும் நல்லவிதமான இல்லறம் அமையாமல் போய்விட்டதே என்ற ஆற்றாமைதான்!''

அவள் மறுபடியும் குறுக்கிட்டு ''நான் கூட அந்த அதே தாய்ப்பாசத்திற்காகத்தானே உங்கள் அம்மாவைச் சுற்றினேன். ஆனால் அது கிடைக்கவே இல்லையே'' என்றாள்.

''இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் இனிமேல் கிடைக்கும்..'' என்றான் பூடகமாய் சிரித்து.

''என்ன சொல்கிறீர்கள்?''

''இரு.. முதலில் முழுக் கதையையும் சொல்லி விடுகிறேன். அப்போதுதான் உன்னால் எல்லாவற்றையும் தெளிவாய் புரிந்து கொள்ள முடியும்'' என்றவன் ''ம்ம்.. நான் சொன்னேனே.. யாமினியின் பொறாமை. அதோடு

அம்மாவின் ஆற்றாமையும் சேர்ந்து அவள் பக்கம் போய்விட்டாள். அம்மாதான் போனாள் என்றால் இந்தச் சின்னப் பெண் தங்கை மல்லிகாவிற்கு என்ன வந்தது? அவளும் அக்கா மேல் உள்ள பாசத்தினால் அவளுக்கும் உன் மேல் பொறாமை வந்துவிட்டது. அவளும் அவர்களுடன் சேர்ந்து கொள்ள.. மூவர் கூட்டணி ஒன்று உனக்கெதிராக வீட்டிலேயே உருவாகி விட்டது.."

"ஆமாம்.. ஆமாம்.. மூவரும் கூடி அமர்ந்து என்னவெல்லாமோ வலை பின்னினார்களோ..?"

அவள் நிர்மலா அந்த நிலையிலும் சதி வலை என்று கூறி தன் குடும்பத்தை தாழ்த்நாது பேசுவது கண்டு வியந்தவன் அவனாகவே விஷயத்தை உடைத்தான்.

"வேறு என்ன? நம் இருவரின் சந்தோஷத்தையும் நம்மையும் பிரிக்கிற சதி வலைதான்! தாங்கள் எவ்வளவு கொடுமையாய் இரக்கமில்லாமல் நடக்க முயற்சிக்கிறோம் என்பதைக் கூட உணராமல் அப்படி எல்லாம் விழுந்து விழுந்து பேசியிருக்கிறார்கள்... சிந்தித்திருக்கிறார்கள்.."

அவள் இம்முறை அவனை சங்கடப்படுத்த விரும்பாமல் மௌனமாகவே தலையாட்டினாள்.

அவன் தொடர்ந்தவன், "அப்படி அவர்கள் பேசித் திட்டியதன் உச்சகட்டமாய்த்தான் உன்னுடைய டயரி விஷயம். யாமினி ஏதாவது செய்ய வேண்டும் என நமக்குத் தெரியாமல் நம் ரூமைக் குடைந்திருக்கிறாள். அப்போது உன்னுடைய பழைய டயரி அவள் கண்ணில் பட்டிருக்கிறது. அதை எடுத்து வந்து திருட்டுத்தனமாய்



படித்திருக்கிறாள். அதில் உன்னுடைய கல்லூரி நாட்களில் ரோமியோ போல் காதல் கடிதம் கொடுத்து உன்னைத் தொந்தரவு செய்த சேகர் பற்றி நீ விரிவாய் எழுதியிருக்கே...

அதையே தன் திட்டத்திற்கு சாக்காய் வைத்துக் கொண்டு என்னை ஏற்றியிருக்கிறாள். அந்த டயரியின் வெற்றுப் பக்கத்தில் உன் கையெழுத்தைப் போலவே நீ எழுதுவது போல் சேகர் பற்றி காதல் கவிதை யெல்லாம் எழுதி, நீயும் சேகரை காதலித்தது போல் வாசகங்களையும் எழுதி வைத்திருக்கிறாள். பின் போலியாய் சேகர் எழுதுவது போல் ஒரு லெட்டரை எழுதி என் அலுவலக முகவரிக்கு அனுப்பி தனது விபரீதமான விளையாட்டை ஆரம்பித்திருக்கிறாள்."

அவன் பெரிய கண்டுபிடிப்பு போல் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு போக, "இதுவெல்லாம் எனக்கு முன்பே தெரியும். நான் கண்டுபிடித்ததுதானே?" என்றாள் காரத்தில்லாத குரலில்.

அவன் அவளது தோளைப் பிடித்து மெல்ல குலுக்கியவன், "இதை நீ கண்டுபிடிப்பது சுலபம். ஆனால் நான் கண்டுபிடிப்பது, நம்புவது கஷ்டம் அல்லவா?" என்றான்.

அதற்கு தன்னை வெகுவாய் சந்தேகப்பட்ட சினம் தாக்க "ஆமாம்.. ஆமாம்... ராமாயண சீதையை சந்தேகப்பட்டது போல் என்னை சந்தேகப்பட்ட சாட்சாத் ராமச்சந்திர மூர்த்தி அல்லவா நீங்கள்... உங்களை நம்ப வைப்பது கஷ்டம் தானே?" என்றாள்.

''அதுதான் இல்லை...'' என்றான் அவன். அவள் கோபம் புரிந்து கனிவாய் சிரித்தபடி, ''என்னை நம்ப வைப்பது கடினமான விஷயமே இல்லை. ஏனெனில் நீ என்னிடம் காட்டிய திக்கு முக்காட வைக்கும் அந்த அபரீதமான உண்மையான அன்பே என் உள்ளுக்குள் இருந்து கொண்டு, 'நிம்மி குற்றமற்றவள், அவளை நீ நம்பு..' என கத்திற்று. அந்தக் குரலுக்கு உடனே செவிசாய்த்து உன் மேல் முழு நம்பிக்கையை வைத்துக் கொண்டுதான்... ஏதோ சதி நடந்திருக்கிறது என்ற எண்ணத்தில் தோண்டித் துருவ ஆரம்பித்தேன்... நிஜமான உண்மையை கண்டுபிடித்தேன்.''

''அதான் எப்படி?'' என்றாள் அவள்.

''ரொம்பவும் சுலபம். அதே டயரியில் உன் கல்லூரித் தோழியின் முகவரி ஒன்றையும் அவளது தொலைபேசி நம்பரையும் எழுதி வைத்திருந்தாய். உடனே துரித கதியில் யோசித்து, போனில் அந்த தோழியிடம் விசாரித்தேன். உடனே உண்மை வெளிவந்து விட்டது..''

''அவள்.. அவள்... புவனா! அவள் பெயரைத்தான் எழுதியிருந்தேன்... அவளிடமா விசாரித்தீர்கள்?''

அவன் தலையாட்டினான். அவள் விடவில்லை.

''எப்படி விசாரித்தீர்கள்? எனக்கும் சேகருக்கும் தொடர்பு உண்டா? சேகரை நான் காதலித்தேன் என்றா?''

அவள் எரிச்சல் தொனியில் கேட்க சிரித்தான் அவன்.

''அப்படி பட்டாணியை உடைப்பதுபோல் நேரிடையாய் கேட்டு உன்னை அசிங்கப்படுத்த நான் என்ன முட்டாளா?



புத்திசாலியான உன்னைக் கட்டியிருக்கும் எனக்கும் கொஞ்சம் புத்திசாலித்தனம் வந்திருக்கும் அல்லவா?''

''இந்த ஐஸ் எல்லாம் வேண்டாம். விஷயத்தைச் சொல்லுங்கள்..!'' என்றாள் அவள் கறார் குரலில்.

''சொல்கிறேன்... கண்மணி. ஆனால் இந்தக் கோபத்தை மட்டும் எனக்காக கொஞ்சம் குறைத்துக் கொள்வேன்..'' என்றான் கெஞ்சல் குரலில்.

''முதலில் சொல்லுங்கள் பார்ப்போம்..'' என்றாள் அவளும் சினத்தை விடாமலே..

''அதாவது உன் தோழி புவனாவிடம்.. நான் உங்களது பழைய கல்லூரி மாணவன் ஒருவன் என்றும் என் நண்பன் ஒருவனின் தம்பிதான் அந்த ரோமியோ சேகர் என்றும் புளுகினேன். அந்த ரோமியோ சேகர் இப்போது தன்னுடன் படித்த பழைய கல்லூரி மாணவிகளின் முகவரியை எல்லாம் சேகரித்துக் கொண்டு.. இப்போதும் காதல் கடிதங்கள் கிறுக்கன் போல் அனுப்பி வருவதாகவும் அது என் நண்பனான அவளது அண்ணனை ரொம்பவும் சங்கடப்படுத்துவதாகவும் சொன்னேன். அப்படி அவளுக்கு எதுவும் காதல் கடிதம் வந்ததா? என விசாரிக்கும் சாக்கிலே சேகரைப் பற்றிய முழு விபரங்களைக் கேட்டேன். அவள் ஒளிவு மறைவில்லாமல் மடைதிறந்தாற் போல் எல்லாவற்றையும் சொல்லி விட்டாள். சேகர் உன் பின்னால் காதல் கிறுக்குப் பிடித்து ரோமியோ தொல்லை கொடுத்ததையும் நீ கோபம் கொண்டு செருப்படிகள் கொடுத்தது, பின் அவன் தொடர்ந்து தொந்தரவு தர நீ பிரின்ஸிபால் வரை சென்று கம்ப்ளையண்ட் செய்தது

அதனால் அவர் அவனை கல்லூரியை விட்டே டிஸ்மிஸ் செய்தது... பின் அவனும் டிஸ்மிஸ் செய்த அவமானம் தாங்காமல் ஏதோ வேலை தேடிக் கொண்டு வடநாட்டுப் பக்கம் ஓடிச் சென்றது.. என முழுக் கதையையும் சொல்லி நான் மனதில் வைத்திருந்த என் நிர்மலா மாசு மருவற்ற தங்கம் என்கிற நினைப்பை உறுதிப்படுத்தி விட்டாள்."

அவன் மூச்சு விடாமல் ஒரே இழுப்பில் அவ்வளவையும் சொல்லி முடித்தான்.



## 22

ஆயினும் அவள் கோபம் விலகாமலே மூக்கு நுனி சிவக்க அவனைப் பார்த்தாள்.

"சரி.. உண்மை தெரிந்தாயிற்று. தெரிந்ததும் என்னைத் தேடி வரலாம்தானே? ஏன் வரவில்லை?" என்றாள்.

"தேடி வரத்தான் நினைத்தேன். ஆனால் தப்பு செய்தவர்களை கண்டுபிடிக்க வேண்டும் அவர்களைத் தண்டித்து திருத்த வேண்டும் என்ற கடமைதான் பெரிதாய் உறுத்திற்று..."

"என்னை விடவா..?"

அவள் ஆற்றாமையாய் கேட்க அவளை சாந்தப்படுத்துவது போல் அவள் தலையில் கை வைத்து அந்த நீளமான கூந்தலை வருடி விட்டான்.

"அப்படி இல்லை கண்மணி. உன்னிடம் விஷயத்தை சொல்லி உன் தவிப்பை போக்கி விடலாம். ஆனால்



உன்னை உடனே வீட்டிற்கு அழைத்துப் போகும் சூழ்நிலை ஏற்படவில்லையே... உன்னைத் திரும்பவும் பொறாமை பிடித்த அந்த சதிக் கும்பல் பெண்மணிகளுக்கிடையே விட்டு சிரமப்படுத்த என் மனம் இடம் தரவில்லை. அதற்காக ஒரு பிளானும் செய்தேன்..."

"அது என்ன பிளானோ?" என்றாள் கைகளை கட்டிய கேலிக் குரலில்.

"சொல்கிறேன். முதலில் வீட்டில் சபையைக் கூட்டி யாமினியை குற்றவாளிக் கூண்டில் ஏற்றினேன். ஒரு அக்கா செய்கிற காரியமா இது? என கேள்விகளால் வாங்கு வாங்கென வாங்கினேன்.

தன் குட்டு வெளிப்பட்டு உண்மை தெரிந்து விட்டதைக் கண்டு யாமினி அழுதே விட்டாள். அப்படி அழ.. அழத்தான் அவளுக்கு புத்தியே வந்தது. அவள் அழுகையைப் பார்த்துத்தான் அம்மாவுக்கும், தங்கை மல்லிகாவுக்குமே உரைத்தது. யாமினியுடன் சேர்ந்து எவ்வளவு பெரிய சதிக்கு துணை போயிருக்கிறோம் என்று. மூவரும் தங்கள் தவறை உணர்ந்துவிட்டார்கள். உன்னிடம் மன்னிப்பு கேட்க துடித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"அப்படியானால்.. இதுதான் நீங்கள் சொன்ன பிளானா?"

அவன் குரலில் சற்று சலிப்புடன் கேட்க அவள் கைகளை பிடித்து அழுத்தினான்.

"ஐயோ இதுவல்ல கண்மணி! அதுவேறு. காயத்தை கண்டுபிடித்து விட்டால் போதுமா.. அதற்கு மருந்திட

வேண்டாமா? உன்னை நான் திரும்ப அங்கு அழைத்துச் செல்லும் போது என் வீட்டுச் சூழ்நிலை மாற வேண்டாமா?''

''அதற்கு அப்படி என்ன செய்தீர்கள்? வாஸ்து சாஸ்திரப்படி வீட்டு வாசலை மாற்றி வேறு புறமாய் வைத்து விட்டீர்களா?''

அவள் கிண்டல் குரலில் கேட்டதையும் ரசிக்கவே செய்தான் அவன்.

''அட... உனக்கு நகைச்சுவை நன்றாக வருகிறதே..'' என வியந்து விட்டு, ''கண்மணி, என் வீட்டில் பிரச்சினை யாமினி விஷயம்தான். அவள் தன் கணவனோடு சண்டை போட்டு இனிமையாய் குடும்பம் நடத்தாமல் வாழாவெட்டி போல் பிறந்த வீட்டில் வந்து உட்கார்ந்திருந்ததுதானே பிரச்சினை? அதுதானே ஆற்றாமையாகி யாமினியையும் நம் மீது பொறாமை கொள்ள வைத்தது..? அதனாலேதானே அம்மாவும் 'என் மகளுக்கு இப்படி ஒரு வாழ்க்கை கிடைக்காமல் போயிற்றே.. மருமகளுக்கு வாய்த்திருக் கிறதே..' எனவும் பொறாமை கொண்டார்கள்? அதனாலே.. அந்த விஷயத்தைதான் முதலில் சரி பண்ணினேன்..''

''எப்படி.. எப்படி சரி செய்தீர்கள்?''

''அது.. ரொம்பவும் சுலபம்தான். முதலில் யாமினியின் கணவரை துபாயில் இருந்து வரவழைத்தேன். அவரையும் யாமினியையும் மனம் விட்டு பேசச் செய்தேன். இருவருக்கும் ஏற்பட்ட முரண்பட்ட கருத்துகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளச் செய்தேன். எல்லாவற்றுக்கும் மேலாக அவளது கணவனுக்கு என் மேனேஜரிடம் பேசி என்



அலுவலகத்திலேயே ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்தேன். அவரும் துபாய் வேலையை ராஜினாமா செய்து விட்டு இங்கு வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். பின் என் அம்மாவிடம் பேசி ஒரு வீடு பிடித்துக் கொடுத்து அவர்களை புதுமணத் தம்பதிகள் போல் தனிக்குடித் தனத்திற்கும் ஏற்பாடு செய்து விட்டேன். அவர்கள் திரும்பவும் சந்தோஷமாய் ஒரு வாழ்க்கையைத் தொடங்க ஆரம்பிக்க.. அம்மாவிற்கு ஒரே சந்தோஷம்.. அந்த ஆனந்தத்தில்தான்.. உடனே என் மருமகளை.. அந்த புண்ணியவதியை கூட்டிக் கொண்டு வா.. நான் மன்னிப்பு கேட்க வேண்டும்.. என துடிக்க ஆரம்பித்து விட்டார்கள்..''

அவன் பெரிய கதையை சொல்லிவிட்டு மூச்சு வாங்க நிறுத்தினான். அவள் முகத்திலோ சிவப்பான கோபம் தகதகத்தது.

''ஓஹோ! அம்மா சொன்ன பிறகுதான், அம்மா அனுமதி கொடுத்த பிறகுதான் நீங்கள் அந்த புண்ணியவதியைத் தேடிப் பார்க்க வந்தீர்களாக்கும்?''

அவள் மூக்கு நுனி சிவக்கும் கோபத்தை ரசித்து செல்லமாய் அவள் கன்னங்களை தட்டி, ''ஐயோ கோபம் போதும் கண்மணி! நீ கோபப்பட கோபப்பட உன் சிவப்பான முகம் மேலும் சிவந்து உன் அழகு மேலும் பளிரிடுகிறது. என்னை கிறுகிறுக்க வைக்கிறது..'' என்றவன், ''அம்மா சொன்ன பிறகுதான் வந்தேன் என்று நீ என்னை குற்றம் சொல்ல முடியாது. அதற்கு முன்பே தினம் தினம் இங்கு வந்திருக்கிறேன்..!'' என்றான் அவளை ஆச்சரியப்

படுத்தியவாறு நிஜமாகவே அவளது விழிகள் வியப்பாய் விரிந்தன.

"என்ன தினம் தினம் இங்கு வந்தீர்களா?"

"ம்ம்.. வந்தேன்! வந்து.. நீ இப்படி குளத்தங்கரை படிக்கட்டில் சோகமாய் தண்ணீரை வெறித்தபடி இருக்கும் அழகை தினம் தினம் ரசித்துதான் சென்றேன்.."

"என்.. சோகம்.. உங்களுக்கு ரசனையாய் போய் விட்டதோ..?" மறுபடியும் சிவக்கத்தான் செய்தாள் அவள்.

"அப்படி இல்லை.. செல்லம்.. பட்டென உண்மையை எப்போது வேண்டுமானாலும் சொல்லி உன் மனநிலையை மாற்றி விடலாம் என்கிற தைரியம் தான்! மேலும் நான் சொன்ன மாதிரி வீட்டுச் சூழ்நிலை மாற வேண்டுமே? அதற்காகத்தான் யோசித்து போராடி வீட்டுச் சூழ்நிலையை மாற்றினேன். எல்லாமே நான் நினைத்தபடி நடந்து இப்போது எல்லாம் சரியாகி விட்டது. இனி உன்னை ராஜகுமாரி போல் அங்கு அழைத்துச் செல்ல வேண்டியது தான்.."

சொல்லியபடி அவன் கைகளின் பிடியை இறுக்கி அவளை அணைத்தான். அப்படியே மெல்ல முத்தமிடவும் போனான். விலகிக் கொண்டு சமாதானமடையாதவளாய் சிலிர்ப்புடனே அவனைப் பார்த்தாள்.

"அப்படியானால் இந்த ஒரு மாதமும் உங்கள் குடும்பச் சூழ்நிலையை சரி செய்வதற்காக... அலைந்திருக்கிறீர்கள்...! ஆனால்.. ஆனால்.. என்னைப் பற்றி.. என் வருத்தம்..



சோகம்... பற்றியெல்லாம்... எவ்வித அக்கறையும் இல்லாமல்தானே போயிற்று.."

அவள் சொல்லி முடிப்பதற்குள் "அதுதான் இல்லை, நான் இங்கு கோயில் வந்து உன்னை தினம் தினம் நீ அறியாமல் பார்த்து விட்டுச் சென்றேன் என்று சொன்னேனே... அது யார் சொல்லி என்று யோசித்துப் பார்த்தாயா?" என்றான்.

அப்போதுதான் அவளுக்கும் அது உரைத்தது. அவனுக்கு எப்படி இங்கிருப்பது தெரியும்? யார் சொன்னார்கள்?

"வேறு யார்? உன் தந்தை குருநாதர்தான் சொன்னார்கள். ஏனெனில் அவரை தினம் தினம் சந்தித்து விஷயத்தைச் சொல்லி உன் நலன் பற்றி விசாரித்தது இந்தக் கோமாளிதானே? உன் மேல் அக்கறையில்லாமலா இந்தக் கோமாளி அப்படிச் செய்தான்?"

அவள் நம்ப முடியாத வாய் பிளக்கும் ஆச்சரியம்தான் கொண்டாள்.

"அப்படியா? தந்தை இதுபற்றி ஒன்றுமே என்னிடம் சொல்லவில்லையே?"

"சொல்ல வேண்டாம்... சமயம் வரும்போது நானே சொல்கிறேன்.." என அவரைத் தடுத்ததும் இந்தக் கோமாளிதானே?"

அவன் சொல்லிவிட்டுச் சிரிக்க நிஜமாகவே அவன் தன் மீது அக்கறை கொண்டிருக்கிறான், தனக்காக வருந்தி

உருகியிருக்கிறான் என்பதை உணர்ந்தவள் முதல் முறையாக இறுக்கம் தளர்ந்து இதழ்களில் மெல்லிய சிரிப்பலை ஒன்றை ஓட விட்டாள். அதை எதிர்பார்த்து அதற்காக காத்திருந்தவன் போல், 'அப்பாடா.. புரிந்து கொண்டாளே!' என உள்ளுக்குள் நினைத்தவன் சந்தர்ப்பத்தை விடாமல் அந்த அவளது செவ்விதழ்களில் மென்மையாக முத்தமிடவும் செய்தான்.

சட்டென அவன் செய்த செய்கையால் வெட்கிச் சிவந்தவள், "கொஞ்சம் சிரித்தால் போதுமே.. உடனே வேலையை காட்டி விடுவீர்களே.." என சிணுங்கத்தான் செய்தாள்.

"பின் இருக்காதா..? எவ்வளவு அந்நியோன்யமாய் பின்னிப் பிணைந்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தோம். திடீரென இப்படி பிய்ந்து போட்டாற் போல் ஒரு மாதம் பிரிந்து, ஒன்றும் ஓடாமல் பிரமை பிடித்தாற் போல் ஆகி தவித்துப் போய் விட்டோமே.."

மெய்யான வருந்தும் குரலில் அவன் கூற ஆச்சரியம் தாளவில்லைதான் அவளுக்கு. "நிஜமாகவா?" என்றாள்.

"ம்ம்.. உனக்கு நான் அப்படி சந்தேகப்பட்டு விட்டேன் என்ற வருத்தம்.. சோகம்.. ஆனால் எனக்கு உன்னைப் பிரிந்திருக்கிறேனே... என்ற கவலை! ஆக.. எல்லாம்.. பார்த்தால் ஒன்றுதானே? ஆனாலும் இந்த ஒரு மாதத்தில் நரகத்தில் இருந்தது போல் வேதனையை அனுபவித்து விட்டோம். அப்படித்தானே?"



அவன் சொன்னதும் தலையசைப்புடன் ஒரு கணம் வேதனையில் கழித்த நாட்களை நினைத்துப் பார்த்தவள் அப்படியே அஞ்சியவளாய் அவன் நெஞ்சோடு ஒண்டிக் கொண்டாள்.

"இனி.. நாம் பிரியவே கூடாது.." என அவள் முணுமுணுப்பது அவன் காதுகளில் கேட்டது.

அவளது பயந்து கலங்கிய நிலை, வாடிப் போன முகம் எல்லாவற்றையும் பார்த்த கிருபாகரனுக்கு மனதுள் தாங்காத வேதனைதான்!

ஆனாலும் இவளை ரொம்பத்தான் நோகடித்து விட்டோமோ? என உள்ளுக்குள் மருகினான்.

அதனாலே மெல்லக் குனிந்து அவள் காதுகளில், "என்னை, நடந்தவைகளுக்கு மன்னித்து விடு, கண்மணி, மன்னிப்பாயா?" என்றான் மென்மைக் குரலில்.

அவள் பதிலுக்கு பேசாமல் கண்களை கூடி அசைவற்றுக் கிடந்தாள்.. கொஞ்ச நேரம்.

அவன் திடுக்கிட்டு உலுக்க, விழிகளைத் திறந்து பெருஞ்சிரிப்பு சிரித்தாள்... அவள்.

"இதோ.. இப்போது.. இந்த நிமிடத்திலிருந்து மௌன விரதம் இருக்கப் போகிறேன்!" என்றான் குறும்புப் பார்வையுடன் மை விழிக் கண்களை சிமிட்டியபடி.

அவள் பழைய உற்சாகத்திற்குத் திரும்பி தன்னிடம் விளையாட ஆரம்பித்து விட்டாள் என்பதை நொடியில் புரிந்து கொண்டு அவனும் கலகலப்பானான்.

18326



''மௌன விரதமா? தாராளமாக இரு.. எனக்கு வசதிதான்!'' என்றான்.

''வசதியா?'' என்றபடி நிர்மலா தன் வில்லான புருவங்களை உயர்த்தி அவனை ஆச்சரியமாய்ப் பார்க்க, தனது பழக்கமான வசீகர சிரிப்பை சிரித்தவன், ''நீ மௌனமாக அப்படி இருந்தால் நான் என்ன செய்தாலும் பேசமாட்டாய்தானே? அப்படியானால் இன்னும் நிறைய விளையாட்டுகள் உன்னிடம் விளையாட வேண்டும். உன்னிடம் பரிசோதிக்க வேண்டும். அதை இப்போதே ஆரம்பித்து விடுகிறேன்..'' என்றபடி அவளை வளைத்திருந்த பிடிகளை இறுக்கி அவளது செவ்விதழ்களைத் தேட ஆரம்பித்தான் கிருபாகரன்.

முகம் சிவந்த வெட்கத்துடன், துணிச்சலாய் அவனுக்கு உதவ ஆரம்பித்திருந்தாள் அவனது அன்பு மனைவி நிர்மலா!

